வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வீர மலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 128 பக்கங்கள் : 20



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



07
கர்நாடகா சட்ட மன்றத் தேர்தல் மோடியின் அடுத்த வெற்றிக்கு கட்டியம்



08
அடுத்த ஜனாதிபதி தேர்தலும் ரணில் விக்கிரமசிங்கவும்



09
வளத்த பூமி ஆக்கப்படுகிறது! தமிழர் தாயகம்



10
தமிழ் ஆண்டுகளுக்கு சமஸ்கிருத பெயர் வந்தது எப்படி?

# இலங்கை பொருளாதார மீட்சிக்கு தொடர்ந்தும் ஆதரவு அளிப்போம்!

## அறிவித்தது அமெரிக்கா

கொழும்பு, ஏப்ரல் 16

**இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரப் பணியகத்தின் உதவிச் செயலாளர் டொனால்ட் லூ மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான பணியகத்தின் உதவிச் செயலாளர் ரமின் டோலூயி ஆகியோர் வொஷிங்டனில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினர்.

அனைத்து கடன் வழங்குநர்களுக்கும், நிபந்தனைகளின் அடிப்படையில் இலங்கை கடன் ஒப்பந்தத்தை 19

## நிதியுதவியை அதிகரித்த சர்வதேச நாணய நிதியம்

கொழும்பு, ஏப். 16

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு வழங்கும் நிதியுதவியை சர்வதேச நாணய நிதியம் தற்காலிகமாக அதிகரித்துள்ளது.

இதற்கிணங்கவே இலங்கை மற்றும் உக்ரைன் போன்ற நாடுகளுக்கு கடனுதவியை வழங்கியதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

கடனுதவி வழங்கப்பட்ட இலங்கை உள்ளிட்ட நாடுகள் அதனை முகாமைத்துவம் செய்யும் விதம் குறித்து சர்வதேச நாணய நிதியம் உன்னிப்பாக அவதானிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கு 19

## யாழ்ப்பாண மாவட்டத்தில் 25 வீதமானோருக்கு நீரிழிவு

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாண மாவட்டத்தில் 25 வீத மானவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். நீரிழிவு கழகத்தின் கழகத்தின் தலைவர் இ.மைக்கல் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற பாரம்பரிய உணவு கண்காட்சியில் கலந்துகொண்டபின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார். 19

## நாகபூசணி அம்மன் சிலையை அகற்றப் பொலிஸார் முயற்சி!

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நாகபூசணி அம்மனின் சிலையை அகற்றுவதற்கு பொலிஸார் தீவிரம் காட்டியுள்ளனர்.

நயினாதீவு விகாராதிபதியின் தலையீட்டினாலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தை பிரதிபலிக்கும் வகையில் யாழ்ப்பாணம் 19



## தமிழகத்துக்கு தப்ப முயன்ற இந்தியர் உட்பட 2 பேர் கைது

கொழும்பு, ஏப். 16

இலங்கையில் இருந்து படகு மூலம் தமிழ்நாட்டுக்கு தப்பிச் செல்ல முற்பட்ட இந்தியர் உட்பட்ட இருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து 2020ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த சமயம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணை 19

## கனடாவிலிருந்து அனலைதீவு வந்தவரை கொலை செய்ய முயற்சித்தவர்கள் கைது!

யாழ்ப்பாணம்,ஏப். 16

கனடாவிலிருந்து வருகை தந்து அனலைதீவில் தனது வீட்டில் தங்கியிருந்த வயோதிபரை திட்டமிட்டுக் கொலை செய்ய முயற்சித்தமை மற்றும் பெறுமதியான பொருள்களை கொள்ளையிட்டமை தொடர்பில் முதன்மைச் சந்தேக நபர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கனடாவிலிருந்து பணம் அனுப்பப்பட்டு இந்தியாவிலிருந்து வழங் கப்பட்ட 19

## காணாமல் ஆக்கப்பட்ட தனது மகளை தேடிவந்த மற்றுமொரு தந்தை மரணம்

முல்லைத்தீவு, ஏப். 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகளை தேடிவந்த மற்று மொரு தந்தை மரணமடைந்துள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் இராணுவத்திடம் சரணடைந்த தமது மகளை தேடி வந்த கணபதி கந்தையா நேற்று உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு பல நூற்றுக்கணக்கானவர்கள் தமது 19

## புதிய பயங்கரவாத சட்டமூலத்தை உடனடியாக மீளப் பெறவேண்டும்

### சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் வலியுறுத்தல்

கொழும்பு, ஏப். 16

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மக்களின் ஒன்றுகூடும், கருத்து வெளியிடும் உரிமைகளுக்கும், ஊடக சுதந்திரத்திற்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகவியலாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

1979 ஆம் ஆண்டின் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக கொண்டுவரப்படும் இந்த சட்டமூலமானது, உரிமைகள் 19

## வெளிநாடுகளுக்கு காணிகள் அரசால் வழங்கப்படுவதில்லை!

### கூறுகிறார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், ஏப். 16

அரசாங்கத்தால் வெளிநாடுகளுக்கு காணிகள் வழங்கப்படுவதில்லை எனவும் சரியான முதலீட்டாளர்களை இனம் கண்டு அவர்களின் திட்டங்களுக்கே தேவையான காணிகளையே வழங்குவதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வட மாகாண ஆளுநர் செயலகம், யாழ். மாவட்ட செயலகம் 51 19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**



டான் தொலைக்காட்சியின் சித்திரைப் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சி நேற்று யாழ். முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் பங்கேற்றார். நிப்பொன் பெயிண்ட் யாழ். மாவட்ட முகாமையாளர் றோய்ஸ், ஜோர்ஸ் ஸ்ருவர்ட் றோசர் காட்டர் யாழ். மாவட்ட விற்பனையாளர் எஸ்.விஜிதரன் ஆகியோரும் இதில் பங்கேற்றனர். பெரும் திரளான மக்கள் இதில் கலந்துகொண்டனர்.

# வடக்கில் காணிகளை சீனாவுக்கு வழங்குவதற்கு முற்படுகிறது அரசு!

## ஆவணங்களை சேகரிக்கிறார் சிறிதரன் எம்.பி

யாழ்ப்பாணம், ஏப். 16

இராணுவம் கையகப்படுத்தி தம்வசம் வைத்துள்ள வடக்கில் உள்ள காணிகளுக்கு, மக்கள் பிரதிநிதிகள் சென்று உண்மைகளை அறிவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்த முடியுமா? என பகிரங்க கோரிக்கையை தாம் முன்வைப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சி அலுவலகமான அறிவகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் குறித்த கோரிக்கையை முன்வைத்தார்.

எவ்வாறாயினும், வடக்கில் உள்ள 700 ஏக்கர் காணிகளை சீனாவுக்கு வழங்குவதற்கு முற்படுகின்றமை தொடர்பில், தாம் தொடர்ந்தும் ஆவணங்களை சேகரித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குறிப்பிட்டார்.(அ)

# இலங்கையுடன் கடன் பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளது பாரிஸ் கிளப் !

கொழும்பு, ஏப். 16

இலங்கையுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கதிட்டமிட்டுள் ளதாக பாரிஸ் கிளப் தெரிவித்துள்ளது. இலங்கை தொடர்பான கடன் வழங்குநர்கள் குழு ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள நிலையிலேயே பாரிஸ் கிளப் இதனை தெரிவித்துள்ளது.

ஜப்பான் இந்திய நிதியமைச்சர்கள் இலங்கை ஜனாதிபதி அதன் பிரதிநிதிகளுடன் இணைந்து கடந்த வியாழக்கிழமை இலங்கைக்கு கடன் வழங்கியவர்களின் குழுவை ஏற்படுத்தியுள்ளனர் என பாரிஸ் கிளப் தெரிவித்துள்ளது. கடன் வழங்கியவர்களின் குழுக்கள் எதிர் கால கடன்நிவாரண உடன்படிக்கைக்கான வழிமுறைகள் குறித்த பேச்சுவார்த்தைகளுக்கு தலைமை வகிக்கவுள்ளன.

தற்போதைய உத்வேகத்தை தொடர்ந்து தக்கவைப்பதற்கு விரும்பு வதாக தெரிவித்துள்ள பாரிஸ் கிளப், நியாயமான கடன்சுமை பகிர்வு வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதற்காக அனைத்து பங்குதாரர்களுடனும் ஒருங்கிணைந்து கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்

# சர்வதேச தனியார் கடன் வழங்குநர்கள் இலங்கைக்கு வழங்கியுள்ள ஆலோசனை

கொழும்பு, ஏப். 16

இலங்கையின் சர்வதேச தனியார் கடன்வழங்குநர்கள் குழுவொன்று இலங்கை அரசாங்கத்துக்கு கடன்மறுசீரமைப்பு திட்ட யோசனையொன்றை அனுப்பி வைத்துள்ளது.

12 பில்லியன் பிணைமுறிகள் தொடர்பிலேயே இந்த யோசனையை சர்வதேச தனியார் கடன்வழங்குநர்கள் அனுப்பி வைத்துள்ளனர்

இலங்கை தனது கடனைச் செலுத்த முடியாத நிலையில் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்ட பின்னர் அனுப்பி வைக்கப்பட்டுள்ள முதலாவது யோசனை இது.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாக இது காணப்படுகின்றது

எனினும் கடன்யோசனைகளில் இடம்பெற்றுள்ள விடயங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

அரசாங்க பிரதிநிதிகளுடன் இது தொடர்பில் கருத்து கேட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என தெரிவித்துள்ள ரொய்ட்டர், குறிப்பிட்ட குழுவின் பேச்சாளரும் கருத்து கூறுவதை தவிர்த்துள்ளார் என செய்தி வெளியிட்டுள்ளது.

தனியார் கடன்வழங்குநர்கள் குழுவில் 30 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. (அ)



# தென்கொரியாவில் அனுர

கொழும்பு, ஏப். 16

தேசிய மக்கள் சக்தியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தென்கொரியாவில் உள்ள இலங்கை சமூகத்தினர் மத்தியில் உரையாற்ற உள்ளார்.

இதற்காக தென்கொரியா சென்றுள்ள அவரை, இன்சியான் சர்வதேச விமான நிலையத்தில் இலங்கை குழுவினர் வரவேற்றுள்ளனர். அவர் இன்று தென் கொரியாவில் உள்ள இலங்கை சமூகத்தினர் மத்தியில் உரையாற்ற உள்ளார். (அ)

# கடன் மறுசீரமைப்பில் இலங்கையின் அர்ப்பணிப்பை பாராட்டிய ஐ.எம்.எப்!

கொழும்பு, ஏப். 16

**கடன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் தமது திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கும் இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது.**

நிதி இராஜாங்க அமைச்சர் மற்றும் சர்வதேச நாணய நிதிய பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது கடன் பேச்சுவார்த்தையை விரைவில் முடிப்பதற்கான வழிகள் குறித்தும் ஆலோசித்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

உலக வங்கிக் குழு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வசந்த காலக் கூட்டங்களில்




கலந்துகொள்வதற்காக இலங்கை பிரதிநிதிகள் அமெரிக்காவுக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது உலக வங்கி, சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குரங்குகள் பற்றி ஆராய அமைச்சரவை உப குழு

கொழும்பு, ஏப். 16

இலங்கையில் உள்ள குரங்குகளை, சீனாவில் உள்ள விலங்கியல் பூங்காக்களுக்கு வழங்குவது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்னை அமைச்சரவையில் முன்வைக்கப்படும் என்று விவசாய அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக, அமைச்சரவையால் குழுவொன்று நியமிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் குரங்குகளைச் சீனாவுக்கு வழங்குவது தொடர்பில், ஆராய்வதற்காக வனவளத் துறை, நீதி பெருந்தோட்ட மற்றும் விவசாய அமைச்சுக்களைச் சேர்ந்த 4 அதிகாரிகள் கொண்ட குழு அரசால் நியமிக்கப்பட்டிருந்தது.

சீனாவின் அதிகாரிகள் சிலரினால் இலங்கையில் உள்ள குரங்குகளைச் சீனாவில் உள்ள விலங்கியல பூங்காக்களுக்கு வழங்குமாறு விவசாய அமைச்சுக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக, இலங்கையில் உள்ள ஒரு லட்சம் குரங்குளைச் சீனாவுக்கு அனுப்பும் எதிர்பார்ப்புடன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக விவசாய அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், இந்த விடயம் தொடர்பாக சமூகத்தில் பாரிய கருத்தாடல் ஏற்பட்டுள்ளதுடன், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் முறைமை தொடர்பில், அரசு இதுவரையில் உரியவாறு தெளிவுபடுத்தவில்லை என்று சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இலங்கை குரங்குளைச் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யவதற்கு முன்னர், குரங்குகள் குறித்து முறையான கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் சூழலியலாளர்கள் வலியுறுத்துகின்றனர். (அ)

# இன்புளுவன்சா வைரஸ் தொற்று பரவும் அபாயம்!

கொழும்பு, ஏப். 16

இன்புளுவன்சா வைரஸ் தொற்று பரவும் அபாயம் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே கர்ப்பிணிப் பெண்கள், நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் கைக்குழந்தைகள் இன்புளுவன்சா தொற்று குறித்த தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இன்புளுவன்சா தொற்றுக்கு இருமல், காய்ச்சல், சளி போன்ற அறிகுறிகள் காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே பொதுமக்களின் நடமாட்டம் அதிகளவு உள்ள பகுதிகளில், தேவையான சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் பண்டிகைக் காலங்களில் சன நெரிசலான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை உடன் மீளப்பெறுக!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஏப். 16

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அரசு உடனடியாக மீளப்பெற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

குறித்த சட்டமூலத்தை சட்டமா அதிபர் தயாரிக்கவில்லை எனவும், தனக்கு விசுவாசமான சட்டத்தரணிகள் ஊடாகவே அரசு இதனை செய்துள்ளது எனவும் கிரியல்ல சுட்டிக்காட்டினார்.

அத்துடன், மேற்படி சட்டமூலத்துக்கு எதிராக தமது அணி நீதிமன்றம் செல்லும் எனவும் கிரியல்ல குறிப்பிட்டார். (அ)

# இளைஞனை அடித்துக் கொன்ற 2 சிறார்கள் உட்பட 6பேர் கைது!

கொழும்பு, ஏப். 16

வெலிகம கலகந்த கொலந்தந்த பிரதேசத்தில் வீதியில் சென்று கொண்டிருந்த இளைஞர் ஒருவரை அடித்துக் கொன்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு சிறார்கள் உட்பட ஆறு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதாக வெலிகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்களும் அடங்குவதாக வெலிகம தலைமையக பொலிஸார் கூறினர்.

நண்பர்களுடன் வீதியில் சென்று கொண்டிருந்தபோது பெண் ஒருவருடன் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதைடுத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

இது தொடர்பில் பெண் கொடுத்த தகவலின் பேரில் அவரது இரண்டு மகன்கள் உட்பட சிலர் வந்து அந்த இளைஞனை கொடூரமாக தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் அவரது இரண்டு மகன்களும் அடங்குவதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# கிணற்றில் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 16

கஹட்டகஸ்திகிலிய நெகுடவெவ பிரதேசத்தில் பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பிரதேசத்தை சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு அருகில் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது பாதுகாப்பற்ற கிணற்றில் தண்ணீர் நிறைந்திருந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் கஹட்டகஸ்திகிலிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# விபத்தில் ஒருவர் பலி!



அக்கரைப்பற்று,ஏப். 16

புதுவருடத்திற்கு மறுநாளான நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியானார்.

நிந்தவூர் பிரதான வீதியில் மாட்டுப்பழை எனுமிடத்தில் மோட்டார் சைக்கிளுடன் மாட்டு வண்டி மோதியதில்

மோட்டார் சைக்கிளில் வந்த சாய்ந்தமருது 12, வேப்பயடி வீதி சேர்ந்த ஜமால்டீன் ஹாறூன் என்பவர் ஸ்தலத்தில் பலியானார்.

நிந்தவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(அ)

# கட்சித் தலைவர்கள் கூட்டம் 20ஆம் திகதி

கொழும்பு, ஏப். 16

பாரளுமன்றத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்குக் கூட்டம் நடைபெறவுள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தாண்டுக்குப் பிறகு நடைபெறும் முதல் கட்சித் தலைவர்கள் கூட்டம் இதுவாகும்.

இதன்படி, இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புத்தாண்டின் பின்னர் முதலாவது பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ)

# இலங்கையின் புதிய பயங்கரவாத சட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி ஆட்சேபிக்கவேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை

கொழும்பு, ஏப். 16

இலங்கையின் உத்தேச பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது எதிர்ப்பை வெளியிடவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை மக்களின் உரிமைகளை முக்கியமானவையாக பெறுமதிமிக்கவையாக பைடன் நிர்வாகம் கருதினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிர்வாகத்திற்கு பைடன் நிர்வாகம் தெளிவான செய்தியை தெரிவிக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மனித உரிமையின் அனைத்து அளவுகோல்களிலும் தோல்வியடைந்துள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆசியாவுக்கான பரப்புரை இயக்குநர் கரோலின் நாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் உரிமைகள் மிக முக்கியமானவை என பைடன் நிர்வாகம் கருதினால் இந்தச் சட்டம் முற்றிலும் மாற்றியமைக்கப்படவேண்டும் அல்லது முற்றாக கைவிடப்படவேண்டும் என்ற செய்தியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கு தெரிவிக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நான்கு தசாப்தகாலமாக சிறுபான்மையினத்தவர்களையும் தன்னை விமர்சிப்பவர்களையும் தடுத்துவைத்து சித்திரவதை செய்வதற்காக இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து பைடன் நிர்வாகமும் அமெரிக்க காங்கிரஸும் அமைதியாகயிருந்தால் அது மாற்றுநிலைப்பாடுடையவர்களை ஒடுக்குமுறைக்குள்ளாக்கும் இலங்கை அரசாங்கத்தின் திறனை மேலும் வலுப்படுத்தும் எனத் தெரிவித்துள்ள கரோலின் நாஸ், பல தசாப்த காலங்களாக மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக குரல் கொடுத்துவந்துள்ள இலங்கையின் சிவில் சமூகத்தை அவமதிக்கும் செயலே உத்தேச சட்டம் எனவும் குறிப்பிட்டார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அல்லது மோசமான சட்டத்தை மாற்றியமைக்கும் நோக்குடன் அதிகாரிகள் உத்தேச சட்டத்தை கொண்டுவரவில்லை.

மாறாக அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை இலக்கு வைத்து அவர்களை மௌனமாக்கும் நோக்கத்துடனேயே இந்த உத்தேச சட்டம் கொண்டுவரப்படுகின்றது எனவும் என சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசியாவிற்கான பரப்புரை இயக்குநர் கரோலின் நாஸ் தெரிவித்துள்ளார். (அ)




## யாழ்ப்பாணத்தில் இப்தார்

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். கிளிநொச்சி மக்கள் பணிமனையின் எற்பாட்டில் இன நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான எடுத்துக்காட்டாக இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். ஸலாமியா அரபுக் கல்லூரியில், யாழ். கிளிநொச்சி மக்கள் பணிமனை தலைவர் மௌலவி ஏச்.சுபியான் தலைமையில் நடைபெற்றது

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு இப்தார் நோன்பு திறப்பினை ஆரம்பித்து வைத்தார்.

இதில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்அம்பலவாணன் சிவபாலசுந்தரன், சர்வமததலைவர்கள், பள்ளிவாசல் மௌலவிமார்கள், இஸ்லாமியர்கள் மற்றும் சமூகநலன் விரும்பிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

## மதுபான விற்பனை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 16

நாட்டில் மதுபான விற்பனை அதிகரித்துள்ளதாக மதுவரித் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

விலை அதிகரிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளினால் மதுபான விற்பனை 40 வீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

எனினும் தமிழ் சிங்களப் புத்தாண்டு காலத்தில் மதுபான விற்பனை 20 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் மதுபான விற்பனை உயர்வடைந்துள்ளது.

மதுபான வகைகளின் விலையைக் குறைப்பதற்கு வரியில் மாற்றத்தை கொண்டு வருமாறு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

மதுபான விற்பனை வீழ்ச்சியடைந்த காரணத்தினால் பெருந்தொகை எத்தனோல் களஞ்சியப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## தென்னைப் பயிர்ச் செய்கையில் வெண்ணிற ஈ தாக்கம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 16

இலங்கையில் தென்னை பயிர்ச்செய்கையில் சுமார் ஒரு வருட காலமாக பரவி வரும் வெண்ணிற ஈ தாக்கத்தின் காரணமாக தெங்கு உற்பத்தி திறன் குறைந்துள்ளதாக தெங்கு செய்கையாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த வெண்ணிற ஈ தாக்கம் யாழ்ப்பாணம், களுத்துறை, கம்பஹா, திருகோணமலை, கொழும்பு, குருநாகல், கண்டி, காலி,மாத்தறை, ரத்தினபுரி, புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெங்கு ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைப் பகுதிகளில் தொடர்ந்தும் வெண்ணிற ஈ பரவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகமொன்றுக்கு தெங்கு உற்பத்தியாளர்கள் கருத்து தெரிவிக்கையில்-

கடந்த தை மாதம் அளவில் இந்த வெண்ணிற ஈ பரவலை அவதானித்து, தென்னை அபிவிருத்தி திணைக்களத்துக்கு அறிவித்தோம்.

அவர்கள் வருகை தந்து இதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இருப்பினும் அவை பலனளிக்கவில்லை.

இது இவ்வாறே தொடர்ந்தால் பெரும் அழிவை ஏற்படுத்தும் அதேவேளை தேங்காய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவும்- என்றனர்.

இதுவரை நான்கு வகையான வெண்ணிற ஈ தாக்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தெங்கு ஆராய்ச்சி நிலைய பிரதிப் பணிப்பாளர் நயனி ஆராச்சிகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

இலங்கையில் விசேடமாக டெங்கு பயிர் செய்கையில் இந்த நோய் தாக்கம் பதிவாகியுள்ளது.

இலங்கையில் முதல் தடவையாக இந்த வெண்ணிற ஈ தாக்கம் பதிவாகியுள்ளது.

ஆனால் ஏனைய நாடுகளில் இந்த தாக்கம் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளது.

2016 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்த தாக்கம் இந்தியாவில் பதிவானது.மேலும் இதனை ரூகோஷ் வெண்ணிற ஈ தாக்கம் என்று கூற முடியும்.

இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் அழகான நல்ல பயன் தரக்கூடிய தென்னை மரங்களை சமூக ஊடகங்களில் பதிவிடுவார்கள்.

அதனை பார்த்து உள்நாட்டு தெங்கு உற்பத்தியாளர்கள் அந்த தென்னை மரங்களை நாட்டுக்கு படகு மூலம் கொண்டு வருவார்கள்.

ஆனால் அவர்கள் நினைத்தது போன்று நம் நாட்டில் அந்த தென்னை மரங்கள் வளராது.

எனவே இவ்வாறு கொண்டு வரப்படும் தென்னை மரங்கள் ஊடாகவும் இந்த நோய் தாக்கம் ஏற்படும் - என்றார். (அ)

## பண்டிகை காலத்தின் பின்பும் நாட்டில் பாதுகாப்பு தீவிரம்!

கொழும்பு, ஏப். 16

பண்டிகைக் காலத்தின் பின்னரும், பொதுமக்களின் பாதுகாப்பு கருதி, காவல்துறையினரும், புலனாய்வுப் பிரிவினரும், தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுவதாக பொலிஸ் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்காக, பொலிஸார் தொடர்ந்தும் சோதனையில் ஈடுபடுவதாக அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் தமது சொந்த வாகனங்களில் பயணிக்கும் போது, அவதானத்துடன் செல்லவேண்டும்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவதைத் தவிர்ப்பதுடன், வீதி விதிமுறைகளை உரியவாறு பின்பற்ற வேண்டும் என்றும் பொலிஸ் பேச்சாளர் அறிவுறுத்தியுள்ளார். (அ)

## இலங்கை மிகவும் சாதகமான பாதையை நோக்கி நகர்கிறது

### ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

கொழும்பு, ஏப். 16

இலங்கை, மிகவும் சாதகமான பாதையை நோக்கி நகர்வதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் கூறினார்.

சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் உட்பட சில நாடுகளின் பங்கேற்புடன் வாஷிங்டனில் கடந்த தினம் இடம்பெற்ற மாநாடு மிகவும் முக்கியமானதாகும்.

இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் நிதி அமைச்சர்களுக்கு இடையே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில், எதிர்காலத்தில் பிரச்சினை ஏற்படாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள தாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய குறிப்பிட்டார். (அ)

## 90 மில்லியன் ரூபா திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை!

கொழும்பு, ஏப். 16

90 மில்லியன் ரூபாய் மதிப்பிலான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 19ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்பட உள்ளதென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்.

364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 25 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், ஏல விற்பனை ஊடாக வழங்கப்பட உள்ளதென மத்திய வங்கி அறிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
16.04.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சஜித் - ரணில் கூட்டு?

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஜக்கிய தேசியக் கட்சியையும் சஜித் பிரேமதாச தலைமையிலான ஜக்கிய மக்கள் சக்தியையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஈடுபட்டுவரும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இவ்வாறான முயற்சிகள் இடம்பெறுவது ஆச்சரியமானதல்ல – எனினும், சஜித் பிரேமதாச இது தொடர்பில் சாதாகமான பதிலை இதுவரையில் வழங்கவில்லை. அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து பல்வேறு நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் ஒன்றுதான் ரணிலையும் சஜித்தையும் ஒன்றிணைப்பதற்கான முயற்சி. இது ஒரு புறம் என்றால், மறுபுறும் பசில் ராஜபக்சவின் தலைமையில் பிறிதொரு நகர்வு முன்னெடுக்கப்படுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவை, ஒரு வேட்பாளராக நிறுத்துவதற்கான முயற்சிகள் பல்வேறு வழிகளிலும் முன்னெடுக்கப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஜக்கிய தேசியக் கட்சி மோசமான பின்னடைவு நிலையில் இருக்கின்றது. அதனை தூக்கி நிறுத்துவது இலகுவான காரியமாகவும் தெரியவில்லை – தவிர, அவ்வாறான முயற்சியில் ரணில் விக்கிரமசிங்கவும் ஈடுபடுவதாக தெரியவில்லை. ஒரு வேளை அவருக்கு விசுவாசமானவர்கள் ஈடுபடலாம். ஆனால் பொருளாதார நெருக்கடி ரணில் விக்கிரமசிங்கவை பலமானதொரு நபராக மாற்றியிருக்கின்றது. இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கான ஜனவசியத்தை ஓரளவு பெற்றிருக்கின்றார். இந்த ஜனவசியம் என்பது ரணிலின் மீதானது என்பதல்ல – மாறாக, குறிப்பிட்ட சூழலானது, அவ்வாறானதொரு அபிப்பிராயத்த ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏனெனில் ரணில் என்னதான் ஆற்றலுள்ளவராக இருந்தாலும் கூட, அவரை பெரும்பான்மையான சாதாரண சிங்கள மக்கள் தங்களுக்குரியவராக நோக்கவில்லை. இதன் காரணமாகத்தான் கடந்த காலங்களில் ஆற்றலுள்ள ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைய நேரிட்டது. 2005இல், தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவுடன் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பை ரணில் பெற்றிருந்தாலும் கூட, விடுதலைப் புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பால், அது கைகூடவில்லை. ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிட்டால் தோல்வியடைந்துவிடுவார் என்னுமடிப்படையில்தான், 2009இற்கு பின்னர் இடம்பெற்ற எந்தவொரு ஜனாதிபதி தேர்தலிலும் அவர் வேட்பாளராக நிறுத்தப்படவில்லை. அவர் மற்றவர்களுக்கே ஆதரவு வழங்கினார். ஏனெனில் 2009இற்கு பின்னரான யுத்த வெற்றிவாத ஜனவசியத்தை உடைக்கக் கூடிய ஒரு சிங்களத் தலைவராக ரணில் இருக்கவில்லை. அரசியல் அனுபவத்தில் ஆற்றலில், சர்வேதேச தொடர்புகளில் ரணிலுக்கு அருகில் கூட நிற்க முடியாதவர்கள்தான் ஜனாதிபதி கதிரையை அலங்கரித்தனர்.

ஆனால் பொருளாதார நெருக்கடி யுத்த வெற்றிவாத நாயகர்களை பெருமளவில் வீழ்ச்சியுறச் செய்திருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில் யுத்த வெற்றிவாதம் அடுத்த தேர்தலில் பிரதான விடயமாக இருக்காது, இருக்கவும் முடியாது. இப்போது பொருளாதார வெற்றிக்கு உரிமை கோரும் அரசியலே தென்பகுதியை ஆட்கொள்ளப் போகின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், ரணில் விக்கிரமசிங்க தனித்துத் தெரிகின்றார். நெருக்கடியான காலகட்டமொன்றை தாண்டுவதற்கு தலைமை தாங்கியவர் என்னும் வகையில் அவர் தொடர்ந்தும் கதிரையில் இருக்க வேண்டிய தேவையிருப்பதாக சிங்களவர்களும் சிந்திக்கும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

நிலைமைகள் இவ்வாறிருந்த போதும், ரணிலின் வெற்றிக்கு பலமானதொரு அரசியல் கூட்டணி தேவை. ஏனெனில் பாராளுமன்றத்தை கட்டுப்படுத்த முடியாத ஜனாதிபதியாக இருப்பதன் மூலம் ரணிலால் விடயங்களை முன்னெடுக்க முடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், ரணிலை சுற்றி பலமானதொரு சுவரை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்திருக்கின்றன. ஆனால் சஜித் பிரேமதாச இதற்கு இணங்குவாரா என்பதில் சந்தேகங்கள் உண்டு. அவருக்கும் ஜனாதிபதி கனவுண்டு. இந்த நிலையில் ரணிலுடன் கூட்டுச் சேர்ந்தால் தனது நகர்வுகள் சீர்குலைந்துவிடுமென்று அவர் எண்ணக் கூடும். ஆனால் சஜித்தால் தனித்து ஜனாதிபதியாகுவதற்கான வாய்புக்கள் இருப்பதாகவும் தெரியவில்லை. எவ்வாறாயினும் அடுத்த ஜனாதிபதி தேர்தலை முன்வைத்தே அனைத்தும் நகரப் போகின்றது.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பாராளுமன்றில் தோற்கடியுங்கள்

## கிளிநொச்சி பிரஜைகள் குழு கோரிக்கை

*கிளிநொச்சி, ஏப். 16*

கட்சி பேதங்களை கடந்து பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பாராளுமன்றில் தோற்கடியுங்கள் என கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

கிளிநொச்சியில் பிரஜைகள் குழுவினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அந்த அமைப்பின் செயலாளர் சிங்கராசா ஜீவநாயகம் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டிலே கொண்டுவரப்படவிருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பாக பாராளுமன்றத்திலே சில நாட்களில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெறுவதற்கான நடவடிக்கையில் நீதி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்த சட்டம் தொடர்பாக பல்வேறுபட்ட எதிர்ப்புகள் காணப்படுவதுடன், அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் உள்ளன.

அதேவேளை, குறித்த சட்டத்தை கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் அரசாங்கமும் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது - என்றார். (அ)

# மானிப்பாயில் கத்திவெட்டு மூவர் வைத்தியசாலையில்!

*யாழ்ப்பாணம், ஏப். 16*

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாவல்கட்டுப் பகுதியில் இடம்பெற்ற தகராறில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதே பகுதியைச் சேர்ந்த இரண்டு குழுக்களுக்குள் நேற்று முன்தினம் இடம்பெற்ற தகராறின்போது கத்திவெட்டுக்கு உள்ளாகி மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபர்கள் இருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஆற்றில் விழுந்தவர் மாயம்

*கொழும்பு, ஏப். 16*

களனி ஆற்றில் ஒருவர் தவறி விழுந்து காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யட்டியந்தோட்டை அத்தனகெலய பிரதேசத்தில் நேற்று முன் தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. 42 வயதுடைய நபரே காணாமற்போயுள்ளார்.

களனி பிரதேசத்திற்கு புனித யாத்திரை சென்று திரும்பும் வேளையில், அத்தனகெலய பிரதேசத்தில் களனி ஆற்றுக்கு அருகில் உணவு அருந்திவிட்டு கைகளை கழுவச் சென்றபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. அவர் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்லார்.

கடற்படையினருடன் இணைந்து குறித்த நபரைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)

# ஆணொருவரின் சடலம் மீட்பு!

*திருமலை, ஏப். 16*

திருகோணமலை அலஸ் தோட்டம் கடற்கரையில் ஆணொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து நேற்றுமுன் தினம் மாலை அவர் சென்ற நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சாம்பல்தீவு-சல்லி வாட்டு இலக்கம் 02 ஐ சேர்ந்த ராஜலிங்கம் பிரபாகரன் (38 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அலஸ்தோட்டம் கடற்கரையில் மீக்கப்பட்ட சடலத்தை திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதவான் பார்வையிட்டதையடுத்து பிரேத பரிசோதனைக்காக திருவண்ணாமலை பொது வைத்தியசாலைக்கு சடலத்தை கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு கட்டளையிட்டார்.

# கொழும்புக்கு திரும்ப விசேட போக்குவரத்து

*கொழும்பு, ஏப். 16*


புத்தாண்டை முன்னிட்டு, சொந்த ஊர்களுக்கு சென்ற பொதுமக்கள், மீண்டும் கொழும்புக்கு திரும்புவதற்கு நேற்று முதல் சில விசேட ரயில் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி வரை குறித்த விசேட ரயில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பிரதி போக்குவரத்து அதிகாரி என்.ஜே. இந்திபொலகே தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முதல் விசேட பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாக இலங்கை போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு செல்வதற்காகவும், பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாக இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -74

# உறவு பற்றியது உணர்வு

கணபதி சர்வானந்தா

"உறவு என்பதைப் பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?" என ஒரு பேராசிரியரிடம் கேட்டேன். "அது பேணப்பட வேண்டியதொன்று," என அவர் பதிலளித்தார். அதே கேள்வியை அனுபவக் கல்வியில் ஊறித்திளைத்த ஒரு கிராமத்தவரிடம் கேட்டேன். "அது பிறப்பின் தொடரால் மற்றும் பிணைப்பின் தொடரால் வருவதொன்று. அதன் ஆழத்தை உணர்வதால்தான் அறிய முடியும்" என அவர் பதிலளித்தார்.இன்னொருவர் அது பற்றிப் பேசும்போது அது ஆன்மிகத்துக்குட்பட்டதொன்று என்று சொன்னார்.

விரிந்து கொண்டு செல்கின்ற உறவினர் வட்டத்தில் உறவு பற்றிய அனுபவம் அனைத்தும் ஒரே விதமானதாக அமைவதில்லை. ஆளுக்காள் வேறுபடுபவையாகவே காணப்படுகிறது. அவற்றுள் சில மற்றவைகளை விட முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. சில உறவுகள் மிகவும் நெருக்கமாக இருக்கின்றன. வேறு சில மேம்போக்கானவையாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

முன்பு, தனிமனிதர்களை ஒரு சமூகமாக ஒழுங்குபடுத்துவதற்கு அடிப்படையானதொன்றாக இவ் உறவுமுறை கருதப்பட்டது. அதுவும் ஆரம்பத்தில் இது உயிரியல் மரபுவழியால் தீர்மானிக்கப்பட்டதாகவே காணப்பட்டது.

நவீன யுகத்தில், பேணப்படாது காணப்படும் இவ் உறவு முறையில் தோன்றியுள்ள பின்னடைவுகளுக்குள் சிக்கிய ஒருவர் பின்வருமாறு தனது கருத்தை முன்வைத்தார்.

எமது சமூகத்திலே உறவுகளுக்கிடையே காலாகாலாமாக் கடைப்பிடித்து வந்த ஒழுக்க முறை தற்போது இல்லை.முன்னர் குடும்பக் கொண்டாட்டங்களில் உறவுகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது. விரிசல் காணப்பட்ட உறவுகளுக்கிடையே ஏனைய குடும்ப உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையை ஏற்படுத்தினர். தொடக்கத்தில் இருந்ததைப்போன்றே சமூகக் கடமைகளை முன்னின்று செய்யப் பணிக்கப்பட்டனர். அத்தருணத்தில் பிரிந்தவர்கள் ஒன்று கூடினர்.மிகவும் அக்கறையோடு பேணிப்பாதுகாத்து வளர்த்தெடுத்த அந்த உறவில் ஒரு உயிரோட்டம் இருந்தது. தற்போது அந்த நிலை முற்றாக இல்லாது போய்விட்டது. சமூகத்தில் உறவுகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதில்லை, முன்புபோல் உறவுகளுக்கு மதிப்பளிக்கப்படுவதுமில்லை. ஒருவரைத் தமது உறவு என்று சொல்வதற்கு அளவுகோலாக அவர்கள் வேறு சில தகமைகளைப் பார்க்கத் தொடங்கிவிட்டனர். அதனால் அறுபதுகளில் காணப்பட்டதைபோன்று உறவுகளுக்கிடையே உள்ள நெருக்கமும் ஆத்மார்த்தமான தொடர்பும் தற்போது இல்லை என்றாகிவிட்டது என ஆதங்கப்பட்டார் அவர்.

முன்பு குறிப்பிட்டதைப்போல உறவு பேணிப்பாதுகாப்பதால் மட்டும் நிலைத்துவிடப் போவதில்லை. அது பிறப்பு மற்றும் பிணைப்பால் மட்டும் தொடர்ந்துவிடப் போவதுமில்லை. முன்பின் அறியாது திருமணத்தின் பின்னர் தம்பதிகளாகிவிட்ட இருவருக்கிடையே ஏற்படுவதைப் போன்று ஈர்ப்பு அலைகளால் வரும் உறவு மற்றவையாவற்றிலும் விட அதிக பயனுள்ளதாகச் சொல்வப்படுகிறது.

மகாபாரதத்தில் வரும் கர்ணன் அர்ச்சுனனோடு நட்பெனும் ஈர்ப்பால் கவரப்பட்டவன். அவர்களுக்கிடையே காணப்பட்ட நட்பு என்ற உறவு ஒரு உயிரியல் மரபால் வந்ததல்ல. திருமண பந்தத்தால் வந்தது மல்ல. அர்ச்சுனன் காட்டிய அன்பினால் ஏற்பட்டதொன்று. அந்த நட்புக்காகவே தன்னுயிரை ஈய்ந்தவன் கர்ணன்.அப்படிப்பட்ட உறவு பின்னர் பெரும் இலக்கியமாகவே உருவெடுத்ததெனில் அதன் மகிமையைத்தான் என்னென்றுரைக்க முடியும்!

தற்போதைய நிலைமையை எடுத்துக் கொண்டால், பல குடும்ப உறவுகளில் விரிசல் மற்றும் இடைவெளி ஏற்பட யுத்தமும் ஒரு காரணம் எனலாம். யுத்தச் சூழ்நிலையே பெரும்பாலும் உறவின்போக்கை மாற்றி அமைத்ததெனலாம். அப்போது ஏற்பட்ட இடம்பெயர்வுகளாலும் உறவு முறையில் விரிசல்கள் ஏற்பட்டன. தமது பாதுகாப்புக்காகச் சென்ற இடங்களில் அவர்கள் புதிய உறவுகளைத் தோற்றுவித்துக் கொண்டனர். பின்னர் அவ் உறவுகளை நிரந்தரமாக்கியும் கொண்டனர்.

யுத்த மௌனிக்குப் பின்னர் சின்னாபின்னப் படுத்தப்பட்ட எமது சமூகத்தில் கர்ணன் துரியோதனன் உறவைப் போன்று பல உறவுகள் உருவெடுத்திருக்கின்றன. பிள்ளைகளைப் புலம்பெயர் தேசத்துக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு அயல்வீட்டுக்காரர்களை உறவாகக் கருதி வாழ்ந்து வருபவர்கள் பலர் உண்டு.

எனக்குத் தெரிந்த தம்பதிகள் இருவர், ஒரு வீட்டில் தனியாகவே வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பிள்ளைகள் அனைவரும் புலம்பெயர்ந்து சென்றுவிட்டனர். அவர்கள் இருவரும் நோயாளிகள். நெருங்கிய உறவென்று சொல்வதற்கு அவர்களுக்கு அண்மையில் யாரும் இல்லை. அயலவர்களைக் கூப்பிட்டால் அவ்வப்போது வந்து உதவி செய்துவிட்டுப் போவார்கள். அவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவென ஒரு முச்சக்கர வண்டிச் சாரதியை அவர்களின் அயலவர்கள் ஒழுங்குபடுத்தியிருந்தனர். பல வருடங்களாக அவன்தான் அவர்களைப் பராமரித்து வருகிறான். அவர்களுக்கு நெருங்கிய உறவினனாகவும் அவன் இருக்கிறான். எனவே அவர்கள் விடயத்தில் உறவு என்ற சொல்லுக்குரிய அர்த்தத்தை நாம் வேறாகத்தான் பார்க்க முடிகிறது.

இப்படிப் பல குடும்பங்களில் நீண்ட கால நட்புகள் உறவுகளாக மாற்றம் பெற்றிருக்கின்றன. தேவைகளின் அடிப்படையிலேயும் உறவுகளை உருவாக்கிக் கொண்டனர். இப்படிப் பல விடயங்கள் எம்மிடையே சர்வ சாதாரணமாகிப் போய்விட்டது.

பல மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற உறவுகள் தமக்கு அண்மையில் இருப்பதாக உணர வைபரும், வட்ஸ்அப்பும் உதவுகின்றன. ஒரு மாயைதான் அது என்று நம்ப மறுப்பவர்கள் பலர் மணிக்கணக்காக அதனூடாகப் பேசிவிட்டுத் தம்மைச் சாந்தப்படுத்திக் கொள்கின்றனர். அதனை ஒரு நவீன உறவு பேணும் முறை என்றும் சொல்லலாம். அவ் உறவைப் பேணும் முறையால் தொடர்ந்து பணத்தைப் பெறலாமேயொழிய வேறு பயன் ஒன்றும் இருக்காது.

தொட்டு உறவாடும் உறவு முறையில் மட்டுமே ஒருவித ஆத்மார்த்தமான உணர்விருக்கும்.அந்த உணர்வலைகள் ஏற்படுத்தும் சக்திமிக்க அதிர்வுகள் இதயங்களை மேன்மேலும் வசப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது. இதை ஒரு ஆன்மிகத்துக்குட்பட்ட செயற்பாடாகவும் கருத இடமுண்டு. •

# இந்தவார ராசிபலன் 16.04.2023 - 22.04.2023

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : ஏகாதசி

ஏப்ரல் 16 ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 3

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

வழக்குகளில் எதிர்பாராத திருப்பங்கள் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் வேலைச் சுமை குறையும். வியாபாரிகளுக்கு நன்மதிப்பு கூடும். விவசாயிகள் தங்கள் விளைச்சலுக்கு நல்ல விலை கிடைக்கப் பெறுவார்கள். அரசியல்வாதிகள் மேலிடத்தை அனுசரித்துச் செல்வார்கள். கலைத்துறையினருக்கு ஆர்வமும், உற்சாகமும் கூடும். பெண்களுக்கு குடும்பத்தினருடன் இணக்கமான சூழல் நிலவும். பெறுவார்கள்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ஆடம்பரப் பொருள்களை வாங்குவீர்கள். உபரி வருமானம் கிடைக்க முயற்சி எடுப்பீர்கள். தோற்றத்தில் பொலிவும் நடையில் மிடுக்கும் உண்டாகும். தொழிலில் பணியாளர்கள் உதவி செய்வார்கள். உத்தியோகஸ்தர்கள் நினைவாற்றலைக் கற்றுகொள்வார்கள். வியாபாரிகள் வங்கிக் கடன் பெறுவார்கள். விவசாயிகள் பொறுப்பறிந்து செயல்படுவார்கள். அரசியல்வாதிகள் பயணங்களால் எதிர்பார்த்த ஆதரவைப் பெறுவார்கள். பெண்கள் பொறுமையுடன் செயல்படுவார்கள்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

உயர் பொறுப்பிலிருப்பவர்கள் ஆதரவாக இருப்பார்கள். ஆன்மிகப் பணிகளில் ஆர்வம் அதிகரிக்கும். நெருக்கடியான சூழலில் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். மனதில் புதிய தெளிவு பிறக்கும்.

உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவார்கள். வியாபாரிகள் கூட்டாளிகளுடன் புதிய முதலீடுகளைச் செய்வார்கள். விவசாயிகள் அந்தஸ்து உயரும். அரசியல்வாதிகள் தொண்டர்கள் ஆதரவோடு இலக்குகளை எட்டுவீர்கள்.கலைத்துறையினர் புதிய ஒப்பந்தங்களைப் பெறுவார்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

தொழிலில் கடுமையாக உழைத்துச் செயலாற்றுவீர்கள். எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். பெயர், புகழ் உயரும். அந்தஸதான பதவிகளைப் பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் வேலைகளைத் துரிதமாக முடித்து விடுவார்கள். விவசாயிகளுக்கு கால்நடைகளால் லாபம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதில் முக்கிய பங்கு இருக்கும். கலைத்துறையினர் ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு உண்டு.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

புதிய முயற்சிகளில் துணிவாக ஈடுபடுவீர்கள். உறவினர்களிடமிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். சிந்தித்துச் செயல்படுவீர்கள். பொருளாதார மேம்பாட்டை அடைவீர்கள். உத்தியோகஸ்தர்கள் ஊதிய உயர்வையும் போனஸயும் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு நல்ல யோகம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு மேலிடத்தின் பாராட்டுகள் கிடைக்கும். கலைத்துறையினர் பொறுப்புகளைக் கவனமாகக் கையாளுவார்கள்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பேச்சாற்றலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உங்கள் கருத்துகளை பிறர் கவனத்துடன் பரீசிலிப்பார்கள். செலவுகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்களின் மனக் குழப்பங்கள் நீங்கும். வியாபாரிகள் கடும் போட்டிகளைச் சமாளிப்பார்கள். விவசாயிகளுக்கு கொள்முதல் லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் மேலிடத்தின் நம்பிக்கையைப் பெறுவார்கள். கலைத்துறையினர் புதிய ஒப்பந்தம் பெறுவார்கள். பெண்கள் உறவினர்களிடையே கனிவாகப் பேசுவீர்கள்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

குடும்பத்தில் சுப காரியங்களை நடத்துவீர்கள். சமுதாயத்தில் உயர்ந்தோருடன் இணக்கமாகப் பழகுவீர்கள். பெற்றோரும் ஆதரவாக இருப்பார்கள். மருத்துவச் செலவுகள் இருக்காது. உத்தியோகஸ்தர்களுக்கு பிறர் உதவிகளைச் செய்வார்கள். வியாபாரிகளுக்கு கூட்டாளிகள் ஒத்துழைப்பாக இருப்பார்கள். விவசாயிகள் கால்நடைகளுக்கு செலவு செய்ய நேரிடும். அரசியல்வாதிகளின் புகழ் மேலோங்கும். கலைத்துறையினரின் பொருளாதார நிலை சற்று உயரும். அணிகலன்களை வாங்கும் வாய்ப்பு உண்டாகும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

பிரச்னைகளைச் சமாளிப்பதில் வல்லவர்களாகத் திகழ்வீர்கள். பயணங்களில் ஓரிரு எண்ணங்கள் ஈடேறும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பிரச்னைகளைச் சாதுர்யமாகச் சமாளிப்பார்கள விவசாயிகள் புதிய குத்தகை முயற்சிகளில் இறங்கு வார்கள். அரசியல்வாதிகள் மாற்றுக்கட்சி விவகாரங்களில் ஒதுங்கி இருப்பார்கள். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும். பெண்களுக்கு குடும்பத்தினர் மீது பாசம் அதிகரிக்கும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தொழிலில் புதிய நுட்பங்களைக் கற்பீர்கள். புத்திசாலித்தனம் கூடும். பேச்சில் கண்ணியம் காப்பீர்கள். யோகா, பிராணாயாமத்தைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பிய பணியிட மாற்றம் கிடைக்கும். வியாபாரிகள் புதிய பொருள்களை விற்பனை செய்வார்கள். விவசாயிகள் லாபம் காண்பீர்கள். அரசியல்வாதிகளின் திடீர் முயற்சிகள் சாதகமாக அமையும். கலைத்துறையினர் பாராட்டுகளைப் பெறுவார்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

செயல்களை நேர்வழியில் செய்து முடிப்பீர்கள். சொத்துகளில் பாகப்பிரிவினை உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். விவசாயிகள் பழைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவீர்கள். அரசியல்வாதிகள் விவேகத்துடன் நடந்துகொள் வார்கள். பெண்கள் குடும்பத்தில் விட்டுக் கொடுத்து நடப்பீர்கள். மாணவர்கள் அதிக மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

தொழிலை திறமையுடன் நல்ல முறையில் நடத்துவீர்கள். உறவினர்கள், நண்பர்களிடம் விட்டுக் கொடுத்து நடந்துகொள்வீர்கள். புதிய சந்தர்ப்பங்களை நழுவவிடமாட்டீர்கள். உத்தியோகஸ்தர்கள் வேலைகளை உடனுக்குடன் செய்து முடித்துவிடுவார்கள். வியாபாரிகளுக்கு பிரச்னைகள் தீரும். விவசாயிகள் சில அனுகூலங்களைப் பெறுவார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளும் நண்பர்களாவார்கள். கலைத்துறையினர் சக கலைஞர்களுக்கு முடிந்தவரை உதவி செய்வார்கள்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

உழைப்பு வீண் போகாது. வாராக்கடன் வசூலாகும். புதிய சேமிப்புத் திட்டங்களில் சேர்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படுவார்கள். வியாபாரிகள் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கத் தாமதமாகும். விவசாயிகள் போட்டிகளுக்கு ஏற்ப விலையை நிர்ணயித்து பலனடைவார்கள். அரசியல்வாதிகள் மேலிடத்தில் தகவல் அனுப்பும்போது கவனமாக இருப்பார்கள். கலைத்துறையினர் பிறரை அனுசரித்துச் செல்வார்கள். பெண்கள் குழந்தைகளால் மகிழ்ச்சியைப் பெறுவார்கள். மாணவர்கள் ஆசிரியர்களின் துணையுடன் மனதில் தெளிவு பிறக்கும்.



சென்னை மடல்
-பகவான் சிங்-

# கர்நாடகா சட்ட மன்றத் தேர்தல் மோடியின் அடுத்த வெற்றிக்கு கட்டியம் சொல்லுமா?

புத்தாண்டு வாழ்த்துகள்! இந்தியாவில் அடுத்த ஆண்டு மே மாதம் நடக்கவுள்ள மக்களவைத் தேர்தலுக்காக, அரசியல் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் தயாராகி வருவது குறித்து உங்களுடன் உரையாடுவேன் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கூறியிருந்தேன். 28 மாநிலங்களிலும் எட்டு யூனியன் பிரதேசங்களிலுமாக, 100 கோடிக்கும் அதிகமான மக்கள் வாக்களிக்கும் இது, உலகின் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. 36 ஜனநாயக நாடுகளின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையை இந்தியா, தன்னகத்தே கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளவு பெரிய அளவிலான தேர்தலுக்குத் தயாராவதற்கு 12 மாதங்கள் என்பது மிகக் குறுகிய காலமே. எனவே, பல தலைவர்கள் வாக்காளர்களைக் கவரவும் எதிரி கட்சிகளை உடைக்கவும் தங்களது தேர்தல் யுக்திகளை மிக வேகமாக வகுத்து வருகிறார்கள்.

பிரதமர் நரேந்திர மோடியும் அவரது பாஜகவும் தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ளும் வாய்ப்புகளே பிரகாசமாக இருப்பதாக நான் கடந்த வார ஞாயிறு கட்டுரையிலேயே குறிப்பிட்டிருந்தேன். இதற்கு ஒரு முக்கிய காரணம், எதிர் தரப்பு பிளவுபட்டுக் கிடப்பதேயாகும். பாஜக - மோடி என்ற மாபெரும் சக்தியை எதிர்கொள்ள, சில தலைவர்கள் ஒருங்கிணைந்த முன்னணியை உருவாக்க முயற்சிகள் எடுத்துவந்தாலும், தனிப்பட்ட பேராசைகள், இந்த முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன. உதாரணத்துக்கு, நான் இந்தக் கட்டுரையை வெள்ளியன்று எழுத முனைந்த நேரத்தில்கூட, மற்றொரு தென் மாநிலமான

ஆந்திர பிரதேசத்தின் முதல்வர் சந்திரசேகர ராவ், தனது பாரதீய ராஷ்ட்ரீய சமிதி கட்சிதான் தேர்தலில் மத்தியில் ஆட்சி அமைக்கும் என்று பிரகடனப் படுத்திக்கொண்டதாக ஒரு செய்தி வெளியானது. இந்திய அரசியலில் இதுபோன்ற பிக்மிக்களும் லில்லிபுட்களும் தங்களது கனவுகளை இப்படி உரக்கக் கூறத் தொடங்கியுள்ளனர். வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் இதில் தவறும் இல்லை. படிப்பறிவில்லாத பெரும்பான்மையினரின் வாக்குகளைக் காசும் சாராயமும் கொடுத்துப் பெற்றுவிடுவது, சாமர்த்தியமான அரசியல் தலைவர்களுக்கு மிகவும் எளிதாகிவிடுகிறது.

மோடிக்கு எதிரான கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து, 2024 மே மாதத் தேர்தலில், எதிரணியை உருவாக்க, சந்திரசேகர ராவ் போன்ற தலைவர்கள் மாநிலம் தழுவிய சுற்றுப்பயணங்களை நடத்தி வருகின்றனர். ஆனால், நான் முன்பே குறிப்பிட்டது போல், பிரதமர் பதவிமீது குறிவைத்துள்ள தலைவர்கள் பலர் இருப்பதால், இவர்களிடையே ஒற்றுமை ஏற்படுவது சாத்தியமா என்ற கேள்வி தேங்கியுள்ளது. அதே நேரத்தில், மோடிக்கு எதிரான கூட்டணியில் ஒற்றுமை ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நோக்கில் எதிரி கட்சிகளை உடைப்பதில் பாஜகவும் முனைந்துள்ளது. எனது அண்டை மாநில மான கர்நாடகத்தில் மே 10 அன்று சட்டமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு, 13ஆம் திகதி முடிவுகள் வெளி யாகி, பாஜக முதல்வர் பொம்மையின் தலைவிதி நிர்ண யிக்கப்படவுள்ள நிலையில், அங்கு சில சுவாரஸ்யமான நிகழ்வுகள் அரங்கேறி வருவதாக நண்பர்கள் கூறு கிறார்கள். தென்னிந்திய மாநிலங்களில் பாஜக ஆளும் ஒரே

## தெற்கின் கள நிலவரங்களில் பா. ஜ. க. தெளிவில்லை!

மாநிலமாக கர்நாடகா மட்டுமே திகழ்வதால், இங்கு வெற்றி பெறுவது அக்கட்சிக்கு மிகவும் முக்கியமானது. இங்கு தோல்வியடைந்தால் அது, அடுத்த ஆண்டு இதே நேரத்தில் நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் பாஜகவின் பிரச்சாரத்தைப் பாதிக்க நேரிடும்.

கர்நாடகா நண்பர்கள் கூறுகையில், மோடியின் பாஜக, சோனியா - ராகுல் - பிரியங்காவின் காங்கிரஸ் கட்சியைக் காட்டிலும் பின்தங்கியிருப்பதாகவே தெரிவிக்கின்றனர். பாஜகவை காங்கிரஸ் தோற்கடித்தால், முதல்வராகும் போட்டியில் முன்னணியில் இருப்பவர், காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும் சோனியா குடும்ப விசுவாசியும் கர்நாடகாவைச் சேர்ந்த தலித் தலைவருமான மல்லிகார்ஜுன கர்கே ஆவார். பாஜகவின் செல்வாக்குமிக்க தலைவராகவும் சில காலம் முன்னர் துணை முதல்வராகவும் இருந்த லக்ஷ்மன் சவாதி, இம்முறை தனக்கு வேட்பாளர் வாய்ப்பு தரப்படாததால், வெள்ளிக்கிழமையன்று கட்சி தாவி, காங்கிரஸில் சேர்ந்துவிட்டார். கர்நாடக பாஜக ஜாம்பவானான எடியூரப்பாவை ஒப்பிடுகையில் சவாதியின் செல்வாக்கு ஒன்றுமில்லை எனலாம். எடியூரப்பாவே தனக்கு 80 வயதாகிவிட்டதால், சிறப்பாகச் செயல்பட முடியாது என்ற அடிப்படையில், கட்சி தன்னை ஒதுக்கிவிட்டதாக வருத்தமடைந்திருக்கிறார். அவரது கோட்டையான ஷிகாரிபுரா தொகுதியை அவரது மகன் விஜயேந்திராவுக்கு ஒதுக்கி, அவரைச் சமாதானப்படுத்த பாஜக முயன்றுள்ளது. கர்நாடகத்தின் பாஜக அதிகார மையமாக இருந்த எடியூரப்பா, சில காலமாக முக்கியத்துவம் இழந்து தனது முதல்வர் பதவியை, கட்சியின் செல்வாக்கு

மிக்க தலைவர்களின் ஆதரவைப் பெற்ற பொம்



சோனியா காந்தி, ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கர்கே

## பா. ஜ. க. தோற்றால் காங்கிரஸின் தலைவர் ராகுல்?

மைக்கு விட்டுத்தர நிர்ப்பந்திக்கப்பட்டார். தற்போது பதவியில் இருக்கும் 43 சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இந்தத் தேர்தலில் வாய்ப்பளிக்க மறுத்திருக்கிறது பாஜக. அடுத்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் வரவிருக்கும் தருணத்தில், இப்படிச் சில சாகசங்களை பாஜக ஏன் செய்திருக்கிறது என்பது புரியாத புதிராகவே உள்ளது.

காங்கிரஸ் வெற்றி பெற்றால், கர்கேவின் விசுவாசத்திற்கு ஒரு சன்மானமாகவும், ஒரு வளமான தென் மாநிலத்தில் ஆட்சியைப் பிடிப்பதால் அடுத்த ஆண்டு தேர்தலுக்கான ஆதாரம் (பணம் மற்றும் தொண்டர் படை) கிடைக்கும் என்ற எண்ணத்திலும் சோனியா குடும்பம், கர்நாடக முதல்வராக மல்லிகார்ஜுன கர்கேவை அமர்த்தும் பட்சத்தில், அவரின் கட்சித் தலைவர் பதவியில் ராகுல் மீண்டும் அமரலாம். இதன் மூலம், ராகுல் காந்தி, மோடி எதிர்ப்பு அணியின் பிரதமர் வேட்பாளராகவும்அறிவிக்கப்படுவார் என்பதை இயல்பாக எதிர் பார்க்கலாம். கர்நாடகத்தில் காவிக் கட்சியை அகற்றிய பெருமைக்குப் பரிசாக இது இருக்கும். இது, எதிர்க் கட்சிகள் தரப்பை வலுப்படுத்தி, மோடிக்கும் அவரது கட்சிக்கும் சிக்கலை உருவாக்கக்கூடும். கர்நாடகாவில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றால், தனது நண்பர் ராகுல் காந்தியைப் போலவே, தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலி னும் மகிழ்ச்சியடைவார். காரணம், சில ஆண்டுகளுக்கு முன்னர், காங்கிரஸ் கட்சியேகூட நினைத்திராத அளவில், ராகுலை எதிர்க்கட்சிக் கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக முன்மொழிந்தவர் அவரே.

அந்த நிகழ்வு 2018 டிசம்பர் 16ஆம் தேதியன்று சென்னையில் திமுகவால் நடத்தப்பட்ட ஒரு பேரணியில் நிகழ்ந்தது. சோனியா, ராகுல் உட்பட, மோடிக்கு எதிரான அரசியல் தலைவர்களின் மத்தியில் ஸ்டாலின் அந்த முடிசூட்டுப் பிரகடனத்தைச் செய்திருந்தார், தன் தந்தையார் கலைஞரின் சிலை திறப்பு விழாவிற்குப் பிறகு. தாயும் மகனும் தங்களின் தமிழ் நண்பரின் உற்சாகத்தைக் கண்டு சந்தோஷத்தில் மூழ்கிப்போக, மேடையில் இருந்த மற்றவர்கள் பிரமித்துப் போயினர். அதில் சிலர், ஸ்டாலின் வீணாக அவசரப்பட்டுவிட்டாரோ என்று சங்கடமடைந்தனர்.

கர்நாடகாவில் காங்கிரஸ் வெற்றி, ஸ்டாலினுக்குத் தனது 2018 உரையை மோடியின் எதிரிகளான தன் நண்பர்களுக்கு மீண்டும் நினைவு படுத்த வாய்ப்பினைத் தரும். தனது தந்தையார் கலைஞரின் சிலை திறப்பு விழாவாக திமுகவால் அறிவிக்கப்பட்டு, பின்னர், மோடி எதிர்ப்பு ராகுல் புகழ் விழாவாக உருவெடுத்த அந்தப் பேரணியில், ஸ்டாலின் கூறிய இன்னும் சில விஷயங்களை இங்கு நினைவுகூர்வது சுவாரஸ்யமாக இருக்கும். “நாம் ஒரு புதிய இந்தியாவை உருவாக்குவோம். நாட்டிற்கு நல்ல நிர்வாகத்தை வழங்க, ராகுல் காந்தியை வரவேற்போம். கலைஞரின் மகனாக, தமிழகத்திலிருந்து ராகுல் காந்தியை வேட்பாளராக நான் முன்மொழிகிறேன். மோடி ஒரு பாசிஸ்ட், மீண்டும் அவர் 2019இல் பிரதமராவதைத் தடுப்பது, ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிக் கூட்டணியின் பொறுப்பு” என்று முழங்கிய அவர், இந்தியாவை 15 ஆண்டுகள் பின்னுக்கு இட்டுச் சென்றுவிட்டதாக மோடிமீது குற்றம் சாட்டினார். மேலும், இன்னும் ஓர் ஐந்தாண்டு ஆட்சிக் காலம் வழங்கப்பட்டால் 50 ஆண்டுகள் பின்னோக்கிக் கூட்டிச் சென்றுவிடுவார் என்றும் அச்சம் தெரிவித்தார். ஆனால், 2019இல் மோடி இரண்டாவது ஆட்சிக் காலத்தைத் தேர்தலில் வென்றெடுத்தார். அடுத்த மாதம் கர்நாடகத் தேர்தலில் ராகுலின் காங்கிரஸ் வெற்றி பெற்றால், 2024 மக்களவைத் தேர்தல் பிரசாரத்தில் ஸ்டாலின் இதே முழக்கங்களையும், இதற்கு மேலும், மீண்டும் கர்ஜிப்பார்.

தமிழகத்தில் அண்மைக்காலமாக காவிப் பிரபலங் கள் சிலருக்கு ஏற்பட்டுவரும் பின்னடைவு குறித்து ஸ்டாலின் மகிழ்ச்சியில் இருக்கிறார். அப்படி ஒரு நிகழ்வை அரங்கேற்றிய ஒருவர் மாநில ஆளுநர் ரவி - மோடிக்கும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கும் நெருக்கமானவர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, சட்டமன்றத்தில் கொண்டுவரும் மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கவேண்டிய அரசியல் சாசனப் பொறுப்பு கொண்ட ஆளுநர், ஆன்லைன் ரம்மியைத் தடை செய்யும் சட்ட மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கா மல் பல காலம் இழுத்தடித்து வந்த நிலையில், ஏப்ரல் 10ஆம் திகதியன்று, ஆளுநருக்கு எதிராக மசோதா ஒப்புதலைத் தாமதப்படுத்துவதாக

அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சில மணி நேரங்களுக்குப் பிறகு, திடீரென்று ஒப்புதல் அளித்தார். முதல்முறை திருப்பியனுப்பப்பட்ட இந்த மசோதாவுக்கு, இரண்டாவது முறையும் சட்ட சபை தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியும், அவர் அதை முடக்கிப் போட்டிருந்தார். அரசியல் சாசனத்தின்படி, ஒப்புதல் அளிப்பதைத் தவிர ஆளுநருக்கு வேறு வழியில்லை. ஆனால், ஓய்வுபெற்ற ஐபிஎஸ் அதிகாரியும், உளவுத் துறை அதிகாரியாகப் பல பொறுப்புகளை வகித்துள்ளவருமான ரவி, பிடிவாதமாக இருந்தார். ஏப்ரல் 10 அன்று காலை ஸ்டாலினால் சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட அவருக்கு எதிரான தீர்மானத்தை அடுத்து ஒப்புதல் அளித்தார். ஒப்புதல் அளிக்க, ஏற்கெனவே முடிவெடுத்திருந்ததாகவும், இந்தத் தீர்மானத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றும் ஆளுநர் தரப்பில் கூறப்பட்டது.

ஆனால், ஆளுநரின் மனமாற்றத்திற்குத் தாங்களே காரணம் என்று ஸ்டாலின் தரப்பு கொண்டாடுவதிலும் நியாயம் இருக்கிறது. ஆன்லைன் ரம்மி மூலம் பெரும் தொகையை இழந்த பலர் தற்கொலை செய்துகொள்ளும் போக்கு தொடர்வதை அடுத்து, இந்தத் தடைச் சட்டம் கொண்டுவர மாநில அரசு முடிவெடுத்தது என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

பாஜகவுக்கு ஏற்பட்ட மற்றொரு பின்னடைவு, நிலக்கரிச் சுரங்கம் தொடர்பானது. நாடு முழுவதிலும் நிலக்கரிச் சுரங்கத்திற்கு ஏலம் அறிவிக்கப்பட்ட இடங்களில், தமிழகத்தின் மூன்று இடங்களுமே விலக்கிக்கொள்ளப்படுவதாக மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் ப்ரஹலாத் ஜோஷி அறிவித்தார். இது ‘தமிழக மக்களின் நலனுக்காக’ எடுக்கப்பட்ட முடிவு என்று அவர் கூறினார். தமிழகத்தின் நெற்களஞ்சியமான காவிரி டெல்டா பகுதியில் இந்த மூன்று இடங்களும் அமைந்திருந்ததை அடுத்து, அப்பகுதி விவசாயிகளைக் காப்பாற்றும் நோக்கில், இவற்றுக்கு விலக்களிக்குமாறு கோர, தமிழ்நாடு மாநில பாஜக தலைவர் அண்ணாமலை அவசரமாக பெங்களூரு விரைந்து

சென்றதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக, அவர் ஏப்ரல் 8ஆம் தேதி கூறினார்.

அதே நாளில்தான், பிரதமர் மோடியும் பெரும் உள்கட்டமைப்புத் திட்டங்களை மக்களுக்கு அர்ப்பணிக்க சென்னை வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. டில்லியில் அமர்ந்திருக்கும் பாஜக மேலிடம், தெற்கில் உள்ள கள நிலவரம் குறித்து இங்குள்ள சரியான தலைவர்களிடம் சரியான கருத்தைக் கேட்பதில்லை என்பது தெளிவாக வெளிப்படுகிறது.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# அடுத்த ஜனாதிபதி தேர்தலும் ரணில் விக்கிரமசிங்கவும்



வீரகத்தி தனபாலசிங்கம்

உள்ளூராட்சி தேர்தல்கள் குறித்து இப்போது பேச்சுக்கள் அடங்கிக்கொண்டு போகின்றன. தேர்தல் ஆணைக்குழுவையும் தேர்தல் கண்காணிப்புடன் சம்பந்தப்பட்ட சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிரண்டையும் தவிர வேறு எவரும் அதைப் பற்றி பெரிதாக பேசுவதாக இல்லை.

தங்களால் இயன்றவரை வீதிப் போராட்டங்களையும் செய்து நீதித்துறையையும் நாடிய எதிர்க் கட்சிகளினால் அந்த தேர்தல்கள் விடயத்தில் அரசாங்கத்தை அதன் நிலைப்பாட்டில் இருந்து கொஞ்சமேனும் அசைக்கமுடியாமல் போய்விட்டது. உயர்நீதி மன்றத்தின் உத்தரவையும் மீறி தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு இடையூறு விழைவிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்களை வீதிக்கு இறக்க முடியும் என்ற எதிரணியின் குறிப்பாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்புக்கள் பலிக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

எதுவிதத்திலும் குறைந்த பட்சம் இந்த வருட இறுதிக்குள் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்பதில் மிகுந்த உறுதியாக இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அரசாங்கமும் ஜனாதிபதி தேர்தல் குறித்து தீவிரமாக பேச ஆரம்பித்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

நீதித்துறை தலையீடு செய்யாத பட்சத்தில் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான சாத்தியம் இல்லை என்று சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் நடவடிக்கை (பவ்ரல்) அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கடந்த வாரம் கூறியது கவனிக்கத்தக்கது.

'ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் நவம்பரில் நடத்தப்படவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் ஆகஸ்டில் அல்லது செப்டெம்பரில் தொடங்கும். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படுவதாக இருந்தால் நீதித்துறையின் தலையீட்டின் ஊடாக மாத்திரமே அதற்கான சாத்தியம் தோன்ற முடியும். அந்த தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

'நிறைவேற்று அதிகாரம் தேர்தல் சட்டங்களையும் அரசியலமைப்பு ஏற்பாடுகளையும் ஒதுக்கித்தள்ளுகிறது. இது ஆபத்தானது. உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தாமல் விடுவதற்கு அரசாங்கம் கூறுகின்ற அதே காரணங்களைக் காட்டி ஜனாதிபதி தேர்தலையும் கூட ஒத்திவைக்கக்கூடிய சாத்தியமும் இருக்கிறது " என்று அவர் கூறினார்.


தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி தேர்தல்களை கடந்தவாரம் இரண்டாவது தடவையாகவும் ஒத்திவைத்தது. முதலில் மார்ச் 9 தேர்தல்களை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அரசாங்கம் நிதியை வழங்காத காரணத்தால் அது ஏப்ரல் 25 க்கு ஒத்திவைக்கப்பட்டது. இப்போது அந்த திகதியிலும் தேர்தல்களை நடத்தமுடியாமல் போய்விட்டது.

அந்த தேர்தல்களை மீண்டும் எப்போது நடத்தக்கூடியதாக இருக்கும் என்பதை திட்டவட்டமாக சொல்லமுடியாத நிலையில் ஆணைக்குழு இருக்கிறது. உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் நிதியை அரசாங்கம் எப்போது வழங்கும் என்பதைப் பொறுத்தே புதிய திகதியை தீர்மானிக்கக்கூடியதாக இருக்கும் என்று ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமான் சிறீ இரத்நாயக்க கூறியிருக்கிறார். தேர்தல்களை நடத்துவதற்கு நிதியை வழங்குவது தொடர்பில் நேர அட்டவணையொன்றை தருமாறு ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா அரசாங்கத்தை கேட்டிருக்கிறார்.

இது இவ்வாறிருக்க, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருப்பதாக ஏற்கெனவே கூறியிருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்க அடுத்த வருட முற்பகுதியில் அந்த தேர்தலை நடத்துவது குறித்து சகல அரசியல் கட்சிகளுடனும் தேர்தல் ஆணைக்குழு, திறைசேரி மற்றும் சட்டமா அதிபருடனும் கலந்தாலோசிக்க விருப்பதாக சிறுபான்மை கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனான அண்மைய சந்திப்பு ஒன்றில் அறிவித்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகியது.

மக்களினால் தெரிவுசெய்யப்படும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியே தனது ஐந்து வருடப் பதவிக் காலத்தில் நான்கு வருடங்கள் நிறைவடைந்த நிலையில் - அதுவும் இரண்டாவது பதவிக்காலத்துக்கு மக்களின் ஆணையைப் பெறவிரும்பினால் மாத்திரம் - உரிய காலத்துக்கு முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை நடத்தமுடியும் என்று அரசியலமைப்புக்கான மூன்றாவது திருத்தத்தின் ஏற்பாடுகளில் கூறப்பட்டுள்ளதாக அரசியலமைப்பு சட்ட நிபுணர்கள் ஏற்கெனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

மக்கள் கிளர்ச்சியை அடுத்து கடந்த வருடம் ஜூலை நடுப்பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகியதை அடுத்து அவரின் எஞ்சிய பதவிக் காலத்துக்கே விக்கிரமசிங்கவை பாராளுமன்றம் ஜனாதிபதியாக தெரிவுசெய்தது. அவ்வாறு பாராளுமன்றத்தினால் தெரிவாகும் ஜனாதிபதி அந்த எஞ்சிய பதவி காலத்தை நிறைவுசெய்யவேண்டும் என்றும் உரிய காலத்துக்கு முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை அவர் நடத்தமுடியாது என்றும் அந்த ஏற்பாடுகள் கூறுகின்றன.



கடந்த வாரம் இதை முன்னாள் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவும் சுட்டிக் காட்டினார். தனது அபிப்பிராயத்தின்படி ஜனாதிபதி தேர்தலை அடுத்த வருடம் இறுதிப்பகுதியில் மாத்திரமே நடத்த முடியும் என்றும் தற்போதைய ஜனாதிபதியினால் திடீர் ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்கு செல்லமுடியாது என்றும் அவர் கூறினார்.

ஆனால், அதேவேளை, பாராளுமன்றத்தினால் தெரிவாகும் ஜனாதிபதிக்கும் உரிய காலத்துக்கு முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் இருப்பதாக சில சட்ட நிபுணர்கள் இன்னொரு வாதத்தை முன்வைப்பதாக ஊடகங்கள் கூறுகின்றன. ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் சரியான வியாக்கியானத்தைப் பெறுவதற்கு உயர்நீதிமன்றத்தை நாடவேண்டியிருக்கிறது என்பது இவர்களது அபிப்பிராயம்.

இவை எல்லாவற்றையும் தெரியாதவரல்லவே ஜனாதிபதி விக்கிரமசிங்க. அடுத்த வருட முற்பகுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவது குறித்து அவர் பல தடவைகள் கருத்து வெளியிட்டிருந்தார்.

இடைநடுவில் பதவி விலகும் ஜனாதிபதியின் எஞ்சிய பதவிக்காலத்துக்கு பாராளுமன்றத்தினால் தெரிவாகும் ஜனாதிபதியும் முன்னையவரின் பதவிக்காலத்தில் நான்கு வருடங்கள் நிறைவடையும் நிலையில் உரிய காலத்துக்கு முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை நடத்தக்கூடியதாக அரசியலமைப்புக்கு திருத்தம் ஒன்றை கொண்டுவருவதற்கு விக்கிரமசிங்க உத்தேசிப்பதாக சில அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

அவ்வாறு கொண்டுவரப்படக்கூடிய திருத்தம் ஒன்றை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்காத பட்சத்தில் தேர்தல்களை நடத்தி மக்களிடம் புதிய ஆணை பெறப்படவேண்டும் என்று அவை தொடர்ச்சியாக விடுத்துவரும் கோரிக்கையின் 'பாசாங்குத்தனத்தை" விக்கிரமசிங்கவினால் அம்பலப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்று பிரபல அரசியல் ஆய்வாளரும் மூத்த பத்திரிகையாளருமான டி.பி.எஸ். ஜெயராஜ் கடந்த வாரம் எழுதியிருந்தார்.

உள்ளூராட்சி தேர்தல்களையோ, மாகாணசபை தேர்தல்களையோ அல்லது பாராளுமன்ற தேர்தலையோ தற்போதைய சூழ்நிலையில் நடத்தினால் தங்களால் வெற்றிபெற முடியாது என்பது அரசாங்க கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சிக்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் நன்றாக தெரியும். அதனால் அந்த தேர்தல்களில் எதையும் தற்போதைக்கு நடத்துவதை தவிர்த்து, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற தற்போதைய நடவடிக்கைகளில் காணப்படும் மேம்பாடுகளை தங்களுக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்தி நேரடியாக ஜனாதிபதி தேர்தலுக்கு சென்றால் தங்களால் வெற்றிபெற முடியும் என்று அவை நம்புகின்றன.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக களமிறங்கக்கூடிய அரசியல் அனுபவமும் வல்லமையும் கொண்ட வேட்பாளர்கள் எதிரணி கட்சிகள் மத்தியில் இல்லை என்ற ஒரு தோற்றப்பாடு உருவாக்கப்படுகிறது.

இலங்கை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு எவருமே முன்வராத ஒரு நேரத்தில் - தனது கட்சியின் சார்பில் தனியொரு உறுப்பினராக பாராளுமன்றத்தில் இருந்த விக்கிரமசிங்க சவால்களுக்கு முகங்கொடுக்க துணிச்சலுடன் முன்வந்ததாலும் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் பொருளாதார மீட்சிக்கு அவர் தலைமையிலான அரசாங்கம் கடந்த பல மாதங்களாக முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் மக்களின் இடர்பாடுகளில் தணிவை ஏற்படுத்திவருவதாலும் அவரது மதிப்பு ஒப்பீட்டளவில் உயர்ந்திருக்கிறது என்பது உண்மையே.

ஆனால், அந்த மதிப்பு கடந்த பாராளுமன்ற தேர்தலில் முற்று முழுதாகத் துடைத்தெறியப்பட்ட ஐக்கிய தேசிய கட்சிக்கு மக்கள் மத்தியில் ஆதரவை மீட்டெடுக்க எந்தளவுக்கு உதவியிருக்கிறது என்பது கேள்விக்குரியது. வெறுமனே தனது கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கினால் நேரக்கூடிய கதியை விக்கிரமசிங்க நன்கு அறிவார். அதனால்தான் பல்வேறு கட்சிகளுடனும் பேச்சுக்களில் ஈடுபடுவதில் அவர் ஆர்வம் காட்டுகிறார்.

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு அனுமதிக்கப்போவதில்லை என்பதில் ஜனாதிபதி மிகவும் உறுதியாக இருந்துவந்தாலும் கூட அவரது கட்சி நியமனப்பத்திரங்களை சமர்ப்பிப்பதை தவிர்க்கவில்லை. ராஜபக்சாக்களின் பொதுஜன பெரமுனவுடன் தேர்தல் கூட்டணியை அவர் அமைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

எந்த தேர்தல் நடந்தாலும் தங்களது கட்சி வெற்றி பெறும் என்று ராஜபக்சாக்களும் பரிவாரங்களும் வீண்பெருமை பேசுவது போன்று விக்கிரமசிங்க ஒரு போதும் பேசுவதில்லை.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்சாக்களின் ஆதரவுடனேயே அவர் களமிறங்குவார் என்று முதலில் பரவலாக பேச்சுக்கள் அடிபட்டன. ஆனால், இப்போது பொதுஜன பெரமுனவின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்துவது குறித்து அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவாசம் உட்பட முக்கியஸ்தர்கள் பேச ஆரம்பித்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நிதியமைச்ருமான பசில் ராஜபக்ச ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கும் நாட்டுக்கு தலைமை தாங்கி வழிநடத்துவதற்கும் மிகவும் பொருத்தமானவர் என்று கூறும் அவர்கள் புதுவருட கொண்டாட்டங்களுக்கு பிறகு தங்களுக்கு புதிய தலைவர் ஒருவர் கிடைப்பார் என்றும் சொல்கிறார்கள். ஆனால் இரட்டைக் குடியுரிமை கொண்ட அவர் தனக்கு அடுத்த தேசிய தேர்தல் எதிலும் போட்டியிடும் உத்தேசம் இருப்பதாக இதுவரையில் பகிரங்கமாக கூறவில்லை.

அமைச்சர்களாக பதவி வகிக்கும் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவரை ஆதரிப்பதற்கு விரும்புவதாகவும் அதேவேளை சிலர் பசில் ராஜபக்சவுக்கு விசுவாசமாக இருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இதனிடையே விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக அடுத்த பதவிக்காலத்துக்கு மக்கள் போட்டியின்றி தெரிவுசெய்யவேண்டும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான வஜிர அபேவர்தன வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதேவேளை, எதிர்கால தேசிய தேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கவிருக்கும் 'மெகா" கூட்டணியில் ஐக்கிய தேசிய கட்சியும் விக்கிரமசிங்கவும் இணைய முன்வரவேண்டும் என்றும் அந்த கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாசவே இருப்பார். அவரை எதிரணியின் பொது வேட்பாளர் என்று அழைக்கலாம் என்றும் அந்த கட்சியின் முக்கியமான பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியிருக்கிறார். ஐக்கிய தேசிய கட்சி வாக்கு வங்கி இல்லாத சிறுபான்மை கட்சி என்று அவர் வர்ணித்தார்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கக்கூடிய எந்தவொரு கூட்டணியிலும் ஐக்கிய தேசிய கட்சி

(18ஆம் பக்கம் பார்க்க)

# சஜித்தும் ரணிலும் இணங்கிச் செயற்படுவதால் தமிழர் தாயகம் பௌத்த பூமியாக்கப்படுகிறது!

**பனங்காட்டான்**

சுபகிருது ஆண்டு விடைபெற்றுச் செல்ல சோபகிருது என்ற பெயரில் இன்னொரு புத்தாண்டு பிறந்துள்ளது. இரண்டுமே இலங்கை அரசியல்போல அர்த்தம் புரியாத சொற்பதங்கள்.

தமிழர்கள் ஒரு வருடத்தில் எத்தனை புத்தாண்டு பிறப்பைக் கொண்டாடுகிறார்கள். ஜனவரி முதலாம் நாள் ஆங்கிலப் புத்தாண்டு. தைப்பொங்கல் தினத்தன்று தமிழ்ப் புத்தாண்டு. சித்திரை புத்தாண்டு தமிழ் - சிங்கள புத்தாண்டு எனச் சொல்லப்படுகிறது.

இந்தப் பெயர் விடயத்தில் மட்டும்தான் தமிழ் - சிங்கள இன ஒற்றுமை மதிக்கப்படுகிறது. இவ்வகையான பெருநாட்களில் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரான இரா.சம்பந்தன் எமது நினைவுகளில் தவறாது வந்து விடுவார். இதற்குக் காரணம், கடந்த பல வருடங்களாக தீபாவளிக்கு முன்னர், பொங்கலுக்கு முன்னர், புது வருடத்துக்கு முன்னர் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு கிடைத்துவிடுமென ஆரூடக்காரர்கள் போன்று அவர் விடுத்த செய்திகள்தான். இப்போது இந்தப் பெருநாட்களில் வாழ்த்துக் கூறுவதையே அவர் மறந்துவிட்டார்போல் தெரிகிறது. ஓரளவுக்கு அதுவும் நல்லதுதான்.

ரணில் விக்கிரமசிங்க முதல் முறையாக ஜனாதிபதி என்ற பதவி வழியாக சித்திரை புத்தாண்டு வாழ்த்துச் செய்தி வழங்கியுள்ளார். உலகளாவிய ரீதியில் கடன் பட்டாவது பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு இயன்றளவு நிவாரணமளித்துள்ளார் என்ற வகையில் வாழ்த்துக்கூற அவர் தகுதி பெற்றுவிட்டார் என்று கூறலாம்.

கடந்த பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு என்று ஜனாதிபதியாக பதவியேற்ற



போது கூறிய ரணில் அதனை வசதி கருதி மறந்துவிட்டார். இப்போது தேசிய நல்லிணக்கம், உண்மைகளைக் கண்டறிதல், அதற்கான குழுக்களை நியமிப்பது என்ற பெயரில் காலத்தை இழுத்தடிக்கும் வியூகங்களை கச்சிதமாக வகுத்து வருகிறார்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இலங்கையில், ஒற்றை அங்கத்தவரை மட்டுமே - அதுவும் தேசிய பட்டியல் ஊடாக வந்தவரை தமது ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் வைத் துக்கொண்டு, முழு நாடாளுமன்றத்தை யும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் முதலாவது அரச அதிபர் ரணில்தான். தினமும் ஊடகங்கள் வெளியிடும் செய்திகள் இரண்டு விடயங்களை தெரியத்தருகின்றன. மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுனவின் ஆதரவோடு உருவான ஆட்சித்தரப்புக்கு பெரமுனவுக்குள் எதிரலை ஒன்று உருவாகியுள்ளதாக சொல்லப்படுகிறது. அடுத்ததாக, பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாச அணியிலிருந்து பெருந்தொகையானவர்களை பதவி கொடுத்து கொள்முதல் செய்ய ரணில் தரப்பு இரவு பகலாக தீவிரமாக ஈடுபட்டு வரும் தகவல்கள். பொதுஜன பெரமுன ரணில்மீது அதிருப்தி கொண்டிருப்பதற்கான முக் கிய காரணம், இவர்கள் தரப்பிலிருந்து பரிந்துரை செய்யப்பட்ட பலருக்கும் இதுவரை அமைச்சர் பதவிகள் வழங்கப்படாமை. மகிந்தவும் கோதபாயவும் ஜனாதிபதியாக இருந்த காலங்களில் ஊழல்வாதிகள் என அறியப்பட்ட அமைச்சர்களான ஜோன்சன் பெர்னான்டோ, மகிந்தானந்த அளுத்கமகே, ரோகித அபயகுணவர்த்தன ஆகியோரை அமைச்சர்களாக நியமிப்பதில் ரணில் விருப்பம் காட்டாதிருப்பது ரகசியமன்று.



அதேசமயம், இவர்கள் மூவரும் அவ்வப்போது விடும் அறிக்கைகள் ரணிலின் ஆட்சித் திறமையையும் அரசியல் சாணக்கியத்தையும் பாராட்டுவதாக அமைந்து வருகிறது. அமைச்சு பதவிகளை எதிர்நோக்கியே இவ்வாறு நற்சான்றிதழ்களை இவர்கள் வழங்குவதாக அரசியல் செதுக்குனர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

இலங்கை அரசாட்சியில் காலத்துக்குக் காலம் நான்கு தேர்தல் நடைபெற வேண்டும். உள்ளூராட்சிச் சபைகள், மாகாண சபைகள், நாடாளுமன்றம், ஜனாதிபதிக்கான தெரிவு என்பவற்றுக்கே தேர்தல்கள் இடம்பெற வேண்டும். ஆனால், இவை நான்குமே பல கேள்விக்குறிகளோடு ஊடகங்களின் ஊகங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு சுயாதீனமாக இந்த மாதம் 25ம் திகதி நடத்தவிருந்த உள்ளூராட்சித் தேர்தலை நுள்ளாமலும் கிள்ளாமலும் காணாமல் போகச்செய்த ரணிலின் அரசியல் சித்து விளையாட்டு இலங்கை வரலாற்றில் வித்தியாசமான புதிது. சமகாலத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் எல்லைகள் நிர்ணயக் குழு அதன் முதலாவது அறிக்கையை கடந்த வாரம் கையளித்தது. நாடளாவிய ரீதியில் தற்போதுள்ள 8,719 எண்ணிக்கை உறுப்பினர்களை 4,714 ஆகக் குறைக்க இக்குழு சிபார்சு செய்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல்கள் பற்றி சில மாதங்களுக்கு முன்னர் கருத்து வெளியிட்ட ரணில், அந்தந்த மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்களை உள்ளடக்கியதாக மாகாண சபைகளை நிர்வகிக்கலாம் என்ற தமது நோக்கத்தை வெளியிட்டிருந்தார். ஜனாதிபதி என்ற வகையில் சும்மா ஒரு முசுப்பாத்தியாக அவர் இதனை சொல்லியிருக்க மாட்டார். அவரது மனதில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு திட்டத்தை மக்களின் நாடி

**நல்லாட்சி அரசில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது வீடமைப்பு அமைச்சராகவிருந்த சஜித் பிரேமதாச தமிழர் பிரதேசங்களில் ஆயிரம் பௌத்த விகாரைகள் அமைக்கப்படும் என்று கூறினார். இன்று எதிர்கட்சித் தலைவராகவுள்ள சஜித்தின் மனம் குளிர, ஜனாதிபதியாகவிருக்கும் ரணில் அதனை நிறைவு செய்கிறார். இவ்விடயத்தில் அவர்கள் பிணக்கின்றி இணங்கிச் செயற்படுகின்றனர்.**

பிடித்து பார்க்க - நோட்டம் விட மெதுவாக இதனை கசிய விட்டுள்ளார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்தில் அவரது சிந்தனையில் உருவான மாவட்ட சபைகள் உருவாக்கத்தை ஒட்டியதாக மாகாண ஆலோசனைச் சபைகளை அமைக்கும் ஆலோசனையையும் சில மாதங்களுக்கு முன்னர் ரணில் வெளியிட்டதையும் இலகுவாக மறந்துவிட முடியாது.

நாடாளுமன்றத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் அடுத்தடுத்து இடம் பெறுமென அரசியல் கட்சிகள் மத்தியில் கருத்து வேரூன்றியுள்ளது. சிறிமாவோ பண்டாரநாயக்கவும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் முறையே 1970 மற்றும் 1977 தேர்தல்களில் வெற்றி பெற்ற பின்னர் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை தேர்தலை வைக்காமலே நீடித்ததை ரணிலும் பின்பற்றக்கூடுமெனவும் சிலர் கருதுகின்றனர். சகல கட்சிகளதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை மனதார வரவேற்பர். தற்போதுள்ள சூழ்நிலையில் தாங்கள் மீளவெற்றி பெறுவதில் நம்பிக்கை இல்லாதிருப்பவர்களும், ஓய்வுதியம் கிடைப்பதை எதிர்பார்த்திருப்பவர்களும் தேர்தல்களைப் பின்போடும் விடயத்தில் ரணிலின் பக்கமே. (இதில் தமிழர் அரசியல் கட்சிகள் விதிவிலக்கன்று).

ரணில் விக்கிரமசிங்க விரைவில் இந்தியா பயணிக்க இருப்பதாக வெளிவரும் தகவல்களை தொடர்ந்து தமிழ் தேசிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அவரை ரகசியமாக சந்தித்து உரையாடி வருகின்றனர். இந்தியா புறப்படுவதற்கு முன்னர் ஆகக்குறைந்தது வடக்குக்காவது மாகாண சபை தேர்தலை நடத்தி விட்டால் இந்திய பிரதமர் மோடியை மனம் குளிர வைக்கலாமென ரணிலுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிடையில் சஜித் அணியைச் சேர்ந்த சிலரை முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனரட்ன தலைமையில் தம்பக்கம் இழுக்க ரணில் தரப்பு பேச்சுகளில் இறங்கியுள்ளது. எவரையும் தனியாகவன்றி ஒரு கூட்டமாக இழுப்பதன் மூலம் பொதுஜன பெரமுனவையும் வழிக்குக் கொண்டு வரலாமென ரணில் நம்புகிறார்.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமானால் பசில் ராஜபக்சவை களமிறக்க பெரமுனவில் ஒரு அணி நாட்டம் காட்டுகிறது. மகிந்தவும் அவரது குடும்பமும் இதற்கு ஒருபோதும் பச்சைக்கொடி காட்ட மாட்டார்கள். தமது மகன் நாமலை ஜனாதிபதி கதிரையில் அமர்த்தும் ஆசையிலிருக்கும் மகிந்த, அதுவரைக்கும் ரணிலை அந்தக் கதிரையில் வைத்திருப்பது தமக்கு சாதகமாக இருக்குமென நம்புகிறார்.

சிங்கள தேச அரசியல் எதிர்காலத்தையே அனைவரும் உற்றுநோக்கி வரும் இன்றைய சூழல், தமிழர் தாயகத்தில் அரச இயந்திரங்கள் மேற்கொள்ளும் பௌத்த மயமாக்கல் அடாவடியை தடுக்க முடியாத அபாய நிலையை உருவாக்கியுள்ளது. இந்துக்களின் வழிபாட்டுத் தலங்களை அழித்தொழிப்பதும், புதுப்புது விகாரைகளை முளையிட வைப்பதும், சட்டத்தை சாதகமாக்கி நீதிமன்ற உத்தரவுகளை தங்கள் பாதுகாப்புக்கு பயன்படுத்துவதும் தொடர் கதையாகவுள்ளது. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் அமைச்சர்கள் கூட எதுவும் செய்ய முடியாது



தள்ளப்படுகின்றனர்.

நல்லாட்சிக் காலத்தில் ரணில் பிரதமராக இருந்தபோது அமைச்சராகவிருந்த சஜித் பிரேமதாச தமிழர் பகுதிகளில் ஆயிரம் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுமென்று அறிவித்திருந்தார். அன்று வீடமைப்பு அமைச்சராகவிருந்த சஜித் புதிய வீட்டுத் திட்டங்களோடு விகாரைகளையும் அமைக்க திட்டமிட்டிருந்தார்.

இந்த அறிவிப்பு வெளியான நல்லாட்சிக் காலத்து பிரதமர் ரணில் இன்று ஜனாதிபதி. இந்த அறிவிப்பை வெளியிட்ட அன்றைய அமைச்சர் சஜித் பிரேமதாச இன்று எதிர்கட்சித் தலைவர். பதவிகள் வழியாக இவர்கள் இடம் மாறி இருந்தாலும் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்து பௌத்த மண்ணாக்குவதில் இவர்கள் ஒரே வண்டியின் இரட்டை மாடுகள்.

தமிழ் மண்ணுக்கு விமோசனம் இந்திய பிரதமர் மோடியிடமும், தமிழர் பிரதேசத்தில் குறுகிய காலத்தில் தீவிரமாக செயற்படும் சிவசேனவிடமும் என்றாகி வருவது எந்தளவுக்கு பயனளிக்கும் என்று தெரியாது. மோடியும் ரணிலும் எதிர்பார்த்தவாறு சந்திப்பார்களாயின் இதற்கு விடை கிடைக்கும்.

# தமிழ் ஆண்டுகளுக்கு சமஸ்கிருத பெயர் வந்தது எப்படி?

முரளிதரன்
காசி விஸ்வநாதன்



தமிழ் ஆண்டுகள் ஒவ்வொன்றும் சமஸ்கிருதப் பெயர்களைச் சொல்லியே குறிப்பிடப்படுகின்றன. அறுபதாண்டுகளுக்கு ஒரு முறை மீண்டும் பயன்படுத்தப்படும் இந்தப் பெயர்ப் பட்டியல் தமிழ் ஆண்டுகளோடு இணைந்தது எப்படி?

தமிழ்நாட்டில் ஒவ்வொரு புத்தாண்டு நெருங்கும்போதும், "தமிழ் புத்தாண்டு என்பது தை மாதம் பிறக்கிறதா அல்லது சித்திர மாதம் பிறக்கிறதா?" என்ற சர்ச்சையோடு, தமிழ் ஆண்டுகளுக்கு சமஸ்கிருதப் பெயர்களை ஏன் பயன்படுத்த வேண்டும் என்ற கேள்வியும் அவை எப்போதிருந்து புழக்கத்திற்கு வந்தன என்ற கேள்வியும் எழுப்பப்படும். இது ஒரு முடிவில்லாத சர்ச்சை.

தமிழ் ஆண்டுகளுக்கு சமஸ்கிருதப் பெயர்களைப் பயன்படுத்தும் வழக்கம் துல்லியமாக எப்போதிருந்து தொடங்கியது, ஏன் தொடங்கியது என்பது குறித்த தெளிவான தகவல்கள் கிடையாது.

இந்தியாவைப் பொறுத்தவரை, ஆண்டுகளைக் குறிப்பிட பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய பல்வேறு காலக் கணிப்புகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கலி வருடம், கொல்லம் வருடம் (கேரளத்தில் பயன்படுத்தப்படும் முறை. உதயமார்த்தாண்ட வர்மாவால் துவங்கப்பட்டதாக கருதப்படுகிறது. கி.பி. 823ஆம் ஆண்டிலிருந்து இந்த முறையை பயன்படுத்த ஆரம்பித்தனர்), விக்ரமாதித்ய வருடம் (விக்ரமாதித்ய மன்னரால் கி.மு. 57 துவங்கப்பட்டதாகக் கருதப்படும் வருடம்), சாலிவாகன சகாப்தம் (சாலிவாகனன் எனப்படும் சாதவாகன மன்னன் கி.பி. 78ல் துவங்கி வைத்த முறை), பஸ்லி (அக்பர் அரியணை ஏறிய ஆண்டில் துவங்குவது. அறுவடையை மையமாகக் கொண்ட காலக் கணிப்பு முறை), ஹிஜ்ரி (இஸ்லாமிய காலக் கணிப்பு முறை) என்று நீளும் கணக்கீட்டு முறைகளில் இந்த சம்வத்சரம் எனப்படும் 60 ஆண்டு சுழற்சி முறையும் ஒன்று.

இது தவிர, தமிழ்நாட்டில் திருவள்ளுவர் ஆண்டு என்ற கணக்கீட்டு முறை தமிழ்நாடு அரசால் பின்பற்றப்படுகிறது. கிரிகேரியன் நாட்காட்டியோடு ஒப்பிட்டால், திருவள்ளுவர் ஆண்டு 31 ஆண்டுகள் அதிகமாக இருக்கும். உதாரணமாக, 2023ஆம் ஆண்டு என்பது திருவள்ளுவர் ஆண்டில் 2054ஆம் ஆண்டாகும். 1972 முதல் இது தமிழ்நாடு அரசின் அதிகார பூர்வ ஆண்டு முறையாக கடைப்பிடிக்கப்படுகிறது.

மற்ற கணக்கீட்டு முறைகளுக்கும் சம்வத்சர முறைக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு. மற்ற ஆண்டு முறைகள், தொடர்ச்சியான எண்களைக் கொண்டவை. ஆனால், இந்த சம்வத்சர முறை, எண்களுக்குப் பதிலாக 60 பெயர் களைப் பயன்படுத்துகிறது. ஆகவே, 60 ஆண்டுகள் முடிந்த பிறகு, மீண்டும் முத லில் இருந்து அந்தப் பட்டியல் துவங்கும். இந்தப் பட்டியலில் முதல் பெயர் "பிரபவ" என்று துவங்குகிறது. "அக்ஷய" என்ற பெயரோடு இந்தப் பட்டியல் முடிவுக்கு வருகிறது.

வராகமிக்ரர் எழுதிய வானியல் நூலான பிருகத் சம்ஹிதையில்தான் (கி. பி. 505 - 587) முதன்முதலாக, இந்த 60 பெயர்களும் நாம் இப்போது பயன்படுத்தும் வரிசையில் காணப்படுகின்றன. சம்வத்சரம் என்பது ஓர் ஆண்டைக் குறிக்கிறது. ஆனால், "வருஷ" என்ற வார்த்தையால் குறிக்கப்படும் ஆண்டிற்கும் "சம்வத்சரம்" என்ற வார்த்தையால் குறிக்கப்படும் ஆண்டிற்கும் வித்தியாசம் உண்டு. "வருஷம்" என்பது பூமியின் ஒரு சூரிய வருடத்தைக் குறிக்கிறது. ஆனால், "சம்வத்சரம்" என்பது வியாழனின் சுழற்சியை மையமாகக் கொண்டது.

அதாவது, ஒரு சம்வத்சர ஆண்டு என்பது 361.026721 நாட்களைக் கொண்டது. பூமியை அடிப்படையாகக் கொண்ட சூரிய ஆண்டைவிட, 4.232 நாட்கள் குறைவு. இதனைச் சரிசெய்ய, ஒவ்வொரு 85 சம்வத்சர ஆண்டுகளுக்கும் ஒரு முறை, இந்த 60 பெயர்களில் ஒன்று தாண்டிச் செல்லப்படும். அதாவது அந்த ஆண்டு "பிரபவ" என்ற பெயர் சூட்டப்படவிருந்தால், அதற்கு அடுத்த பெயரான "விபவ" என்ற பெயர் சூட்டப்படும்.



ஆனால், காலப்போக்கில் இது கைவிடப்பட்டது. சம்வத்சரமும் வருஷமும் ஒரே காலகட்டத்தைக் குறிப்பதாக மாறிவிட்டன.

எப்போதிலிருந்து "சம்வத்சர" பட்டியல் கடைப்பிடிக்கப்படுகிறது?

வட இந்தியாவில் நீண்ட காலமாக இந்தப் பட்டியல் பயன்படுத்தப்பட்டாலும் தமிழ்நாட்டில் 13-14ஆம் நூற்றாண்டில் இருந்துதான் இந்த முறை தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுவதாகச் சொல்கிறார் ஆய்வாளர் அ.கா. பெருமாள்.

"தமிழ்நாட்டில் உள்ள கல்வெட்டுகளில் 13-14ஆம் நூற்றாண்டு காலத்தில் இருந்துதான் இந்த பெயர்களைக் குறிப்பிட்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. குறிப்பாக தென்காசி கோவிலில் பல இடங்களில் இந்த வருடப் பெயர்களைக் கொண்ட கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இந்த சுழற்சி ஆண்டு முறையையும் இந்தப் பெயர்களையும் தமிழ்நாட்டில் பரவலாக்கியது பாண்டிய மன்னர்கள்தான். சோழமன்னர்களின் கல்வெட்டுகளில் இவை கிடையாது" என்கிறார் அ.கா. பெருமாள்.

இலக்கியங்களைப் பொறுத்தவரை, இடைக்காடர் எழுதிய வருடாதி வெண்பாவில் இந்த அறுபது ஆண்டுப் பெயர்களும் வருகின்றன. இந்தப் பெயர்களையும் சொல்லி, அந்தந்த ஆண்டுகள் எப்படியிருக்கும் எனப் பாடியிருக்கிறார் இடைக்காடர். இவரது காலம் 15ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. தமிழ் இலக்கியத்தில் முதன்முதலில் இந்த அறுபது ஆண்டுகளும் வரிசைப்படி காணப்படுவது இந்த வருடாதி வெண்பாவில்தான். "கல்வெட்டுகள், இடைக்காடரின் பாடல்கள் ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது 14-15ஆம் நூற்றாண்டில் இது பிரபல மாக ஆரம்பித்திருக்கலாம்" என்கிறார் அ.க. பெருமாள்.

> **காலத்தைக் குறிப்பிட தங்களுக்கென தொடர்ச்சியான ஒரு ஆண்டு முறையை தமிழர்கள் ஏன் உருவாக்கவில்லை என்பது ஒரு சுவாரஸ்யமான கேள்வி.**



இதே கருத்தையே முன்வைக்கிறார் கல்வெட்டு ஆய்வாளரான குடவாயில் பாலசுப்ரமணியன். "15ஆம் நூற்றாண் டில்தான் இது பிரபலமாகியிருக்க வேண்டும். ராஜராஜசோழனின் கல்வெட்டு களிலோ, அவனுக்குப் பிந்தைய சோழ மன்னர்கள் கல்வெட்டுகளிலோ இந்த வருடப் பெயர்கள் கிடையாது. அவர்களைப் பொறுத்தவரை ஆட்சியாண்டையும் சக ஆண்டையும்தான் கல்வெட்டுகளில் குறிப்பிட்டிருக்கிறார்கள்" என்கிறார் அவர்.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14ஆம் தேதி நெருங்கும்போது, தமிழ் ஆண்டுகளுக்கு சமஸ்கிருதப் பெயர்களைப் பயன்படுத்துவது குறித்து எதிர்ப்புக் குரல்கள் எழுகின்றன. இதனை அப்படிப் பார்க்கத் தேவையில்லை என்கிறார் ஆய்வாளர் பொ. வேல்சாமி.

"தமிழ் இங்கிருந்து வந்ததாகவும் சமஸ்கிருதம் வெளியில் இருந்து வந்ததாகவும் சொல்லி, இந்த எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள். தமிழ்நாட்டில் சங்க காலத்திலேயே சமஸ்கிருதமும் தமிழும் நெருக்கமாக இருந்திருக்கின்றன. இரு மொழிகளுக்கும் இடையில் ஒரு நீண்ட காலத் தொடர்பு இருக்கிறது. தமிழுக்கும் சமஸ்கிருதத்திற்கும் தொடர்பில்லை என்பவர்கள் மொழியியலாளர்கள் அல்ல. அவர்கள் தாம் சார்ந்திருக்கும் அரசியல் சித்தாந்தம் சார்ந்து அந்தக் கருத்தைச் சொல்கிறார்கள். ஆகவே இந்தப் பெயர்களுக்கு தமிழ்நாட்டில் ஒரு நீண்ட காலத் தொடர்ச்சி இருக்கிறது" என்கிறார் அவர்.

ஆனால், இந்த சம்வத்சர முறையிலான பெயர்களை ஆண்டுகளுக்கு பயன்படுத்துவதில் வேறு ஒரு சிக்கல் இருக்கிறது. அதாவது, இந்தப் பெயர்கள் 60 ஆண்டுகளுக்கு ஒரு முறை திரும்பவும் அதே பெயர் வருமென்பதால், சில நூற்றாண்டுகளுக்குப் பிறகு நாம் குறிப்பிட விரும்பும் ஆண்டு எது என்ற குழப்பம் ஏற்படும்.

"கல்வெட்டுகளைப் பொறித்த மன்னர்கள் இதில் தெளிவாக இருந்தார்கள். அவர்கள் இந்த சுழற்சி ஆண்டைக் குறிப்பிட்டாலும் சக ஆண்டு, சாலிவாகன ஆண்டு போன்ற பிற ஆண்டுகளையும் சேர்த்தே குறிப்பார்கள். இதனால், அவர்கள் எந்த வருடத்தைச் சொல்கிறார்கள் என்பதில் குழப்பம் கிடையாது. ஆனால், 19ஆம் நூற்றாண்டில் பதிப்பாளர்களாக இருந்தவர்கள், தங்கள் புத்தகங்களில் கிரிகேரியன் ஆண்டையோ, வேறு ஆண்டையோ குறிக்காமல், வெறும் இந்தப் பெயர்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இப்போது 150 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில், இவை குழப்பத்தை ஏற்படுத்துகின்றன" என்கிறார் அ.கா. பெருமாள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, காலத்தைக் கணக்கிட்டுக் குறிப்பிடுவது சங்க காலத்தில் இருந்தே இருந்துவருகிறது. அதற்கு நல்ல உதாரணம், புறநானூற்றின் 229வது பாடல். கூடலூர் கிழார் பாடிய இந்தப் பாடல், கோச்சேரமான் யானைகட்சே எய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையைப் பற்றியது. அவன் குறிப்பிட்ட நாளில் இறப்பான் எனக் கணித்து, அதேபோல அவன் இறந்துவிட கையறு நிலையில் பாடிய பாடல் இது.

இந்தப் பாடலின் பல இடங்களில், ராசிகள், நட்சத்திரத்தின் நிலை, மாதத்தின் பெயர் ஆகியவை வருகின்றன.

ஆனால், காலத்தைக் குறிப்பிட தங்களுக்கென தொடர்ச்சியான ஒரு ஆண்டு முறையை தமிழர்கள் ஏன் உருவாக்கவில்லை என்பது ஒரு சுவாரஸ்யமான கேள்வி.

(பிபிசி)

# வடக்கில் இம்முறை சிறப்பான புதுவருடம்

கடந்த 3 ஆண்டுகளுக்கு பின்னர் வடக்கில் புது வருடக் கொண்டாட்டங்கள் இம்முறை ஓரளவு சிறப்பாக அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளன.

கொரோனா தாக்கம், பொது முடக்கம், பொருளாதார நெருக்கடி ஆகியவற்றால் கடந்த 3 ஆண்டுகளாக வடக்கில் மட்டுமல்லாது நாடு முழுவதிலும் உள்ள மக்கள் கொண்டாட்டங்களை கட்டுப்பாடுகளுடன் கொண்டாட வேண்டிய இக்கட்டான நிலை இருந்து வந்தது. இதனால் மக்கள் தாங்கள் விரும்பியவாறு கொண்டாட்டங்களை நடத்த முடியாத நிலைமை இருந்து வந்தது. அவர்கள் வீடுகளுக்குள் முடங்கி இருக்கவேண்டிய நிலைமை இருந்தது.

ஆனால் இம்முறை அந்த நிலைமையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இம்முறை சுதந்திரமாக கட்டுப்பாடுகள் இல்லாமல் புதுவருட கொண்டாட்டத்தில் மக்கள் ஈடுபடக்கூடிய நிலைமை ஏற்பட்டதால் அவர்கள் சந்தோசமாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொருளாதார ரீதியாகவும் இம்முறை நெருக்கடி நிலைமை சற்று முண்னேற்றம் கண்டதால் மக்கள் ஓரளவு நிம்மதியுடன் புதுவருட கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இம்முறை வடக்கில் இடம் பெற்ற புதுவருடக் கொண்டாட்டங்கள் குறித்து இவர்கள் என்ன சொல்கிறார்கள்....?



## களை கட்டியது யாழ்ப்பாணம்

**ஆ.சிவபாலசுந்தரன்**
**யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்**

அனைவருக்கும் சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். தமிழ் மக்கள் சித்திரைப் புத்தாண்டை வெகுவிமரிசையாக கொண்டாடுவது வழமை. அதேபோல இந்த முறை சித்திரை புத்தாண்டானது யாழ்ப்பாணத்தில் களைக் கட்டியதாகத்தான் கூறவேண்டும். அதாவது ஆலயங்கள் தோறும் பொதுமக்கள்

நிறைந்து காணப்பட்டார்கள். அதேபோல மைதானங்களில் பல்வேறுபட்ட போட்டிகளில் இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு ஆனந்தமாக இந்த வருட புத்தாண்டை யாழ்ப்பாணத்தில் கொண்டாடினர்.

குறிப்பாக இளைஞர், யுவதிகள் புத்தாண்டு கொண்டாட்டங்களில் சந்தோஷத்துடன் ஈடுபட்டமை மகிழ்ச்சியளிக்கின்றது.

கடந்த காலங்களில் பொருளாதார நெருக்கடி மற்றும் பயணத் தடை மற்றும் கொரோனா இடர்நிலை காரணமாக பொதுமக்கள் சுதந்திரமாக தமது பண்டிகைக் காலங்களில் கொண்டாட்டங்களை நடத்த முடியாமல் இருந்தது.

எனினும் இம்முறை அனைத்துத் தடைகளையும் தாண்டி புத்தாண்டு கொண்டாட்டமானது சிறப்பாக இடம் பெற்றிருந்தது. குறிப்பாக நல்லூர் ஆலயச் சுற்றாடலில் பெருமளவு வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. காரணம் யாழ்ப்பாண மக்கள் ஆலய தரிசனத்திற்காக நல்லூர் ஆலய வளாகத்துக்கு வருகை தந்திருந்தார்கள்.

இது ஒரு நல்ல விடயம். அதேபோல எமக்கு உள்ள தடைகள் அனைத்தும் மேலும் தளர்ந்து எமது மக்கள் பண்டிகைக் காலங்களில் சந்தோஷமாக பண்டிகைகளை கொண்டாடுவதற்கு இறைவன் அருள் புரிய வேண்டும்.

குறிப்பாக மைதான நிகழ்வுகள் அநேகமான இடங்களில் வழமைபோல் இடம்பெற்றிருந்தன. கொரோனா இடர்நிலை காலத்தில் அனைத்து விடயங்களும் தடைப்பட்டு மக்கள் வீடுகளிலேயே பண்டிகைக் காலங்களில் முடக்கப்படவேண்டிய நிலை காணப்பட்டது.

ஆனால் இவ்வருடம் அனைத்து தடைகளும் நீங்கி பொதுமக்கள் வழமை போல் சுதந்திரமாக எந்தவித பயமும் இல்லாத தமது கொண்டாட்டங்களை கொண்டாடி இருந்தனர். இது ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

## இம்முறை கலகலப்பான புதுவருட கொண்டாட்டம்

**சமன் பந்துலசேன**
**வடக்கு பிரதம செயலாளர்**

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இவ்வருடம் சித்திரை புத்தாண்டு பொதுமக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக வடக்கு மக்கள் வருடத்தில் இரண்டு மூன்று பண்டிகைகளைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றார்கள். அதில் சித்திரை புத்தாண்டை ஒரு முக்கிய பண்டிகையாக கொண்டாடி வருகின்றார்கள்.

புத்தாண்டு தினத்தன்று பொதுமக்கள் ஆலயங்களில் பூசை வழிபாடுகளில் கலந்துகொண்டதுடன் பின்னர் உறவினர் வீடுகளுக்குச் சென்று புத்தாண்டைக் கொண்டாடினர்.

கடந்த ஆண்டுகளில் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடிகளை காரணமாக பொதுமக்கள் சந்தோஷமாக பண்டிகைக் காலங்களில் தமது கொண்டாட்டங்களை நடத்த முடியாத நிலைமை இருந்தது.



ஆனால் இவ்வருட சித்திரை புத்தாண்டை பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சியாகவும் சந்தோசமாகவும் கொண்டாடி இருந்தார்கள். எனவே இந்த நிலைமை மேலும் தொடர இறைவன் அருள் புரிய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

## சந்தோசமாக புதுவருடத்தை கொண்டாடினர் மக்கள்



**த.ஜெயசீலன்**
**ஆணையாளர் யாழ்.மாநகர சபை**

பிறந்திருக்கின்ற சோபகிருது வருடமானது அனைவருக்கும் நல்ல ஆண்டாக அமைய பிரார்த்திறேன். கடந்த இரண்டு மூன்று வருடங்களின் பின்னர் இம்முறை யாழ்ப்பாணத்தில் புது வருட கொண்டாட்டங்கள் மிகச் சிறப்பாக இடம் பெற்றன.

கடந்த இரண்டு மூன்று வருடங்களாக கொரோனா இடர்நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக யாழ்ப்பாணத்தில் புது வருடக் கொண்டாட்டங்கள் களை கட்டாது இருந்த நிலையிலும் இந்த வருடம் அனைத்துத் தடைகளும் நீங்கி மக்கள் புது வருடக் கொண்டாட்டத்தை சிறப்பாக கொண்டாடினர்.

குறிப்பாக ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டதோடு தமக்குரிய பொருட்களை வியாபார நிலையங்களில் கொள்வனவு செய்வதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

அத்தோடு இம்முறை பொருளாதார நெருக்கடி நிலையிலும் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதன் காரணமாக பொதுமக்கள் தமது புத்தாண்டுக் கொண்டாட்டங்களைச் சிறப்பாக முன்னெடுத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக ஆலயங்களில் மக்கள் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டனர். கடந்த இரண்டு மூன்று வருடங்களின் பின்னர் யாழ்.மாவட்டத்தில் இவ்வருட புத்தாண்டை மிகவும் சந்தோஷமாக மக்கள் கொண்டாடியதை அவதானிக்க முடிந்தது.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்



## வடக்கில் சிறப்பான புதுவருடம்

**மேஜர் ஜெனரல் போதொட்ட**
**கட்டளைத் தளபதி**
**யாழ். மாவட்டம்**

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். இம்முறை புத்தாண்டைத் தமிழ் மக்கள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். இராணுவத்தினர் ஆகிய நாங்களும் பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய பூரண ஒத்துழைப்பை வழங்கி இருந்தோம். அதேபோல பொதுமக்களும் தமது புத்தாண்டுச் செயற்பாடுகளை வழமை போல் சிறப்பாக மேற்கொண் டிருந்தனர்.

குறிப்பாக அண்மைய ஆண்டுகளில் நாட்டில் பல்வேறு இடர்பாடுகள் ஏற்பட்டிருந்த நிலையில் வடக்கில் உள்ள மக்கள் தமது கொண்டாட்டங்களை வீடுகளுக்குள் முடக்கியிருந்தனர். இம்முறை புத்தாண்டு கொண்டாட்டத்தில் மக்கள் மிகவும் சந்தோஷமாக வீதிகளில் நடமாடிப் போட்டிகளில்-நிகழ்வுகளில் கலந்து கொண்டதை அவதானிக்க முடிந்தது.



குறிப்பாக இராணுவத்தினர் என்ற வகையில் புத்தாண்டு காலத்தில் முழு ஒத்துழைப்பையும் பொதுமக்களுக்கு வழங்கியிருந்தோம். அதேபோல பொதுமக்கள் சட்ட ஒழுங்கைகை மீறாது எந்த பிரச்னையும் ஏற்படாதவாறு தமது புத் தாண்டுக் கொண்டாட்டத்தை கொண்டாடியது அவதானிக்க முடிந்தது.



## மேயில் ரஜினி படம்!

நெல்சன் இயக்கத்தில் ரஜினி நடித்து வரும் ஜெயிலர் படப்பிடிப்பு தற்போது நடக் கிறது. எனினும், ரஜினி சம்பந் தப்பட்ட காட்சிகள் பெரும் பாலும் நிறைவடைந்து விட் டன.

இந்நிலையில், அடுத்தபடி யாக தனது மகள் ஐஸ்வர்யா இயக்கும் லால் சலாம் படத் தின் படப்பிடிப்பில் கலந்து கொள்ளப் போகிறார். இதன் பிறகு ஜெய் பீம் இயக்குநர் ஞானவேல் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் 170 ஆவது படத் தின் படப்பிடிப்பு வருகிற மே மாதம் தொடங்க உள்ளது.

அதோடு லால் சலாம் படத் தில் நடித்து வரும்போதே தனது 170 வது படத்திலும் நடிக்க திட்டமிட்டுள்ளார் ரஜினி.

## ஜெயம் ரவியுடன் கீர்த்தி

தெலுங்கு நடிகையான கீர்த்தி ஷெட்டி, 'தி வாரியர்' படம் மூலம் தமிழில் அறிமு கமானார். சூர்யா ஜோடியாக 'வணங் கான்' படத்தில் ஒப்பந்தமாகி இருந்தார். அந்தப் படத்தில் இருந்து சூர்யா விலகி யதால், கீர்த்தி ஷெட்டியும் விலகிவிட் டார்.

இப்போது வெங்கட் பிரபு இயக்கத் தில் நாக சைதன்யாவுடன் 'கஸ்டடி' படத்தில் நடித்து வரும் அவர், அடுத்து ஜெயம் ரவி ஜோடியாக நடிக்கவுள்ளார். புவனேஷ் அர்ஜுனன் இயக்கும் இந்தப் படம் 100 கோடி இந்திய ரூபாயில் உருவாகவுள்ளதாகக் கூறப்படுகின்றது.



## நயனின் 75ஆவது படம்

நயன்தாராவின் 75ஆவது படத்தை நிலேஷ் கிருஷ்ணா இயக்குகிறார். இதில், ஜெய், சத்யராஜ் உட்பட பலர் நடிக்கின்றனர். 'ராஜா ராணி' படத் துக்குப் பிறகு 3 பேரும் இதில் மீண் டும் இணைகின்றனர். இந்தப் படம் அதிக செலவில் உருவாகின்றது.

படம்பற்றி நிலேஷ் கிருஷ்ணா கூறியதாவது: குடும்பப் பின்னணியில் உருவாகும் படம் இது. நயன்தாரா நடுத்தர குடும்பப் பெண்ணாக நடிக்கி றார். அவரும் ஜெய்யும் ஒன்றாக வேலைப் பார்க்கின்றனர். அவர்களின் காதலை வழக்கமானதாக இல்லாமல் கொஞ்சம் புதிதாக முயற்சி செய்திருக் கிறோம். படத்தில் நயன்தாராவுக்கு அதிக முக்கியத்துவம் இருக்கும் - என்று கூறியுள்ளார்.





## மீளவும் கர்ணன் கூட்டணி

'கர்ணன்' திரைப்படத்துக்கு பிறகு இயக்குநர் மாரிசெல்வராஜ் இயக்கத்தில் நடிகர் தனுஷ் நடிக்கும் புதிய படம் பற் றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந் தப் படத்தை தனுஷின் வொண்டர்பார் நிறுவனம் தயாரிக்கிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு மாரி செல்வ ராஜ் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் வெளி யான படம் 'கர்ணன்'. இந்தப் படம் ரசிகர் களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் மீண்டும் நடிகர் தனு ஷும் மாரிசெல்வராஜும் இணையும் புதிய படத்துக்கான அறிவிப்பு வெளியா கியுள்ளது.



## நயனுடன் மீண்டும் ராஷி

தயாரிப்பாளர் சசிகாந்த் முதன்முறையாக இயக்கும் படம் - டெஸ்ட்'. கிரிக்கெட் விளை யாட்டை மையமாகக் கொண்ட கதையில் இந்தப் படம் உரு வாகிறது.

இதில் மாதவன், சித்தார்த் , நயன்தாரா ஆகி யோர் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள். அந்த வகை யில் மாதவனும், நயன்தாராவும் முதன் முறையாக இப்போதுதான் ஜோடி சேர்கிறார்கள். இந்த நிலையில் இப்படத்தில் இன்னொரு நாயகி யாக ராஷி கண்ணாவும் நடிக்கவுள்ளார்.

இவர் ஏற்கனவே இமைக்கா நொடிகள் படத் தில் நயன்தாராவுடன் இணைந்து நடித்தவர். இந் தப் படத்தில் அவர் சித்தார்த்துக்கு ஜோடியாக இவர் நடிக்கிறார் என்று கூறப்படுகிறது.

## ஈர்க்கும் டாப்ஸி!

நடிகை டாப்ஸியின் 'சிக்ஸ் பேக்' பல ரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. டாப்ஸி தெலுங்கு திரையுலகில் அறிமுகமாகி பின்னர் தமிழுக்கு வந்தவர். இங்கிருந்து பொலிவூட் சென்று முன்னணி நாயகி யாக மாறியுள்ளார். தற்போது, நாயகிக்கு முக்கியத்துவமுள்ள படங்களில் மட்டுமே நடித்து வருகிறார்.

அவரின் வெளிப்படையான பேச்சுக ளால் சிக்கல்களிலும் - வழக்குகளிலும் சிக்கியுள்ளார். இத்தனைக்குள்ளும் அவர் கடுமையான உடற்பயிற்சி மூலம் 'சிக்ஸ் பேக்' தோற்றத்துக்கு மாறியுள்ளார். இத னால், அவர் அடுத்து சண்டைக் காட்சி நிறைந்த அதிரடிப் படத்தில் நடிக்கவுள் ளார் என்று கூறப்படுகின்றது.




**திரைப்படம் - முந்திரிக்காடு**
**இயக்கம் - மு. களஞ்சியம்**
**நடிப்பு - புகழ் மகேந்திரன், சீமான், சுபபிரியா, ஜெயராவ்**
**இசை - ஏ. கே. பிரியன்**

தமிழக கிராமம் ஒன்றில் சாதி மறுப்பு காதல் ஃ திரு மணம் செய்பவர்களைக் கொலை செய்கிறது ஆதிக்க சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் குழு. அதை எவ்வித எதிர்ப்பும் இன்றி வரவேற்கிறது அக்கிராமத்திலுள்ள ஆதிக்க சமூகம். இந்நிலையில், ஐ. ஏ. எஸ். ஆக வேண் டும் என்ற கனவுடன் இருக்கும் ஆதிக்க சமூகத்தைச் சேர்ந்த தெய்வத்துக்கும், காவல்துறை அதிகாரியாக வேண்டும் என்ற கனவுடன் இருக்கும் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த செல்லாவுக்கும் நட்பு ஏற்படுகிறது.

இருவரும் காதலிப்பதாக ஆதிக்க சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் குழு கதைகட்டி, இருவரையும் அடித்துத் துன்புறுத்துகிறார்கள். ஒரு கட்டத்தில் காதலாக மாறு கிறது அந்த நட்பு. இதனால் செல்லாவை கொலை செய்ய முடிவெடுக்கிறது அக்குழு. மறுபுறம், தெய்வத்தை ஆண வக் கொலை செய்ய அந்த ஊரே கூடி முடிவெடுக்கிறது. இறுதியில் காதலர்கள் தப்பித்தார்களா, அந்தக் கொலை கார குழுவுக்கு என்ன ஆனது, அந்தக் கிராமத்துக்கு என்ன ஆனது என்பதைப் பதைபதைக்கும் காட்சிகளாலும், பக்கம் பக்கமான வசனங்களாலும் சொல்ல முயன்றிருக் கிறார் இயக்குநர் மு.களஞ்சியம்.

கதாநாயகனான புகழ் மகேந்திரன் உயிர் பயத்தில் நடுங்கும் இடத்திலும், அதற்காக காதலை மறைக்கும் இடத்திலும் ஓரளவு சிறப்பான நடிப்பை வழங்கியிருக் கிறார். மற்ற இடங்களில், ஒரே மாதிரியான முகபா வத்தை வைத்தே ஒப்பேற்றியிருக்கிறார்.

அறிமுக நடிகையான சுபப்பிரியா, தெய்வம் கதாபாத் திரத்தால் மொத்த படத்தையும் தன் தோளில் தாங்குகி றார். குறும்புத்தனம், வைராக்கியம், கோபம் என ஒரு கிராமத்துச் சுட்டி பெண்ணை கண்முன் நிறுத்துகிறார்.

இருவரையும் தவிர, தெய்வத்தின் தந்தையாக நடித்த ஜெயராவ்வும், காவல்துறை அதிகாரியாக சீமானும்,







ஊர் பாட்டியான காக்காச்சி என்கிற கதாபாத்திரமும் மனதில் நிற்கின்றன. வில்லன் குழுவில் ஏழெட்டு பேர் இருந்தாலும், அவர்களுக்கென்று தனித்துவமான அழுத் தமான காட்சிகள் இல்லாததால், அவர்களின் கதாபாத் திரமும் மனதில் நிற்கவில்லை.

கதை நடக்கும் கிராமத்துக்குப் பாதையாக இருக்கும் முந்திரிக்காட்டில் இருந்து கதை தொடங்குகிறது. அந்த முந்திரிக்காடும் படத்தின் முக்கிய பாத்திரமாக இருக் கிறது என்பதால், காதல், சண்டை, பாடல் காட்சிகள் என 90வீத காட்சிகள் அங்கேயே நடப்பது, ஒருவித அலுப்பைத் தருகிறது.

வில்லன்களிடம் காதலர்கள் மாட்டுவது, அவர்கள் இருவரையும் மிரட்டுவது, அடிப்பது, உயிருக்குப் பயந்து ஓடுவது, சண்டை போடுவது என மீண்டும் மீண்டும் ஒரே பாணியிலான காட்சிகள், ஒரே மாதிரியான நடிப் பில் அதே இடத்தில் நடப்பது அயர்ச்சியை மட்டுமே உண்டாக்குகிறது. கிராமக் கதை படத்தில் கடைசி வரை கிராமத்தை காட்டவே இல்லை.

காவல்துறை அதிகாரியான சீமான் சில நையாண்டி வசனங்களால் சிரிப்பை வரவழைக்கிறார். ஆனால், அவர் வரும் காட்சிகளில் எல்லாம் கட்சி மேடை போலவே தோன்றச் செய்கிறார்.

"சாதி... சாதி... சாதி..." என எந்த நேரமும் எதாவது ஒரு கதாபாத்திரம் பேசிக்கொண்டே இருக்கிறது. சில காட்சிகளில், சமூகத்தை நோக்கிச் சரியான கேள்விக ளைத் திரைப்படம் கேட்டாலும், பல இடங்களில் சாதி குறித்த அரசியல் போதாமையே வெளிப்படுகிறது.

இறுதிக்காட்சியில், காக்காச்சி பாட்டி எடுக்கும் அவதாரமும், தெய்வத்தின் தந்தையான ஜெயராவின் நெகிழ்ச்சியான முடிவும் மட்டும் ஆச்சரியமூட்டுபவை யாக இருக்கின்றன. அதேநேரம், நீளமான இறுதிக்காட்சி பார்வையாளர்களிடம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத் தாமல் கடந்து போகிறது.

திரைக்கதையில் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால் சமகாலத்தில் கவனிக்கத் தக்க திரைக்காவியமாக மாறி யிருக்கும்.

# எந்த உலகக் கிண்ணத்திலும் இல்லாத அதிசயம்....!

10 அணிகள் பங்கேற்கும் 13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடக்கிறது. முந்தைய உலகக் கிண்ணப் போட்டியில் (2019) அணியை வழிநடத்திய ஒருவர்கூட இந்த உலகக் கிண்ணத்துக்கு அணித் தலைவராக இல்லை. 48 ஆண்டு கால உலகக் கிண்ண வரலாற்றில் இப்படியோர் அதிசயம் இதற்கு முன்பு நிகழ்ந்ததில்லை.

2019ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்கு திமுத் கருணாரத்ன தலைமை தாங்கினார். சுப்பர் 8 சுற்றுடனேயே இலங்கை அணி வெளியேறியது. 9 போட்டிகளில் வெறுமனே 3 போட்டிகளிலேயே இலங்கை வெற்றி பெற்றது. ஆறாவது இடத்தை இலங்கை பெற்றிருந்தது. இதன் பின்னர், திமுத் கருணாரத்ன அணித் தலைவர் பதவியில் இருந்து மாற்றப்பட்டார். அந்த்ச் சமயம் இருபது - 20 போட்டிகளில் சிறப்பாக செயல்பட்ட தசூன் சானகவிடம் தலைமைப் பதவி வழங்கப்பட்டது.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி விராட் கோலி தலைமையில் களமிறங்கி அரையிறுதியுடன் வெளியேறியது. 2021ஆம் ஆண்டில் தலைமைப் பதவியில் இருந்து கோலி கழற்றி விடப்பட்டார். தற்போது இந்திய அணி சொந்த மண்ணில் உலகக் கிண்ண சவாலை ரோகித் சர்மா தலைமையில் எதிர்கொள்கிறது.

2019 உலகக் கிண்ணத்தை இங்கிலாந்துக்கு வென்று தந்து வரலாறு படைத்த அந்த அணியின் தலைவர் இயன் மோர்கன் கடந்த ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பிறகு பொறுப்பை ஜோஸ் பட்லர் ஏற்றார். இதேபோல் அவுஸ்திரேலிய அணியின் தலைவராக இருந்த அரோன் பிஞ்ச் விடைபெற்றதால் பட் கம்மின்ஸ் வழிநடத்துகிறார்.



பங்களாதேஷ் அணியில் மோட்ரஷாவுக்கு பதிலாக தமீம் இக்பால், பாகிஸ்தான் அணியில் சர்ப்ராஸ் அகமதுவுக்கு பதிலாக பாபர் அசாம், தென்னாபிரிக்க அணியில் பப் டு பிளசிஸுக்கு பதிலாக பவுமா, ஆப்கானிஸ்தான் அணியில் குல்படின் நைப்புக்கு பதிலாக ஹஷ்மத்துல்லா ஷகிடி ஆகியோர் அணித் தலைவர்களாக உள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியில், அந்த உலகக் கிண்ணத் தொடரில் தலைவராக இருந்த ஜசன் ஹோல்டர் மோசமான செயல்பாட்டால் அந்தப் பதவியை இழந்தார். பிறகு பொலார்ட் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஒதுங்கியதும் நிக்கோ லஸ் பூரண் அந்த இடத்துக்கு வந்தார். தலைமைப் பதவி யிலிருந்து பூரணும் விலகியதால் இப்போது ஷாய் ஹோப் மேற்கிந்தியத் தீவுகளை வழி நடத்திச் செல்கிறார்.

நியூசிலாந்து அணி 2019ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்திடம் சுப்பர் ஓவரில் தோற்று உலகக் கிண்ணத்தைக் கோட்டை விட்டது. அந்த அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் மொத்தம் 578 ஓட்டங்கள் குவித்து தொடர் நாயகன் விருதை பெற்றார். இந்தத் தடவையும் அவரின் தலைமையில்தான் நியூசிலாந்து அணி உலகக் கிண்ணத்தை நோக்கிப் பயணித்தது. ஆனால், துரதிர்ஷ்டவரசமாக ஐ.பி.எல். கிரிக்கெட்டில் குஜராத் அணிக்காக விளையாடி வரும் அவருக்கு முதல் போட்டியிலேயே காயம் ஏற்பட்டது.

இந்தக் காயத்துக்காக அவர் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளார். இதனால், அவர் காயத்தில் இருந்து பல மாதங்கள் ஆகும் என்பதால் இந்த உலகக் கிண்ணத் தொடரில் விளையாட முடியாத சோகத்தில் உள்ளார். அவருக்குப் பதிலாக நியூசிலாந்து அணியின் தலைவராக ரொம் லதாம் செயல்படுவார் என்று தெரிகிறது.


# ரோஹித் ஆதரவாளர் கோலிக்கு விரோதி?

பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் ஒரு தலைபட்சமாக கருத்துக்களை தெரிவிக்கின்றார். குறிப்பாக ரோகித் சர்மாவை பாராட்டும் அவர் விராட் கோலியை விமர்சனம் செய்கிறார், ஆகவே ஹர்ஷா போக்ளே ரோஹித் ஆதரவாளர், கோலியை வெறுப்பவர் என்று கோலி ரசிகர்கள் போக்ளேயை சாடி வருகின்றனர்.

டில்லி கப்பிடல்ஸ் அணியை மும்பை இந்தியன்ஸ் கடைசி பந்து திரில்லரில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி முதல் வெற்றியைப் பதிவு செய்தது. 173 ஓட்டங்கள் வெற்றி இலக்கை விரட்டிய மும்பை இந்தியன்ஸ் அணியில் கப்டன் ரோகித் சர்மா 45 பந்துகளில் 65 ஓட்டங்கள் விளாசினார். பவர் ப்ளேயில் ரோகித் சர்மா அடித்து ஆடினார். இதனால் 6 ஓவர்களில் 68 ஓட்டங்க்ள என்று போட்டிக்கு நல்ல அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.

பிரமாதமான முழுநீள பந்துகளை அடித்து ஆடினார் ரோகித் சர்மா. இவரது ஆட்டத்தைப் பார்த்த வர்ணனையாளர் ஹர்ஷா போக்ளே, "இந்த வடிவத்தில் ரோகித் சர்மா ஆட்டத்தைப் பார்ப்பதே ஒரு தனி மகிழ்ச்சிதான். உத்தி ரீதியாக மும்பை சுப்பர். குல்தீப் யாதவையும் விட்டு வைக்கவில்லை, பவர் ப்ளேயில் அதிரடியாக ஆடினார்கள்" என்று பாராட்டி ருவீற் செய்துள்ளார்.







ஆனால் இதே ஹர்ஷா போக்ளே இதற்கு முந்தைய போட்டியான பெங்களூர் - லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் போட்டியில் ஆர்சிபி 212 ஓட்டங்களை அடித்தும் தோற்ற போது விராட் கோலி அதிக பந்துகளை சாப்பிட்டார், ஒருமுறை விரயம் செய்து விட்டால் அந்தப் பந்துகள் திரும்பிக் கிடைக்குமா? என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

அன்று, பெங்களூர் ஆட்டம் பற்றி ட்வீட் செய்த ஹர்ஷா, "சராசரி ஓட்டம் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கும் அனைத்தையும் இந்தப் போட்டி உறுதி செய்கின்றது. கோலி (44 பந்து 61), ஸ்ட்ரைக் ரேட் 139, ஆனால் கடைசி 15 பந்துகளில் 16ஓட்டங்களையே எடுத்தார். டுபிளெசிஸ் 46 பந்துகளில் 79, ஸ்ட்ரைக் ரேட் 172, ஆனால் ஒருக்கட்டத்தில் இவர் 30 பந்துகளில் 33 ஓட்டங்களையே எடுத்திருந்தார். ஆகவே, ஸ்ட்ரைக் ரேட்டை வைத்து இன்னிங்ஸை எடை போட முடியாது" என்று கூறியிருந்தார்.

இதனையடுத்து ஹர்ஷா போக்ளேவின் இரண்டு ருவிற்களி ஸ்க்ரீன் ஷொட்களை எடுத்துப் போட்டு கோலி ரசிகர்கள் போக்ளேயை கோலி விரோதி என்றும் ரோகித் ஆதரவாளர் என்றும் சாடி வருகின்றனர். அதாவது 44 பந்துகளில் 61 விராட் கோலி டெஸ்ட் இன்னிங்ஸ், 45 பந்தில் 65 ரோகித் சர்மா, ஹிட் மேன் மீண்டும் என்று கூறியதால் வர்ணனையாளர் எப்படி இரட்டை நாக்கு வைத்துக் கொள்ள முடியும் என்று கேள்வி எழுப்புகின்றனர்.

ஆனால், ஹர்ஷா இதற்கும் பதிலடி கொடுத்துள்ளார். அதாவது ரோகித் பற்றிய ருவிற் போட்ட போது ரோகித் ஆடிக்கொண்டிருந்தார், அவரது ஸ்ட்ரைக் ரேட் அப்போது 200, உங்கள் ஏமாற்றம் புரிகின்றது, ஆனால், என் செயலுக்கான உள்நோக்கம் கற்பிப்பதை வேறு எங்காவது முயற்சி செய்யுங்கள் என்று பதிலளித்துள்ளார் ஹர்ஷா போக்ளே.

# சுயநல ஆட்டம்?

லக்னோசுப்பர் ஜெயன்ட்ஸ் மற்றும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகளுக்கிடையேயான போட்டி கடந்த வாரம் நடைபெற்றது. கடைசி பந்து வரை த்ரில் லிங்காக சென்ற இந்தப் போட்டியை லக்னோ அணி வென்றிருந்தது.

பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடிய சமயத்தில் கோலி 44 பந்துக ளில் 61 ஓட்டங்களை எடுத்திருந்தார். கோலியின் இந்த இன்னிங்ஸை வர்ணனை யாளர் சைமன் டூலி கடுமையாக விமர்சித் திருக்கிறார்.

தொடக்கத்தில் அதிரடியாக ஆடி வேக மாக ஓட்டங்களை குவித்த விராட் கோலி கடைசிக் கட்டத்தில் கொஞ்சம் மெதுவாக ஆடியிருந்தார். முதல் 25 பந்துகளில் 42 ஓட்டங்களை எடுத்துவிட்ட கோலி அடுத்த 19 பந்துகளில் வெறும் 19 ஓட் டங்களை மட்டுமே எடுத்திருந்தார். இன்னிங்ஸின் பிற்பாதியில் கோலி ஆடிய இந்த மந்தமான ஆட்டத்தைத்தான் சைமன் டூலி விமர்சித்திருக்கிறார்.

அவர் கூறுகையில் "கோலி முதல் 25 பந்துகளில் 42 ஓட்டங்களை எடுத்து விட்டார். விரைவான ரயில் போல வேகமாக ஆடியிருந்தார். நிறைய நல்ல ஷொட் களை ஆடியிருந்தார். ஆனால், அங்கிருந்து அரைச்சதத்தை எட்ட இன்னும் 10 பந்துகளை எடுத்துக்கொண்டார். பெங்களூர் அணிக் குகையில் நிறைய விக்கெட்கள் இருந்தன. அதிரடியாக ஆடக்கூடிய துடுப்பாட்ட வீரர்கள் இருந்தார்கள்.

அந்த சமயத்தில் அணியின் நலனை முன் நிறுத்தி கோலி பௌண்ட்ரிகளுக்கு முயற்சி செய்திருக்க வேண்டும். தனிப்பட்ட சாதனைகளை மனதில் வைத்து ஆட இந்த ஆட்டத்தில் இடமே இல்லை. அணியின் நலன் மட்டும்தான் அங்கே முன்னிலைப்படுத்தபட்டிருக்க வேண்டும்' என சைமன் டூலி வர்ணனையிலேயே கோலியை கடுமையாக விமர்சித்திருந்தார்.



## நூல் வெளியீடு:

# மு. நித்தியானந்தனின் நான்கு நித்திலங்கள்!

**இணுவை ச. சிறி ரங்கன்**
**லண்டன்**



லண்டனில் மு. நித்தியானந்தனின் நான்கு நூல்கள் கோலாகலமாக வெளியிடப்பட்டன. விமர்சகர், ஊடகர், சிறந்த பேச்சாளர், பல்கலைக்கழக விரிவுரையாளர், எழுத்தாளர் என்று பல்வகைஅம்சங்களை உள்ளடக்கிய அவரின் பவளவிழாவும், நூல்கள் வெளியீடும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. காலை பதினொரு மணிக்கு ஆரம்பமான நிகழ்வுகள், மாலை ஏழு மணி வரை இலக்கியச் சுவைஞர்களை 'சிக்கென' பிடித்திருந்தமை விழாவின் சிறப்பைத் துலாம்பரமாக்கியது.

தமிழ் வாழ்த்துடன்கூடிய நிகழ்வுகள் 'மலையகம்-200' உரைகள், நூல்கள் அறிமுகம், வெளியீட்டுரை, 'நித்தியம்' பவளவிழா மலர் மணம்






என்று, பகுதி பகுதிகளாக வகுக்கப்பட்டிருந்தன. அத்துடன், மதியபோசன விருந்துடன்கூடிய நித்தியின் கலந்துரையாடல்கள் தொடர்பான ஆவணப்படம், நடனம்போன்ற கலையம்சங்கள் இலக்கியச் சுவைஞர்களை இறுக்கமாக, அசைவின்றிக்கட்டி வைத்திருந்தன. 'மலையகம்-200' பற்றிய முதல் நிகழ்வுக்கு பெ. சிவஞானம் தலைமை தாங்கினார். விழாவின் முக்கிய அம்சமான நூல்கள் வெளியீட்டுக்கு, வித்துவான் வேலன் இலக்கிய வட்ட தலைவர் செ. சிறீக்கந்தராசா தலைமைதாங்கினார். "கேட்டார் பிணிக்கும் தகையவாய்" என்ற வள்ளுவரின் கூற்றுக்குள் மிகச்சிறப்பாய் நகர்த்திச் செல்வதற்கு அளவுகோலிட்டு வழிநடத்திய விதம், தலைவர் சிறீக்கந்தராசாவின் தலைமைத்துவப் பண்பை வெளிப்படுத்திற்று.

'சிறுமைகண்டு பொங்குதல்', 'ஆடல் எங்கேயோ அங்கே', 'மலையகச் சுடர்மணிகள்', 'பெருநதியின் பேரோசை' ஆகிய பெயர்களை, தான் பிரசவித்த இக் குழந்தைகளுக்கு நித்தி பெயரிட்டிருந்தார். இக் குழந்தைகளைக் கைகளில் தூக்கி, நான்கு பேச்சாளர்கள் அழகு பார்த்தனர். முறையே கலா சிறிரஞ்சன், க. சிவானந்தன், ந. சுசீந்திரன் ஆகியோரும், மாதவி சிவலீலன் . எம். பௌசர் ஆகியோரும் இதனைச் செய்தனர்.

'பெருநதியின் பேரோசை' என்ற நூலில், தனது இதய வீட்டில் குடிகொண்ட நாற்பத்தியாறு பேர்களைப் பற்றி அன்பர் நித்தியானந்தன் வரைந்திருக்கிறார். இதில். தமிழகத்தின் தொல். திருமாவளவன் உட்பட, ஈழத்து அமிர்தலிங்கம் முதலான அரசியல்வாதிகள், கொல்லப்பட்ட ராஜினி, செ. கணேசலிங்கன் வரையானவர்களைத் தொட்டுக் காட்டியுள்ளார். இந் நூலை, வாழ்ந்துகொண்டிருக்கும் நூலகப்பெருமான் இ. பத்மநாப ஐயருக்கு நித்தி அர்ப்பணிப்புச் செய்துள்ளமை, நித்தியின் பெருந்தன்மையாகும். மலையகச்



சுடர்மணிகளில், மலைக்கொழுந்தான சிலரைப்பற்றி மணியோசை எழுப்பியிருக்கிறார். 'சிறுமைகண்டு பொங்குதல்' என்ற குழந்தையை பேராசிரியர் சோ. சந்திரசேகரனுக்குக் காணிக்கையாக்கி, மலையகம் பற்றிய கட்டுரைகளுடன் ஒருசில எழுத்தாளர்களுக்கு அணி சேர்த்திருக்கிறார் நூலாசிரியர். 'ஆடல் எங்கேயோ அங்கே' என்ற நூலில் இருபத்தி நான்கு ஆளுமைகள் பற்றி எழுதப்பட்டுள்ளது. இதில் சுவாரசிமான கட்டுரைகள் பல அடங்குகின்றன. இந் நூலை தனது தம்பி மு. நடராஜனுக்கு நூலாசிரியர் காணிக்கையாக்கியுள்ளார்.

நூல்களை யாப்பதில் என்றும் தனக்கு உற்சாகம் தரும் எழுத்தாளர் எச். எச். விக்கிரமசிங்க பற்றியும் இதில் அவர் விதந்துள்ளார்.

நமது பெயர்பெற்ற ஓவியர் க. கிருஷ்ணராஜா (கே. கே. ராஜா) வின் ஓவியங்கள் நூல்களின் வனப்பை மேலும் ஒளியாக்குகின்றன. நூல்களின் பிரசவத்திற்கு, ஆசிரியர் நித்தியின் மனைவி மீனாள் நித்தியானந்தன் தாதியாயிருந்திருக்கிறார், சென்னை 'தாய்' வெளியீடும், லண்டனின் வித்துவான் வேலன் இலக்கிய வட்டமும் இணைந்து வெளியிட்ட 'நித்தியம்' என்று மகுடமிடப்பட்ட பவளவிழா மலரின் மணம், நினைக்கும் தோறும் கமழ்கிறது. எண்பத்திரண்டு படைப்பாளிகள், நித்தியம் என்ற மகுடத்தைச் செதுக்கியுள்ளனர். (நித்தி--75) நித்தியம் (நித்தி - 75), அதுவொரு சத்தியம்!

மு. நித்தியானந்தன் நாடறிந்த ஒரு பிரமுகர். யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களிடையே, மலைநாட்டின் உயரம்போல் உயரமாக வைத்து மதிக்கப்பட்டவர். மலையகத்தின் பதுளையில் பிறந்து, வளர்ந்தவர். இவரால் யாக்கப்பட்ட இந் நூல்கள் யாவும் நிச்சயமாக ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும். அப்போது, இந்நூல்களின் கனம் மேலும் அறியப்படும்.

---




# வியுக்தியார் பதில்கள்

**கே. சிவபாலன், கோவில் வீதி. நல்லூர்**

**கேள்வி:** தமிழ் மக்களின் மீதான காணி, தொல்லியல் ஆக்கிரமிப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் அடிக்கடி போராட்டங்களை நடாத்துகின்றபோதிலும் அவற்றால் எந்தவித பயனும் கிடைப்பதாகத் தெரியவில்லையே?

**வியுக்தியார்:** எந்தவித பயனும் கிடைப்பதாக தெரியவில்லை என்று எதைவைத்து சொல்கிறீர்கள் என்று தெரியவில்லை. போராட்டம் நடத்துகின்ற அமைப்புக்கள், கட்சிகள் இதனால் பயனடைகின்றன தானே. இப்போது பிரச்சினையை எப்படி தீர்ப்பது என்பதல்ல நம்மவர்களது பிரச்சினை, ஒவ்வொரு கட்சிகளும் தாங்களும் போராட்டம் நடாத்தினோம் என்று காட்ட வேண்டும். அதைத்தான் செய்கின்றன. போராட்டம் என்றால் சில பத்து பேருடன் அல்லது சில நூறு பேரு டன் நடத்துவதல்ல போராட்டம். போராட்டம் நடக்கின்ற பகுதி போராட்டங்களால் முடங்கவேண் டும். அப்படியொரு போராட்டத்தை நடாத்தக்கூடிய அமைப்பு நம்மத்தியில் எங்கே இருக்கின்றது?

**சி. ராஜேஸ்வரன், கோயில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** இலங்கையில் மாத்திரமே காணப்படும் சிலவகை குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதாமே. குரங்குகளை விற்றாவது டொலர் சம்பாதித்தால் நல்லதுதானே?

**வியுக்தியார்:** இப்படியே டொலர் தேவைக்காக ஒவ்வொன்றாக விற்றுக்கொண்டிருந்தால், கடைசியில் இலங்கையில் எதுவுமே மிஞ்சாது. நம்மிடம் மட்டுமே இருக்கின்றது என்று சொல்வதற்கு இருக்கும் ஒருசில வற்றையும் இப்படி விற்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

**டி. நிக்சன், பாசையூர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** மேதின பேரணிகளையும், கூட்டங்களையும் இம்முறை பிரமாண்டமாக நடத்துவதற்கு பிரதான அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளனவாமே. நாடு இன்று இருக்கும் நிலையில் பெரும் பொருட்செலவில் இதுபோன்ற பேரணிகள் நடத்தவேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

**வியுக்தியார்:** அட நீங்கள் வேற. மக்களுக்கு ஒரு வேளை சோறும் குடிமகன்களுக்கு ஒரு வேளை குடியும் இலவசமாகக் கிடைக்கவிருக்கின்றது என்றால் அதுகும் நல்லதுதானே. கட்சிகள் அல்லது கட்சியின் முக்கியஸ்தர்கள் தத்தமது செல்வாக்கை நிரூபிக்க தம்மிடமுள்ள கறுப்புப்பணத்தை வெளியே எடுப்பார்கள். தமது செலவில் பஸ்களை ஏற்பாடு செய்வார்கள். அழைத்து வருகின்ற மக்களுக்கு சாப்பாடு கிடைக்கும். எதுவோ கறுப்புப்பணம் வெளியே வந்து மக்களுக்கு சேரவிருக்கின்றது. அதற்காகவாவது நல்லதுதானே.

**சபா. கதிர், குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** ஏற்கனவே நாற்பது வருடங்களாக அமுலில் இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைவிட மிக மோசமான முறையில் மனித உரிமைகளை மீறத்தக்கதோர் பங்கரவாத எதிர்ப்பு சட்டம் ஒன்றை அரசாங்கம் முன்மொழிந்திருக்கின்றது. அந்த சட்டமூலத்தை வாபஸ் பெறுமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச சமூகத்திடம் நமது புத்திஜீவிகள் குழு ஒன்று கோரிக்கை விடுத்திருக்கின்றதே. அரசாங்கம் இனியாவது அதனை வாபஸ் வாங்குமா?

**வியுக்தியார்:** நாநூற்றிஐம்பதுக்கும் அதிகமான புத்திஜீவிகள் குழு ஒன்று அப்படியொரு கோரிக்கையை விடுத்ததாக நானும் செய்திகளில் படித்தேன். அந்த நானூற்றி ஐம்பது பேரும் பாராளுமன்றில் இருக்கின்ற இருநூற்றி இருபத்தி ஐந்துபேரையும் சந்தித்து அந்த சட்டத்திலுள்ள ஆபத்துக்களை எடுத்துச் சொல்லி அவர்களை அதற்கு ஆதரவு வழங்கவேண்டாம் என்று கேட்டிருக்கலாமே. அரசாங்கம் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அதனை பாராளுமன்றில் சட்டமாக்கவேண் டியது அந்த எம்.பி.க்கள் தானே. இப்போது அரசாங் கத்திலுள்ளவர்கள் எதிர்காலத்தில் எதிரணிக்கு போனால் அப்போது இருக்கும் அரசாங்கம் இவர்களையும் இந்தச் சட்டத்தால் தண்டிக்கலாம்தானே. எடுத்ததற்கெல்லாம் சர்வதேசத் திடம் கையேந்தாமல் நம்மவர்களையே அதற்கு எதிராக மாற்றவேண்டும் என்பதை இந்த புத்திஜீவிகள் என்போர் புரிந்துகொள்ளவேண்டும்.

**எஸ் பீற்றர்போல், இரண்டாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** இலங்கை மத்திய வங்கியின் பெட்டகத்திலிருந்து 50 இலட்சம் ரூபா பணம் காணாமல்போன சம்பவம் தொடர்பில், மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் பலர் கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனராமே. மத்தியவங்கியிலேயே பணம் காணாமல் போகின்றது என்றால், நாட்டின் மற்றைய இடங்கள் பற்றி நினைத்துப்பாருங்களேன்.

**வியுக்தியார்:** மத்தியவங்கியில் பெட்டகத்திலிருந்து பணம் காணாமல்போனது என்னவோ இது முதல்தடவையாக இருக்கலாம். ஆனால் மத்தியவங்கியில் பிணைமுறி வழங்கப்பட்டதில் முறைகேடு இடம்பெற்று பல பில்லியன் ரூபாக்கள் "காணாமல்போன" சம்பவம் நமக்கு தெரிந்ததுதானே. எனக்கு என்னவோ இவ்வளவு சிறிய தொகையை யாரும் திருடியிருப்பார்கள் என்று நம்பமுடியவில்லை. திருடுவார்கள் எனில் இப்படி 50 இலட்சத்தையா திருடவேண்டும்? அது எங்கோ கணக்கில் தவறு நடந்ததாகத்தான் நினைக்கின்றேன்.

# இருக்கிறன்



ரஞ்ஜனி சுப்ரமணியம்

ஆறுமுகத்தாற்றை முகம் பெருத்த யோசனையில் ஆழ்ந்திருந்தது. தலையை பக்கவாட்டில் குலுக்கிக் கொண்டார். எதுவும் தோன்றவில்லை. மேலும் கீழுமாகப் பார்த்து யோசித்தார். அதுவும் சரிவரவில்லை.ஒழுகும் மூக்கைப் துடைப்பதற்கு என்று கைகாவலாக வாயில் கவ்வும் கை லேஞ்சியையும் வழமை போல கவ்விக் கொண்டார். அவனிட்டையாவது கேட்டுப் பாப்பம்.

"டேய் தர்மா...தர்மா" என்று அதட்டலாகக் கூப்பிட்டார். வேலையில் இருந்த செருக்கு இன்னும் மறையவில்லை.

கழிவறையில் இருந்து அவனும் அதே தொனியில் பதில் சொன்னான்.

"கொஞ்சங் இருக்க மாத்தையா. இந்தா வாறேங். இப்பதா வந்தது. நா கக்கூஸ் போ வாணாமா" ?

"சரி சரி இருந்திட்டு வடிவா கையை கழுவிக் கொண்டு வந்து சேரு" என்று நக்கலாய் சொன்னவர் சிந்தனையைத் தொடர்ந்தார்.

அங்கை என்னை கூட்டிக் கொண்டு போவினமோ மாட்டினமோ. என்னட்டை ஊர் புதினங்கள் சொல்லவும், எங்கையும் கூட்டிக் கொண்டு போகவும் யார் இருக்கினம். எல்லாருக்கும் அவரவற்றை வேலை. இந்தக் கலி காலத்திலை அவையையும் குறை சொல்ல ஏலாது. ஓடியாடி நாலு காசு பாத்தாத் தானே இங்கத்த விலைவாசியிலை சீவிக்கலாம். எனக்கு ஏலுமான காலத்திலை அவைக்கு இவைக்கெண்டு எல்லாருக்கும் தானே ஓடித் திரிஞ்சனான். எத்தினை கியூவிலை நிண்டு சொந்த பந்தங்களுக்கு தேவையானதை செய்து குடுத்திருப்பன். எல்லாற்றை அன்பும் நான் ஓடித் திரியுற மட்டும்தான் போல. இப்ப என்னைக் கூட்டிக் கொண்டு போக கெஞ்ச வேண்டி இருக்கு.

இவன் பாவி தர்மா என்னோட கூட வந்தாத்தானே எங்கையும் போக ஏலும் எண்டாகிப் போச்சுது. இல்லாட்டி இடுப்பால கழண்டு விழப் போறன் எண்டு நிக்கிற களுசானை யார் டக்கெண்டு பிடிப்பினம். அண்டைக்கு ஒருநாள் பாங்குக்கு போகேக்குள்ளை அருந்தப்பு. மானம் போகப் பாத்துது. கைத்தடியைக் கொண்டு போனாலும் கால் தடுக்கி விழத்தான் பாக்குது. அவன்தானே பிடிக்க வேணும்.

சரி சரி விடுவம். என்னைக் கொண்டு போய் வேறை எங்கையாவது வெளி இடத்திலை தள்ளாமை, பாத்துக் கொள்றதுக்கு ஆளையும் கூட வைச்சு தங்களோட வைச்சிருக்கினம் தானே. பிள்ளையளை குறை சொல்லப்படாது.

அலுப்போடும் ஆதங்கத்தோடும் நினைத்துக் கொண்டார். முன்னால் யாரோ இருப்பது போல ஒன்றிரண்டை வாய்விட்டு சொல்லியும் கொண்டார். முந்தி மாதிரி தனிய நாலு இடத்துக்கு போய் வர விடுகினம் இல்லை என்பது அவரது ஆதங்கம். இன்னும் தான் ஒரு இளந்தாரி என்ற நினைப்பு முழுசாகப் போகவில்லை.

பாலனுக்கு சுகமில்லையாம். நானும் ஒரு மாதமாக கேட்டுக் கொண்டு இருக்கிறன். அங்கை இங்கை வெளிக்கிட்டுப் போய் ஏதும் வருத்தத்தை வாங்கிக் கொண்டு வந்தால் தங்களுக்கு கரைச்சலாம் எண்டு சொல்லுகினம். தர்மாவோடு தனிய அனுப்பிறதும் இல்லை. விழுந்தாலும் பிடிக்க இன்னொரு ஆளும் வர வேணுமாம். அவன் பாலன் மச்சான்ரை மகனெண்டாலும் கலியாணம் கட்டும் வரைக்கும் என்னோடை இருந்து வளந்த பெடியன். மாமா எண்டு சொல்லாமல் தாத்தா எண்டுதான் செல்லமாயும் பகிடியாயும் கூப்பிடுவான். என்ன சொன்னாலும் பக்குபக்கெண்டு செய்து தருவான். கடைசியா ஆறு மாசத்துக்கு முதல் என்ரை பிறந்தநாளுக்கு வந்தபோது கண்டது. எனக்கு ஹோர்லிக்ஸ் மாவும் இரண்டு சேர்ட்டும் வாங்கிக் கொண்டு வந்தவன். அப்பவே ஆள் கொஞ்சம் வாடிப் கறுத்துப் போய்த்தான் இருந்தவன்.

என்னடாப்பா எண்டு கேட்டால் "எனக்கும் டயபிடிக் எல்லோ வந்திட்டுது. கொலஸ்ரோலும் கூடத்தானாம். இந்த டொக்டர்மார் உழைப்புக்கு சொல்லுறதுகள் தானே. நான் அவை சொல்றதை கணக்கெடுக்க மாட்டன்". எண்டு வலு பெருமையாய் சொன்னான். குலகௌரவம் போல பாவனை. இங்கை எல்லாருக்கும் உப்பிடியான கொழுப்பு கூடத்தான். அதால தான் மெலிஞ்சு போனானாம்.

"கவனம் ராசா. சீனி, கொலஸ்ரோல் கண்ரோல்ல இல்லாட்டி பிறகு பெரிய பெரிய பிரச்சனைகள் வரும். அடிக்கடி செக் பண்ணி குளிசையளை ஒழுங்கா போடு" எண்டு புத்திமதி சொல்லித்தான் அனுப்பினனான். கேட்டாத் தானே?

ஒரு பத்து இருபது வருசம் முந்தி நீங்கள் அவனைப் பாத்திருக்க வேணும். நல்ல சிவலையும் வடிவும். கட்டுமஸ்தான இளந்தாரி எண்டதால கன பெட்டையளும் அவனைப் பாத்துக் கொண்டு திரிஞ்சது எனக்கும் தெரியும். அவளவை எழுதின ஒன்றிரண்டு கடிதங்களை கள்ளமா வாசிச்சும் இருக்கிறன். இவன் நல்ல கண்ணியமான பெடியன். பிடி கொடுத்து எழுத மாட்டான். ஆனா இதெல்லாம் எனக்குத் தெரியுமெண்டு அவனுக்குத்தான் தெரியாது. ஒண்டும் தெரியாதெண்டுதான் நினைச்சுக் கொண்டு இருந்தவன். சின்னனிலை நாங்கள் செய்யாத விளையாட்டோ, சேட்டையோ...உதுகள் எங்களுக்கு விளங்காம இருக்கிறதுக்கு...?

இளமையின் சில நினைவுகள் மனவோரம் துளிர்க்க ஒன்றிரண்டு பல் மட்டுமே மிச்சமிருந்த பொக்கை வாயால் சிரித்து வெட்கமாக தலையைக் குனிந்து கொண்டார். பதினைஞ்சு வருசத்துக்கு முதல் தன்னை விட்டுப் பிரிந்த காதல் மனையாள் யோகத்தையும் நினைத்துக் கொண்டார். அவள் இருந்திருந்தா அவளோட சண்டை பிடிச்சுக் கொண்டாவது பொழுது போயிருக்கும். டாக்குத்தர்மாருக்கும் பிடிபடாத தன்ரை வருத்தங்களைப் பற்றி விலாவாரியாக சொல்லவாவது அவரோட கதைச்சுக் கொண்டிருப்பாள். மனப்பயத்திலையே அவளுக்கு காலம் கழிஞ்சுது.

"உங்களுக்கு வருத்தம் ஒண்டும் இல்லை அம்மா.வருத்தம் எண்டு கடுமையாய் யோசிக்கிறதாலைதான் மண்டை விறைக்குது" எண்டு சொல்லுற டாக்குத்தர்மாரை அவளுக்கு சுத்தமாய் பிடிக்காது. "அப்பிடி என்ன ஒருத்தருக்கும் பிடிபடாத வருத்தம். மெய்யே சொல்லுங் கோவனப்பா" என்று அவரை போட்டு அரித்தெடுப்பாள். கரைச்சல் தாங்கேலாமல் "நான் செத்தா நேர மோட்சம் தானப்பா. இப்ப இருக்கிறது நரகம்" எண்டு தான் பகிடியாய் சொல்லுவது ஞாபகத்தில் வர சோகமாக புன்னகைத்துக் கொண்டார்.

என்னை விட்டுட்டு அவள் ஒரு இடமும் போனதில்லையே. என்னையும் எங்கையும் போகவிட மாட்டாள். அவ்வளவு அன்பெண்டு நீங்கள் பொறாமைப் படுகிறியளோ? ச்சாச்சா...நவீன சாவித்திரி அவள். நான் இல்லாத நேரம் பாத்து பாசக்கயித்தோடு யாராவது வந்திட்டாலும் எண்ட பயந்தான். அந்தாளை வரவிடாம பண்ண கனகாலமா வீட்டுக் காவலில் தான் நான் இருந்தது. அந்தாளுக்கும் என்னிலை சரியான பயம். இருந்தாப் போல ஒருநாள் நெஞ்சுவலி எண்டு அவள் சொல்லேக்குள்ளை ஒருத்தரும் அதைக் கணக்கிலை எடுக்கேல்லை. ஏனெண்டா அவளுக்கு நெஞ்சுவலி வராட்டித்தான் புதினம். முப்பது நாப்பது வருசமா உதைத்தானே சொல்லிக் கொண்டு இருந்தவ.

கடைசியிலை புலி வரும் போது ஒருத்தரும் கணக்கிலை எடுக்கேல்லை . அதிஸ்டக்காரி பொசுக்கெண்டு ஏகாதசித் திதியிலை போய்ச் சேந்திட்டாள். நேர சொர்க்கம் தானாம் எண்டு யாரோ சொல்லிச்சினம். சரி அப்ப எனக்கு சொர்க்கத்துக்கும் இனிப் போகேலாது...பிறகு அங்கையும் சண்டை வந்திடுமோ தெரியேல்லை. ஆனா நான் அவளுக்கு ஒரு குறையும் வைக்கேல்லை எண்ட நிம்மதி எனக்கிருக்கு. உடுப்பு கூட நான் தானே கழுவிக் குடுத்தனான்.வாய்க்கு இதமாக குழைஞ்ச சோறு புட்டு எண்டு ஏலுமானதெல்லாம் செய்தும் குடுத்தனான். இப்ப நான் அரிசி அவியேல்லை எண்டு சொன்னாலும் சமைக்கிற மனிசிக்கு பிடிக்குதில்லை. இந்தாளோடை பெரிய கரைச்சலெண்டு முறைச்சு முறைச்சுப் பாக்குது.

அவரது நினைவுகள் தாறுமாறாக அலைந்தன.மீண்டும் நினைவு பாலனிடம் வந்து நின்றது. அவனுக்கு கிட்னியும் லிவரும் நல்லாப் பழுதாப் போச்சுதாம். கண்ணும் பார்வை மங்கலாய் தான் தெரியுதாம். கால் மரத்துப் போச்சுதாம். அவனைப் பாத்திட்டு வந்தவை சொல்லிச்சினம்.தாய் தகப்பன் இரண்டு பேருக்கும் சீனி வருத்தம் இருக்கெண்டால் இவன் முதலே கவனமாக இருந்திருக்க வேணும். வெளி ஊருகளுக்கு வேலை வேலை எண்டு ஓடித் திரிஞ்சான். சாப்பாட்டிலை கவனம் இல்லை. அவன்ரை மனிசி வீட்டிலை கொண்ட்ரோலா இருந்தாலும், இடாச்சுக் கொண்டு வெளியிலை போய் கண்டதையும் சாப்பிட்டுட்டு கமுக்கமாக ஒண்டும் தெரியாத அப்பாவி மாதிரி இருப்பான். அப்ப தெரியேல்ல. கால் கை வீங்கி உடம்பெல்லாம் சிரங்கு போல வந்த பிறகுதான் விசயம் இன்னதெண்டு தெரிஞ்சுது. உதுக்கு நாங்கள் என்ன செய்யிறது.

என்னை ஓடி ஓடி வந்து பாக்கிற பெடியன். சுகமில்லாம இருக்கிறான் எண்டால் நான் போய் பாக்கத்தானே வேணும். நாளைக்கு என்ர காலம் முடிஞ்சு அந்த மனக்குறையோட நான் போகக் கூடாதெண்ட விசயம் இந்தப் பிள்ளையளுக்கு விளங்கினாத்தானே? இண்டைக்கும் ஒருதரம் கேட்டுப் பாப்பம் எண்டால் காலையிலை இருந்து ஒருத்தரையும் காணேல்லை. ஒருத்தற்றை முகமும் சரியாக இல்லை. பதற்றமாய் தான் இருக்கினம். எப்பவும் சில்லுக்கட்டின மாதிரி ஓட்டம்தான்.சூடு பட்ட நாயள் தோத்துப் போயிடும்.

இந்தா மகன் வந்திட்டான். "தம்பி வேலையோ? என்னை ஒருக்கா பாலனை பாக்க கூட்டிக் கொண்டு போறியோ ? எத்தினை நாள் கேட்டிட்டன். ஆஸ்பத்திரி என்ன அவ்வளவு தூரமே...."

தம்பி வழக்கம் போல அதிகம் பேசேல்லை. ""சரி சரி பின்னேரம் போவம்"

அப்பாடி...சந்தோசம் தாங்கவில்லை ஆறுமுகத்தாருக்கு. "பாலனுக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு போக வேணும். பாவம்." என்று அனுங்கிக்கொண்டார்...

பின்னேரம் போறதுக்கு இப்பவே ரெடியாகத் தொடங்கினார்.

"டேய் தர்மா. மீசை தாடியெல்லாம் வளந்து போச்சுதடா. வடிவா ஷேவ் பண்ணி தலைமயிரையும் கொஞ்சம் வெட்டி விடு. உச்சியிலை இருக்கிற மயிரை கூட வெட்டிப் போடாதை. அது இருந்தாத் தான் எனக்கு வடிவு"

தர்மா கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டான். ராங்கியாகக் கதைச்சாலும் ஆறுமுகத்தாரை நல்ல கவனமாகத்தான் பார்த்துக் கொண்டான். அவரைக் குளிக்க வைத்து நல்ல சேர்ட்டும் போட்டு விட்டான். "டேய் பம்பேர்சை கட்டி விடடா. ஆஸ்பத்திரியிலை அவசரத்துக்கு போகேலுமோ தெரியாது.எனக்கு ஒண்டுக்கு வந்தால் அடக்க ஏலாது.பறபறவெண்டு கீழாலை போயிடும்".

சரி. எல்லாம் ஆயத்தம். புது கைலேஞ்சி ஒன்றை எடுத்து வாயில் கவ்விக் கொண்டார். போற வழியிலை தர்மாட்டை சொல்லி அப்பிள் வாங்குவம். மற்றதுகளை விட சீனி வருத்தக்காரருக்கு அப்பிள் நல்லது.மனதுக்குள் சொல்லிக் கொண்டார். மகன் வான் கொண்டு வந்திட்டான் போல இருக்கு. கைத்தாங்கலாக தர்மேயுடன் எழுந்தார். களுசானை கவனமாக மேலே இழுத்து விட்டுக் கொண்டார்.

"சரி தம்பி வெளிக்கிடுவம்".

காலி வீதியை நோக்கி வான் ஓடத் தொடங்கியது. கார்கில்ஸ் பூட் சிட்டியைக் கண்டதும் "தம்பி கொஞ்சம் வானை நிப்பாட்டு. அப்பிள் வாங்க வேணும்"

தம்பிக்கு காதில் கேட்டதாகத் தெரியவில்லை.

அது சரி .ஏன் வான் இந்தப் பக்கமா போகுது ?

அவருக்கு கொழும்பு அத்துபடி. "கொழும்பிலை நான் சுத்தாத இடமோ ? அதுவும் வயசு போன காலத்திலை எட்டுப் போட்டுக் காட்டி எடுத்த லைசன்சிலை ஊ.வு.டீ பஸ்ஸை அறம்புறமா ஓவர்டேக் பண்ணின ஆள் நானெல்லோ. இப்ப தம்பியிட்டை வான் எங்கை போகுது எண்டு கேக்க பயமாக் கிடக்குது."பலத்த யோசனையில் இருந்த ஆறுமுகத்தார் வான் பிரேக் அடிக்க நனவுக்கு வந்தார்.

வான் பாதை மாறிய குழப்பத்தில் மலங்க விழித்த ஆறுமுகத்தாருக்கு பகீர் என்றது. இதென்ன மலர்ச்சாலைக்கு முன்னால் வான் நிக்குது. அவருக்கு தொண்டை உலர்ந்தது. உடல் அதிகமாக நடுங்கத் தொடங்கியது.

"அப்பா கவனமா பாத்து இறங்குங்கோ"

சுற்றும்முற்றும் பார்த்து மிலாந்திய கண்ணுடன் இறங்கினார். வலது கையில் கைபிடி. இடது பக்கமாக தர்மே பிடிக்க தள்ளாடி தள்ளாடி நடந்தார். அவர் மௌனத்தில் உறைந்திருந்தார். மலர்ச்சாலையில் நிறைசனம்.

அறிந்தவர்கள் நண்பர்கள் உறவினர்கள் நிறைந்திருக்க பாலன் நடுக்கூடத்தில் கிடத்தப்பட்டிருந்தான். முகம் செழுமையாக முன்பு பார்த்த பாலன்போல இருந்தான். அவனுடைய மனைவி இடப்பக்கமும் தாய் வலப்பக்கமும் பிள்ளைகள் கால்மாட்டிலும் தலைமாட்டிலும் நிற்பது தெரிந்தது. தர்மா கைத்தாங்கலாகப் பிடிக்க மெதுவாக அடிமேல் அடி வைத்துப் பக்கத்தில் சென்றார். இவர் வந்ததும் கனத்த மௌனத்தில் ஆழ்ந்திருந்த இடம் அழுகையும் விசும்பலும் கதறலுமாய் நிறைந்தது. அவரால் அசைய முடியவில்லை. கால்கள் சோர நடுங்கினார். பாலனின் உடல் கிடத்தப் பட்டிருந்த பெட்டியின் பக்கங்களில் இருந்த கம்பிகளை இறுகப் பிடித்தார். மேலே வெள்ளை கட்டுவதற்காகப் போட்டிருந்த கம்பிகள் ஆடத் தொடங்க, யாரோ பக்கத்தில் இருந்த கதிரையில் அமர்த்தினார்கள். பாலனின் தாய் ஒருபக்கம் மனைவி ஒருபக்கமாக தோளில் சாய்ந்து கதறத் தொடங்கினார்கள். பாலனின் அம்மாவின் குரல் காதுக்குள் அறைந்து தாக்கியது.

"ஐயோ தம்பி, அம்மா நான் குத்துக்கல்லு போல இருக்க ஐம்பதிலை நீ போயிட்டியே ராசா... நூறு வயசிலை தாத்தா உன்னை இந்தக் கோலத்தில் பாக்க வைச்சிட்டியே அப்பு.இனி நான் என்னடா செய்வன். பெண்சாதி பிள்ளைகளை விட்டிட்டு இப்பிடி அகாலத்திலை போயிட்டியே ராசா. உனக்கு இருதயம் நிண்டு போச்சாமே. எனக்கு நிண்டு போயிருக்கக் கூடாதோ...?

மனைவி செத்ததுக்குக் கூட அழாதவர் ஆறுமுகத்தார். யாரும் பாக்கினமோ என்று நாலு பக்கமும் பார்த்தார். என்ன நினைத்தாரோ...? மூக்காலும் கண்ணாலும் நீர் பெருக, அழுகையும் சிரிப்புமற்ற விநோத குரலில் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினார்.

●

# புனித வெள்ளி பெல்பாஸ்ட் உடன்பாட்டால் முடிவுக்கு வந்த வட அயர்லாந்தின் உள்நாட்டுப் போர்






புனித வெள்ளி ஒப்பந்தமான 'பெல்பாஸ்ட் உடன்பாடு' (Belfast Agreement) ஏற்பட்டு 25வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் இந்த வருடத்தில், வட அயர்லாந்தின் உள்நாட்டுப் போரினை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஏற்பட்ட கடுமையான சவால்களை அந்நாட்டு மக்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டனர்.

**புனித வெள்ளி உடன்பாடு**

"புனித வெள்ளி உடன்பாடு" என பரவலாக அழைக்கப்படும் இவ்வுடன்பாடு பெல்பாஸ்ட் நகரில் ஏப்ரல் 10, 1998, புனித வெள்ளி தினத்தன்று ஐக்கிய இராச்சிய அரசுக்கும் அயர்லாந்துக் குடியரசுக்கும் இடையில் வட அயர்லாந்தின் முக்கிய அரசியல் கட்சிகளின் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கை சுயநிர்ணய கோட்பாட்டின் அடிப்படையில் வட அயர்லாந்தின் உள்நாட்டுப் போரினை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஏற்பட்ட மிக முக்கியமான அரசியல் உடன்பாட்டாக அமைந்திருந்தது.

**உயிர்த்தெழுந்த ஈஸ்டர் எழுச்சி**

அந்நிய ஆக்கிரமிப்புக்குள்ளும் அடக்குமுறைக்குள்ளும் தொடர்ந்தும் வாழமுடியாது, தம்மை எதிர்த்து நிற்பது தம்மைவிட பலம்வாய்ந்த படைகள் என்றாலும் தமது தேசத்தின் சுதந்திரத்திற்காக தாம் போராடியே ஆகவேண்டும் என்ற முடிவு அயர்லாந்தின் புரட்சியாளர்களால் எடுக்கப்பட்டது. இவ்வாறு எடுக்கப்பட்ட முடிவை அமுல்படுத்துவதற்காக இயேசுபிரான் மரித்து அவர் மீண்டும் உயிர்த்தெழுந்த காலப்பகுதி நிர்ணயிக்கப்படுகிறது.

அதன் நிமிர்த்தம் இந்த எழுச்சி ஈஸ்டர் எழுச்சி என பெயரிடப்பட்டு 24 ஏப்ரல் 1916 வெடித்தது.

பிரித்தானியப் படைகளின் காரணமற்ற கைதுகளும் தடுத்து வைப்புகளும் ஆத்திர அலையை அயர்லாந்து மக்களிடம் ஏற்படுத்தியது.ஈற்றில் மக்கள் மயப்படுத்தப்படாத போராட்டம், தலைமைத்துவங்களுக்கு இடையில் நிலவிய முரண்பாடுகள், திட்டமிடல், தொடர்பாடல், ஒருங்கிணைப்பு மற்றும் கட்டளை வழங்கலில் காணப்பட்ட பலவீனங்கள் போன்றவற்றால் நுயளவநச சுளைபெ தோல்வியில் முடிந்தது.

ஐரிஷ் குடியரசுக் கட்சியின் துணைராணுவ அமைப்பு நீண்ட தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி, வடக்கு அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆட்சியைத் தடுத்து நிறுத்துவதற்கும், அயர்லாந்து முழுவதிலும் ஒரு சுயாதீன குடியரசை கொண்டுவருவதற்கும் பிற வழிமுறைகளில் போராடியது. ஐ.ஆர்.ஏ மற்றும் பிற ராணுவ குழுக்கள் பிரிட்டிஷ் பாதுகாப்புப் படைகளுக்கு இடையே வன்முறை மோதல்களைக் கண்ட 30 ஆண்டு காலம் கொடூரமானதாகும்.

**ஐ.ஆர்.ஏ**
**ஆயுதப் போராட்டம்**

அயர்லாந்தின் சுதந்திரத்துக்கான ஆயுதப் போராட்டத்தை நடத்திய அயர் லாந்து குடியரசு இராணுவம் - ஐ.ஆர்.ஏ பின்னர் ஐக்கிய அயர்லாந்தையும் வலியுறுத்தி தனது தாக்குதல்களை முன்னெடுத்தது. அதேபோன்று, சின் பையின் என்ற அயர்லாந்தின் முதன்மையான அரசியல் அமைப்பு அரசியல் போராட்டத்தை சுமார் நூறு வருடங்களாக தொடர்ந்தும் மேற்கொண்டுவருகிறது.




சின் பையினின் ஆயுத அமைப்பே ஐ.ஆர்.ஏ என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தாலும் சின் பையினின் அயர்லாந்தின் சுதந்திரத்துக்கான போராட்டம் தடைகளை தகர்த்து முன்னகர்த்தியது.

**எண்ணூறு வருட போராட்ட வரலாறு**

ஆங்கில அதிகாரத்தை அயர்லாந்தில் நிலைநிறுத்த முயற்சித்த பிரித்தானியர்களுக்கும், தனித்துவத்தையும் தன்னாட்சியையும் நிலைநிறுத்த போராடிய அயர்லாந்து குடியரசுக்குமிடையிலான மோதுகை சுமார் எண்ணூறு வருட வரலாற்றைக் கொண்டது. ஆயினும், கத்தோலிக்கர்களை பெரும்பான்மை யாகக் கொண்ட அயர்லாந்தை புரொட் டஸ்தாந்தை பெரும்பான்மையாகக் கொண்ட ஐக்கிய இராச்சியத்துடன் 1801இல் இணைத்த போது தீவிர ஆயுத மோதல்களுக்கான அடித்தளமிடப்பட்டது.

**அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆட்சி**

1919 இல் வடக்கு அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆட்சி ஆயுதப்படைகளைப் பயன்படுத்தி நிறுவப்பட்டது. அதன்பின் ஐரிஷ் குடியரசு இராணுவமான ஐ.ஆர்.ஏ, சுதந்திரத்துக்காகவும் மீண்டும் ஒன்றிணைந்த குடியரசாகவும் போராடியது. பெரும்பாலும் ஐரிஷ் தேசியவாத அரசியல் கட்சியான சின் ஃபைனுடன் இணைந்து போராடியது.

1969 ஆம் ஆண்டில், வடக்கு அயர் லாந்தில் இருந்து பிரிட்டிஷ் விலக வேண்டும் என்று கோரி ஐஆர்ஏ அமைப்பு வன்முறை போராட்டங்களை பயன்படுத்தினர். இதன் விளைவாக 600க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உட்பட 1,800 பேர் இறந்தனர்.

**இரத்தக்களரி ஞாயிறு**

இரத்தக்களரி ஞாயிறு என அறியப்படும் ஜனவரி 30, 1972 அன்று , நிராயுதபாணியான பதின்மூன்று கத்தோலிக்க சிவில் உரிமை ஆர்ப்பாட்டக் காரர்கள் வடக்கு அயர்லாந்தில் டெர்ரியில் நடந்த ஒரு சிவில் உரிமைகள் அணிவகுப்பின் போது பிரிட்டிஷ் படைகளால் கொல்லப்பட்டும், 15 பேர் காய முற்றனர்.

பாதிக்கப்பட்டவர்களை துப்பாக்கி ஏந்தியவர்கள் மற்றும் குண்டுவீச்சுக்காரர்கள் என்று பிரிட்டிஷ் இராணுவம் பொய்யாக பரப்புரை ஆற்றியது.

**பாபி சாண்ட்ஸ் உண்ணாவிரதம்:**

அயர்லாந்தின் நீண்ட கால ஆயுதப் போராட்டத்தில், பாபி சாண்ட்ஸ் போன்ற அகிம்சை வழிப் போராளிகளும் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளனர்.

அவர் 66 நாள் உண்ணாவிரதம் இருந்து 1981 மே 5 அன்று இறந்தார். இதன்பின் பெல்ஃபாஸ்டில் பாரிய கலவரம் ஏற்பட்டு 100,000 பேர் அவரது இறுதி சடங்கில் கலந்து கொண்டனர்.

வன்முறைகளால் தீவிரம் பெற்ற அயர்லாந்தில் மார்ச் 6, 1988 ஜிப்ரால்டரில் மூன்று நிராயுதபாணியான ஐஆர்ஏ உறுப்பினர்கள் பிரிட்டிஷ் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இறுதிச் சடங்கு நாட்களில், இரண்டு பிரிட்டிஷ் வீரர்கள் தற்செயலாக ஊர்வலத்தில் சென்று தங்கள் வாகனத்திலிருந்து இழுத்துச் செல்லப்பட்டு, அடித்து சுட்டுக் கொல்லப்பட்ட கொடூர அந்த காட்சியை உலகெங்கும் டிவி கேமராக்கள் பதிவு செய்தன.

இதன்பின் ஆகஸ்ட் 31, 1994 பல மாதங்கள் இரகசிய பேச்சுவார்த்தைகள், நீண்ட கால குண்டுவெடிப்பு - துப்பாக்கிச் சூடுகளுக்குப் பிறகு, ஐஆர்ஏ ஒரு வரலாற்று யுத்த நிறுத்தத்தை "இராணுவ நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்துவதாக" அறிவித்தது.

**புனித வெள்ளி ஒப்பந்தம் :**

அயர்லாந்தில் செப்டம்பர் 15, 1997இல் முதல் முறையாக, முறையான சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த பிரிட்டன் சின் ஃபைனுடன் சம்மதித்தன. பின்னர் ஏப்ரல் 10, 1998 இல் பெல்ஃபாஸ்ட் ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படும் புனித வெள்ளி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

மே 23இல் ஐரிஷ் குடியரசின் வடக்கு அயர்லாந்தில் வாக்கெடுப்பு நிறைவேற்றப்பட்டது. 2005 ஜூலை 28 இல் ஐஆர்ஏ தனது 36 ஆண்டுகால ஆயுத போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக முறையாக அறிவித்தது.

**புலம்பெயர்**
**அயர்லாந்து மக்கள்:**

சுதந்திரத்துக்கான போர் பல மில்லியன் அயர்லாந்து மக்களை உல கெங்கும் புலம்பெயர வைத்தது. அயர் லாந்து குடியரசில் வாழும் அயர்லாந்து மக்களின் எண்ணிக்கையோ சுமார் 4.6 மில்லியன்.

ஆனால், அயர்லாந்தை அடியாகக் கொண்ட சுமார் 70 மில்லியனுக்கு மேற்பட்ட அயர்லாந்து மக்கள் உலகெங்கும் பரந்து வாழ்கிறார்கள். புலம்பெயர்ந்த அயர்லாந்து மக்கள், உலகில் பலம் வாய்ந்த புலம்பெயர்ந்த சமூகக் கட்டமைப்புகளில் முக்கியமான தரப்பா கும். அவர்கள் தனித்து உணர்வுரீதியான செயற்பாடுகளுடன் மட்டும் தமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்த வில்லை. மாறாக, ஐக்கிய அயர்லாந்தின் சுதந்திரம் தொடங்கி ஐக்கிய அயர்லாந் தின் உருவாக்கம் வரை சொந்த நிகழ்ச்சி நிரலில் நேர்த்தியான நிர்வாக முகாமைத்துவத்தோடு தமக்குரிய செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள்.

**தொடரும் அரசியல் போராட்டம்:**

அரசியல் போராட்டம், ஆயுதப் போராட்டம், போர் நிறுத்த உடன்பாடுகள், சமாதானப் பேச்சுவார்த்தைகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்று நீடித்த போதும் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வட அயர்லாந்து, அயர்லாந்து குடியரசுடன் இணைக்கப்பட்டு ஐக்கிய அயர்லாந்து உருவாக வேண்டும் என்ற இலட்சியத்தில் சின் பையின் தொடந்தும் உறுதியாக இன்னமும் இருந்து வருகிறது. ■



# குருமன்வெளி-மண்டூர் படகுப் பாதையில் திடீரென நிதி அறவீடு செய்வதால் எதிர்ப்பு

மட்டக்களப்பு, ஏப். 16

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரை மற்றும் எழுவாங்கரைப் பகுதியை ஊடறுத்துச் செல்வதே இலங்கையின் மிக இரண்டாவது நீளமான வாவியாகக் கருதப்படும் மட்டக்களப்பு வாவியாகும்.

இவ்வாவியைக் கடந்தே இருபகுதிக்குமான போக்குவரத்து மார்க்கங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதில் பிரதான போக்குவரத்து மார்க்கங்களில் ஒன்றாகக் கருதப்படுவது குருமண்வெளி - மண்டூர் படகுப்பாதைப் போக்குவரத்தாகும்.

இதுவரைகாலமும் எதுவித கொடுப்பனவுகளையும் செலுத்தாமலேயே அப்பாதையினூடாக பிரயாணிகள் தமது போக்குவரத்துக்களை மேற்கொண்டு வந்துள்ளனர்.

எனினும் கடந்த முதலாம் திகதி முதல் இப்படகுப்பாதையில் போக்குவரத்துச் செய்யும் பயணிகளிடம் கட்டணம் அறவிடப்படும் என கட்டண விவரங்கள் அடங்கிய பாதாகை ஒன்று வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளரினால் காட்சிப் படுத்தப்பட்டிருந்தது.

அதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததையடுத்து, கடந்த முதலாம் திகதி நிதி வசூலிப்பது நிறுத்தப் பட்டிருந்தது.

நேற்று அப்படகுப் பாதையில் பயணம் செய்யும் பயணிகளிடம் நிதி அறவீடு செய்யப்படுவதாக குறித்த பதாகையில் திகதி மாற்றம் செய்யப் பட்டதோடு, நிதி வசூலிப்பதற்குரிய பற்றுச் சீட்டுக்களுடன் பொறியியலாளர்கள், மற்றும் நிதி அறவீடு செய்யும் உத்தியோகஸ்த்தர்களும் திடீரென வருகை தந்து படகுப்பாதையில் நிதி அறவீடு செய்த பின்னர் பாதையில் பயணம் செய்வதற்கு அனுமதித்தனர்.

இதற்கு அப்பகுதி மக்கள் தமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். இதனால் குறித்த போக்குவரத்து மார்க்கத்தில் ஈடுபடும் 2 படகுகளும், முற்பகல் 11.30 மணிவரையில் சேவையிலீடுபடவில்லை.

தாம் இதுவரையில் எதுவித கட்டணங்களும் செலுத்தாமலேயே தமது போக்குவரத்துக்களை இதில் மேற்கொண்டு வந்ததாகவும், நேற்றிலிருந்து நிதி அறவீடு செய்யும் நடை முறையை வீதி அபிவிருத்தி திணைக் களம் கைவிடவேண்டும் எனவும், இதற்கு தாம் எதிர்ப்பைத் தெரிவிப்பதாகவும் பயணிகளும், பொதுமக்களும் தெரிவித்தனர்.

எனினும் தமக்கு மேலிடத்திலிருந்து வந்த உத்தரவின் பெயரிலேயே நிதி அறவீடு செய்வதாக அவ்விடத்திலிருந்த வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பொறியியலாளர் ஒருவரும், நிதி வசூலிப் பில் ஈடுபட்ட உத்தியோகஸ்த்தர்களும் தெரிவித்தனர்.

பின்னர் அவ்விடத்திற்கு வந்த களு வாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி பிரயாணிகளுடனும், பொதுமக் களுடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார்.



பொதுமக்களுக்கு அமைதியான முறையில் தமது உரிமைகளைக் கேட்ப தற்கு உரிமையுள்ளது. ஆனால் போக்குவரத்தில் ஈடுபடுபவர்களைத் தடுப்பதற்கு யாருக்கும் அனுமதியில்லை. நிதி அறவீடு செய்வதை தடை செய்ய வேண்டுமாக இருந்தால் உரிய அதிகாரிகளுக்கு மக்கள் எழுத்து மூலமாக விண்ணப்பங்களை வழங்க முடியும்.

எனவே மக்கள் குறித்த பாதையில் போக்குவரத்துச் செய்வதற்கு யாரும் தடை ஏற்படுத்த முடியாது என தெரிவித்து பாதையைசேவையிலீடுபடுத்துமாறு தெரிவித்தமைக்கிணங்க, மக்களின் எதிர்பதையும் மீறி பற்றுச் சீட்டு வழங்கி நிதி வசூலித்த பின்னர் மக்கள் குறித்த பாதையில் போக்குவரத்து தொடர்ந்து இடம்பெற்றது.

பயணிகள்(12 வயதிற்கு மேற்பட்டவர்கள்) 10 ரூபா, சைக்கிள் ஒருவருடன் 30 ரூபா, மோட்டார் ஓட்டுனருடன் 50 ரூபா, ஓட்டோ ஓட்டுநருடன் 100 ரூபா, கார், வான், பிக்கப் ஓட்டுநருடன் 250 ரூபா அறவீடு செய்யப்படுவதுடன், சீருடையுடன் வரும் பாடசாலை மாணவர்களுக்கும், அரச வாகனங்களுக் கும் இலவசமாகவும் பணயம் செய்வ தற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருமன்வெளி - மண்டூர் ஓடத் துறைக்கு நிரந்த் பாலம் அமைப்பதற்காக வேண்டி கடந்த காலங்களில் பல தடவைகள் அடிக்கல் நடப்பட்ட நிலையிலும் அது இதுவரையில் கைகூடாத நிலையிலேயே இருருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பண்டிகைக் காலத்தில் குறைவடைந்த விபத்துகள்

கொழும்பு, ஏப். 16

நேற்று மாலை 6 மணிய வரையான கடந்த 32 மணித்தியாலங்களில் விபத்திற்குள்ளான 200 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். இவர்களில் 78 பேர் நேற்று முன் தினம் விபத் திற்குள்ளாகி யுள்ளதாக தேசிய வைத்திய சாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

புத்தாண்டுக் கொண்டாட்டத்தின்போது, பட்டாசு கொளுத்துவதால் ஏற்படும் விபத்துகள் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்துள்ளதாக தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் குமார விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குறித்த காலப்பகுதியில் தீ விபத்திற்குள்ளான ஒருவர் மாத்திரமே இதுவரை சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)






# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கேட்டு அவுஸ்திரேலியாவில் இலங்கையர் போராட்டம்

கொழும்பு, ஏப். 16

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி கோரி அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நீதி வழங்குமாறும், அதனுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் எதிராக சட்டத்தை அமுல்படுத்துமாறும் கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.




உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான அவுஸ்திரேலிய - இலங்கை சங்கம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. (அ)

# பதவிகளுக்காக நாங்கள் அரசியல் செய்யவில்லை

## கூறுகின்றார் டிலான் பெரேரா

கொழும்பு, ஏப். 16

பதவிகளுக்காக அரசியல் நடத்தவில்லை என்றும் ஆனால் அன்று டலஸ் அழகப்பெருமவின் பெயர் முன்மொழியப்படாமல் இருந்திருந்தால் இன்று ஜி.எல்.பீரிஸே பிரதமாக இருந்திருப்பார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

தமது அணியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளுக்காக அரசியல் நடத்துவது கிடையாது என்றும் கொள்கை அரசியலையே முன்னெடுப்பதாக அவர் மேலும் கூறினார்.

பதவிகள் தேவையில்லை என்று தீர்மானித்த பின்னரே மொட்டு கட்சியில் இருந்து வெளியேறியதாகவும் குறிப்பிட்ட டிலான் பெரேரா, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு பிரதமர் பதவி வழங்கப்படும் எனக் கூறப்பட்டதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்வுக்கான வாக்கெடுப்பின்போது டலஸின் பெயரை அவர் முன்மொழியாமல் இருந்திருந்தால் தற்போது பீரிஸ்தான் பிரதமர் என்றும் டிலான் பெரேரா மேலும் குறிப்பிட்டார். (அ)

# ஏறாவூரில் கோடரியால் தாக்கி ஒருவர் கொலை!

## சந்தேகநபரைத் தேடும் பொலிஸார்

அக்கரைப்பற்று, ஏப். 16

ஏறாவூர் - தளவாயில் கோடரியால் தாக்கி ஒருவர் கொலப்பட்டுள்ளார்.

இருவருக்கிடையில் ஏற்பட்ட முறுகல் முற்றி இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னத்தம்பி வீதி - தளவாயை சேர்ந்த 38 வயதான ஒருவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தப்பிச்சென்றுள்ளதுடன், அவரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கறவை மாடுகள் திருட்டு: விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 16

கறவை மாடுகள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் இருந்து பல முறைப்பாடுகள் பதிவாகியுள்ளமை தொடர்பாக விவசாய அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கறவை மாடுகளை திருடி இறைச்சிக்காக படுகொலை செய்யும் கும்பல் பற்றிய தகவல் வெளியாகியுள்ளதுடன், கறவை மாடுகள் திருடப்படுவதும் அதிகரித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் மாகாண மற்றும் மாவட்ட விவசாய அதிகாரிகள் அமைச்சரிடம் இந்த விடயத்தை முன்வைத்துள்ளனர்.

இதனால் கறவை மாடுகளை பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு கமெராக்கள் மற்றும் சங்கிலிகளை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என விவசாய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாளொன்றுக்கு 20 முதல் 30 லீற்றர் வரை பால் கறக்கக்கூடிய கறவை மாடுகள் இவ்வாறு திருடப்பட்டுள்ள நிலையில் மாடு திருடியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.(அ)

# 97 பில்லியன் டொலர் பற்றாக்குறை!

கொழும்பு, ஏப்.16

2030ஆம் ஆண்டு இலங்கை உட்பட உலக நாடுகளின் கல்வி இலக்குகளை எட்டுவதற்கு 97 பில்லியன் டொலர்கள் பற்றாக்குறையாக உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

2030 ஆம் ஆண்டில் அனைவருக்கும் நியாயமான மற்றும் தரமான கல்வியை வழங்குவதே ஐக்கிய நாடுகள் சபையின் 4 ஆவது இலக்கு என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யுனெஸ்கோ இதற்கு 3 டிரில்லியன் டொலர் நிதி தேவை என்று மதிப்பிட்டுள்ளது.

கிழக்கு மற்றும் தெற்காசியா நாடுகளில் கல்வித் தரம் குறைவாக இருந்த போதிலும் இலங்கை முன்னணியில் இருப்பதாக அந்த அமைப்பு கூறுகிறது.

2030ஆம் ஆண்டில் இலங்கையின் இடைநிலைக் கல்வி நிலை 81 சதவீதமாக இருக்கும் என்றும் அந்த அமைப்பின் அறிக்கைகள் கூறுகின்றன.

மத்திய, கிழக்கு, தெற்கு மற்றும் மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில், இடைநிலைக் கல்விக்குத் தகுதியானவர்களில் 60 வீதம் பேர் பாடசாலைக்கு செல்வதில்லை.இருபது சத வீதம் பேர் ஆரம்பக் கல்வியைப் பெறவில்லை.

அதற்காக 70 பில்லியன் டொலர்கள் ஒதுக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது. (அ)

# கடும் காற்றினால் 14 வீடுகள் சேதம்!



கொழும்பு, ஏப். 16

லிந்துலை - அவரப்பத்தனையில் நேற்று பிற்பகல் வீசிய கடும் காற்று காரணமாக 14 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த அனர்த்தத்தினால் 3 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் சுமார் 70 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உணவு உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கான வசதிகளை செய்துகொடுக்க பொது மக்களும் தோட்ட நிர்வாகமும் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# சீதுவையில் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி!

கொழும்பு, ஏப். 16

சீதுவை - ராஜபக்ஷபுர பகுதியில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் வலுப்பெற்றதை அடுத்து, துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது, 45 வயதான ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த கொலை தொடர்பில் ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாய் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

# தமிழகத்தில் மீன்பிடி தடை

சென்னை, ஏப். 16

தமிழகத்தில் நேற்று முதல் மீன்பிடி தடைக்காலம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 14 ஆம் திகதி வரை 61 நாட்களுக்கு மீன்பிடி தடைக்காலம் அமுலில் இருக்கும் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிணங்க, 61 நாட்களுக்கு மீன்பிடிக்க தமிழக அரசு தடை விதித்துள்ளது.

கடலில் மீன்களின் இனப்பெருக்கத்திற்காக மீன்பிடி தடைக்காலம் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கிழக்கு மற்றும் மேற்கு கடற்பிராந்தியங்களில் மீன்கள் இனப்பெருக்க காலமாக குறிப்பிட்ட நாட்கள் கருதப்படுகிறது.

இந்த காலகட்டத்தில் கடலில் மீன்பிடிக்க செல்ல எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.(அ)

# அடுத்த ஜனாதிபதி தேர்தலும்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இணையப் போவதில்லை என்று கூறியிருக்கும் அதன் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார முதலில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பிரேமதாச காப்பாற்றிக் கொள்வதில் அக்கறை காட்ட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பிரேமதாசவின் தலைமைத்துவப் பாணியில் விரக்தியடைந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒரு குழுவினர் அரசாங்கத்தில் இணைந்து விக்கிரமசிங்கவின் பொருளாதார மீட்சி திட்டங்களுக்கு ஆதரவு அளிக்க தயாராவதாக கூறப்படுகின்ற அதேவேளை அவர்களை தன்னுடன் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு அவர் கடுமையான பிரயத்தனங்களை செய்யவேண்டியிருக்கின்ற சூழ்நிலையில் இத்தகைய எதிரெதிர் அறிக்கைகள் வெளியாகிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தனது கட்சியை மீண்டும் கட்டியெழுப்புவதில் இருக்கக்கூடிய சவால்களை விக்கிரமசிங்க நன்கு அறிவார்.

அதனால் அவர் பொருளாதார மீட்சிக்கு தனது நிருவாகம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் நாளடைவில் பல அரசியல் சக்திகளினதும் மக்களினதும் ஆதரவை தனக்கு பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில், ஜனாதி பதி தேர்தலில் தான் வெற்றி பெறுவதற்கான வியூகங்களை வகுப்பதிலேயே குறிப்பாக கவனம் செலுத்துகிறார்.

மக்கள் கிளர்ச்சியின் விளைவான நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கிய ராஜபக்சாக்கள் ஜனாதிபதி தேர்தலில் அவரை ஆதரிப்பார்களா என்பது முக்கியமான கேள்வி. தங்களது ஜனாதிபதி வேட்பாளரை விரைவில் அறிவிப்பது குறித்த பொதுஜன பெரமுன முக்கியஸ்தர்களின் பேச்சுக்கள் விக்கிரமசிங்கவுடன் கடுமையான ஒரு பேரத்துக்கான முஸ்தீபுகள் போன்று தெரிகிறது. •

## இலங்கை...

எட்டுவது குறித்து இதன்போது அவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

“இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும்“ என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பரஸ்பர நலன்கள் மற்றும் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான அமெரிக்காவின் அர்ப்பணிப்பு மற்றும் சீர்திருத்தச் செயற்பாடுகள் குறித்து இருவரும் கலந்துரையாடியதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சேமசிங்க உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் 2023 வசந்த காலக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக வாஷிங்டனுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நிதியுதவியை...

கடனுதவி வழங்குவதில் இந்தியா வழங்கிய பங்களிப் பிற்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர் பில் ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுக ளின் எதிர்காலத் திட்டம் தொடர்பில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் மாநாடு நேற்று முன் தினம் இடம்பெற்றது. (அ)

## தமிழகத்துக்கு...

இடம்பெறும் ஓர் இந்தியரின் கடவுச் சீட்டு நீதிமன்ற தடுப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீதிமன்றத் தடுப்பில் உள்ள இந்தியப் பிரஜை குருநாகலைச் சேர்ந்த ஒருவரின் உதவியுடன் மன்னார் வந்துள்ளார்.

இவ்வாறு மன்னாரில் இருந்து படகு மூலம் தமிழ் நாட்டுக்குத் தப்பிச் செல்ல முற்பட்டதை அடுத்து அவரை இராணுவத்தினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தமிழ்நாடு இளையார்குடியைச் சேர்ந்த 38 வயதுடையவரும், இலங்கையின் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## காணாமல்...

உறவு களுக்கான நீதி கிடைக்கப் பெறாமலேயே உயிரிழந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## புதிய...

மீதான கட்டுப் பாடுகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளதாக சம்மேளனம் வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

சர்வதேச ஊடகவிய லாளர்களின் சம்மேளனத் துடன் இணைந்து இலங்கையில் செயற் படும், இலங்கை உழைக்கும்

ஊடகவியலாளர்கள் சங்கம், ஊடகவியலாளர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு, சுதந்திர ஊடக இயக்கம் ஆகியனவும் பயங்கர வாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு கூட் டாக எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

உத்தேச சட்டமூலத்தை மீள பெறுமாறும் அந்த அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின், அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள், ஊடக பணியாளர்கள், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கங்கள், அமைப்புகள் சட்டரீதியான துன்புறுத்தலுக்கு முகங்கொடுக்க நேரிடும் என சர்வதேச ஊடகவியலாளர்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

(அ)

## யாழ்ப்பாண...

யாழ்ப்பாண மாவட்டத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்து செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

மேற்கத்தைய உணவு முறைகள், வெதுப்பக உணவுகள், மற்றும் அதிகளவு மாப்பொருட்களை கொண்ட உணவு முறைகள் காரணமாகவே நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் அவர் கூறினார்.

எமது முன்னோர்கள் பாரம்பரிய உணவுகளை உட்கொண்டதாலேயே நீரிழிவு போன்ற நோய்களிலிருந்து தப்பித்துக்கொண்டதாகவும் யாழ். நீரிழிவு கழகத்தின் கழகத்தின் தலைவர் இ.மைக்கல் தெரிவித்தார். (அ)

## நாகபூசணி...

பண்ணை சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நாகபூசனி அம்மன் சிலைக்கு தமிழ் புதுவருடப் பிறப்பில் பால் அபிசேகம் உருத்திர சேனை அமைப்பினால் செய்யப்பட்டது.

இந்த நிலையில் உருத்திர சேனை அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு 3 மணிநேரம் தீவிர விசாரைணக்கு உள்படுத்தப்பட்டனர்.

உருவச் சிலையை அமைத்தவர்கள் தொடர்பில் தமக்கு தகவல் தெரியாது என்றும் தாம் பால் அபிசேகம் செய்ததாகவும் உருத்திர சேனை அமைப்பினர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

எந்தவொரு அனுமதியுமின்றி அமைக்கப்பட்ட நாகபூசனி அம்மனின் சிலையை அகற்ற தீவிர நடவடிக்கையில் யாழ்ப்பாணம் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, குறிகாட்டுவான் இறங்குதுறையில் வைக்கப்பட்டு மறைக்கப்பட்டிருந்த அரச மரத்தை கடற்படையினர் திறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## வெளிநாடு...

ஆவது காலால் படை ஆகியன இணைந்து யாழ். துரைப்பா விளையாட்டு அரங்கில் நேற்று சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்த புதுவருட விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டபோது, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும்போதே ஜீவன் தியாகராஜா இதனை தெரிவித்தார்.

வடக்கில் 700 ஏக்கர் நிலம் சீனாவுக்கு வழங்கப்பட உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்த கருத்து தொடர்பில் பதில் அளித்த ஆளுநர்,

சிறிதரனின் கருத்தை நான் அறியாத நிலையில் அவருடைய கருத்துத் தொடர்பில் பதில் கூற முடியாது.

அரசாங்கத்தை பொறுத்தவரை நாட்டை பொருளாதார நிதியில் முன்னேற்றுவதற்கான தேவைப்பாடுகள் இருக்கும் நிலையில் முதலீட்டாளர்களுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து பல முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பும் நிலையில் அவர்களின் சரியான திட்டங்களுக்கு அரசாங்கம் வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுக்கிறது.

வடக்கில் முதலீடு செய்வதற்காக தற்போதைய சூழ்நிலையில் யாரும் விண்ணப்பித்துள்ளார்களா என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது.

அவ்வாறு விண்ணப்பித்திருந்தால் அவர்களுக்கு தேவையான காணிகளை இனம் கண்டு கொடுப்பதற்கு மாவட்ட செயலகம் மற்றும் மாகாண காணித் திணைக்களம் அதற்கான பணிகளைச் செய்வார்கள்.

ஆகவே அரசாங்கம் காணி வழங்குவதாயின் நாடுகளுக்கு காணிகளை வழங்குவதில்லை நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களுக்கே காணிகளை வழங்குகிறோம் - என்றார். (அ)

# 5 பில்லியன் ரூபாய் வீட்டுக்கடன்!

கொழும்பு, ஏப். 16

சுமார் 5 பில்லியன் ரூபா வீட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

பணவீக்கம் மற்றும் பொருளாதார நிலைமையால், மக்கள் வீட்டுக் கடனை மீள செலுத்துவதை தவிர்த்துள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ சூரிய ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தற்போது மாவட்ட முகாமையாளர்கள் ஊடாக, கடனை மீள அற விடும் பணிகள் முன்னெடுக் கப்படுகின்றன.

மாதம் ஒன்றுக்கு 400 மில்லியன் ரூபாய் கடனை அறவிடக் கூடிய நிலைமை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, மீளவும் கடனை வழங்கக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

எவ்வாறாயினும், அரசாங் கத்தினால் பாதீட்டில் ஒதுக்கி டப்பட்ட சுமார் 3 ஆயிரத்து 750 மில்லியன் ரூபாய் நிதி திறைசேரியால், வீடமைப்பு அதிகார சபைக்கு விடுவிக்கப் படவில்லை.

இதன் காரணமாக, எதிர் காலத்தில் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் பிரச்சினை உள்ளது.

98 ஆயிரம் வீடுகள், வெவ் வேறு கட்டங்களில் வழங்கப் பட்டுள்ள நிலையில், அவற்றை முழுமைப்படுத்துவதற்காக, 24 ஆயிரம் மில்லியன் ரூபாய் அவசியமாகும்.

இதனை முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையிலே செயற்படுத்த வேண்டியுள்ளது.

இதற்கமைய, பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடு களை அடையாளம் கண்டு, அவற்றின் எஞ்சிய பணிகளை விரைவில் முடிவுக்கு கொண்டு வர எதிர்பார்ப்பதாக, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ சூரிய ஆராச்சி தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கை குரங்குகள் சீனாவுக்கு கடத்தல்!

கொழும்பு, ஏப். 16

இலங்கையின் குரங்குகளை சீனாவுக்கு வழங்கியதன் பின்னணியில் கோடிக்கணக்கான கடத்தல் இருப்பதாக சுரக்கிமு சிறிலங்கா தேசிய இயக்கத்தின் வணக்கத்திற்குரிய பஹியங்கல ஆனந்த சாகர தேரர் தெரிவித்தார்.

ஒரு இலட்சம் குரங்குகளை வெளிநாடுகளில் உள்ள மிருகக்காட்சிசாலைகளுக்கு அனுப்புவது இந்நாட்களில் மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாக இருப்பது குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் ஏனைய அமைச்சின் அதிகாரிகளால் எடுக்கப்படும் இவ்வாறான தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு இலங்கை மக்கள் சீனர்கள் இல்லை என



அவர் தெரிவித்தார்.

உயிரியல் ஆராய்ச்சிக்காக குரங்குகள் இலங்கைக்கு வெளியே அழைத்துச் செல்லப்படுவதாகவும், இந்த முடிவை மாற்றிக்கொள்ள எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க விருப்பதாகவும் பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் மேலும் தெரிவித்தார். (அ)

## கனடாவில்...

நட்பு ரீதியான கட்டளையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக சந்தேகநபர்களினால் வாக்குமூலம் வழங்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 32 மற்றும் 24 வயதுடைய இருவரே நேற்ன்று கைது செய்யப் பட்டனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி அனலை தீவில் வீடு புகுந்த வன் முறைக் கும்பல் அங்கு வசித்த வயோதிபர்கள் இருவர் மற்றும் ஆசிரியர் உள்ளிட்ட மூவரை கடு மையாகத் தாக்கி 4 பெறுமதியான அலைபேசிகள் மற்றும் 4 வளையல்கள் உள்ளிட்ட 13 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளை யிட்டது.

சம்பவத்தில் கனடாவில் வசிக்கும் அனலைதீவைச் சேர்ந்த நாகலிங்கம் சுப்ரமணியம் (குருசாமி வயது 75) என்பவர் கால்கள் அடித்து முறிக் கப்பட்டு படுகாயமடைந்தார். அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று கனடா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத்தின் உத்தரவில் யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான மாவட்ட குற்றத்தப்படுப்புப் பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

விசாரணைகளின் அடிப்படையில் கடந்த மாதம் அரியாலை பூம்புகாரைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளில் பருத்தித்துறையைச் சேர்ந்த 32 வயதுடைய முதன்மைச் சந்தேக நபர் மற்றும் 24 வயதுடையவர் என இருவர் கைது செய்யப்பட்டனர்.

கனடாவில் உள்ள ஒருவர் இந்தியாவில் வசிக்கும் ஒருவர் ஊடாக ஒருங்கிணைத்து இந்த தாக்குதலை திட்டமிட்டதாக முதன்மைச் சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

“இந்தியாவில் வசித்த வரதன் என்பவர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்து விட்டார். அதனால் திட்டமிட்டபடி எதுவுமே செய்ய முடியவில்லை. வேலணைக்குச் சென்று மீன்பிடிப் படகை வாடகைக்கு அமர்த்தி அனலைதீவு சென்று தாக்குதல் நடத்தினோம். நகைகள் மற்றும் அலைபேசிகளை எடுத்துக்கொண்டு தப்பி வந்துவிட்டோம்” என்று முதன்மைச் சந்தேக நபர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் இருவரிடமிருந்தும் கொள்ளையிடப்பட்ட தங்க வளையல்கள் மற்றும் மோதிரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இன்று முற்படுத்தப்படவுள்ளனர். (அ-03)

ஈழநாடு
Eelanadu

# கொரோனா நடைமுறைகளை கட்டாயமாகப் பின்பற்றுங்கள்

## யாழ். மக்களிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ்ப்பாணத்தில் மீண்டும் கொரோனா தொற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் அதனை தடுப்பதற்கான வழிமுறைகளை பின்பற்றுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் யமுனானந்தா தெரிவித்தார்.

கொரோனா நிலைமை தொடர்பில் வினவியவேளை அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

மீண்டும் கொரோனாவின் தாக்கம் அதிகரித்துள்ளதால் மக்கள் கடந்த காலங்களில் பின்பற்றிய நடைமுறைகளை இனிமேலும் பின்பற்றுங்கள். நேற்றும் மூவர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

எனவே வெளியே செல்லும் போது முகக் கவசங்களை அணிவதை கடைப்பிடியுங்கள். தனிநபர் இடைவெளியை பேணுங்கள். சவர்க்காரமிட்டு கைகளை சுத்தமாக கழுவுங்கள். அநாவசியமாக கை குலுக்குவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். இயன்ற அளவு கூட்டமாக ஒன்று சேர்வதை தவிருங்கள்.

இதுபோன்ற செயற்பாடுகளில் தான் மீண்டும் ஒரு கொரோனா பேரலை ஏற்படாது தவிர்க்க முடியும். முன்பு போன்ற நிலை ஏற்படாது தவிர்க்க அனைவரும் மிகவும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் - என்றார். (அ)

# 21ஆம் திகதி கொழும்பு முற்றுகை!

கொழும்பு, ஏப். 16

அரசாங்கத்திற்கு எதிராக அனைத்து அரசியல் கட்சிகளும் இணைந்து எதிர்வரும் 19 ஆம் திகதி மாபெரும் பேரணி ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக நாட்டின் மிக முக்கியமான 5 இடங்களில் பேரணி முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்து நடத்தும் இந்த பேரணி எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பை வந்தடையும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டையே ஆட்டிப்படைக்கும் வகையில் பல உண்மைகள் வெளியாகும் எனவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், இனவாத நடவடிக்கைகள் என்பவற்றின் பின்னணி தொடர்பிலும் பல தகவல்கள் வெளியாகும் என்று ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்திருந்தார்.

எதிர்க்கட்சி என்ற வகையில் தாம் பலமாகவுள்ளதாகவும் 21ம் திகதி கொழும்பை ஆக்கிரமிக்கவுள்ளதாக ரஞ்சித் மத்துமபண்டார மேலும் தெரிவித்தார். (அ)

# 13 ஐ நடைமுறைப்படுத்துவோம்!

## கூறுகின்றார் வெளியுறவு அமைச்சர்

கொழும்பு, ஏப். 16

மூன்று கட்டங்கள் ஊடாக தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப அமைச்சரவை உப குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தில் ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இணக்கப்பாட்டுக்கு வருவதே குழுவின் முதற்கட்ட நடவடிக்கை.

தொடர்ந்து அனைத்துத் தரப்பினருடனும் கலந்தாலோசித்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேச தரத்துக்கு ஏற்ப கொண்டு வருவது இரண்டாவது நடவடிக்கை.

இதேநேரம் பொறுப்புக்கூறல் நடவடிக்கைக்காக உண்மையைக் கண்டறியும் உள்ளகப் பொறிமுறையை நிறுவுவது உபகுழுவின் மூன்றாவது நடவடிக்கை.

இன நல்லிணக்கச் செயற்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கி, நீண்டகாலப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை வழங்கி அதனூடாக அபிவிருத்தி அடைவதே ஜனாதிபதியின் நோக்கம் - என்றார். (அ)

# அனைத்து பல்கலை மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் புத்தாண்டு கலை கலாசார விழா

முல்லைத்தீவு, ஏப். 16

சித்திரைப்புத்தாண்டு கலை கலா சார நிகழ்வு ஒன்று முல்லைத்தீவு பிரதேசசபை மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அனைத் துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலேயே இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் தமிழர் பாரம்பரிய முறைப்படி விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல், விருந்தினர்களின் உரை என்பன இடம்பெற்றன. தொடர்ந்து கலை கலாசார விளையாட்டுப்போட்டிகள் இடம்பெற்றன.

கோலம்போடுதல், முட்டியுடைத்தல், சறுக்குமரம் ஏறுதல், தலையணைச் சண்டை, கயிறு இழுத்தல் உள்ளிட்ட விளையாட்டுப்போட்டிகள் சிறப்பாக இடம் பெற்றன.

குறித்த போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்களுக்கு இதன்போது பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் , முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரபல சட்டத்தரணிகளில் ஒருவரான சட்டத்தரணி வி.எஸ்.எஸ்.தனஞ்சயன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், இந்து மதக் குருக்கள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)





# கார், கப், மோட்டார் சைக்கிள் மோதி விபத்து: 10 பேர் காயம்!

கொழும்பு, ஏப். 16

எம்பிலிப்பிட்டிய -இரத்தினபுரி பிரதான வீதியில் 100ஆம் கட்டை பகுதியில் கார், கப், மோட்டார் சைக்கிள் ஆகியன மோதிய விபத்தில், 10 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்கள் சிகிச்சைக்காக எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரியில் இருந்து எம்பிலிப்பிட்டிய நோக்கி பயணித்த காரும், எம்பிலிப்பிட்டியவில் இருந்து இரத்தினபுரி நோக்கி பயணித்த கப் ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதை அடுத்து வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் கப் மீது மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தை அடுத்து கப் ரக வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர். (அ)

# மகனால் தாக்கப்பட்ட தந்தை உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 16

பதுளை-கந்தகொல்ல பகுதியில் மகனால் தாக்கப்பட்ட தந்தை ஒருவர் உயிரிழந்தார்.

மதுபோதையில் தமது மனைவியை மண்வெட்டியால், தாக்குவதற்கு முற்பட்ட தந்தையை, அவரது மகன் போத்தல் ஒன்றினால் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் காயமடைந்த தந்தை, பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 56 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# மக்களை மிதிக்கும் அரசுக்கு எதிராக ஒன்றாக எழுவோம்!

## சஜித் அழைப்பு



கொழும்பு, ஏப். 16

"மக்களின் ஜனநாயக உரிமைகள், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. அரசின் இந்தக் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகப் போராட இன, மத, சாதி பேதமின்றி சிவில் அமைப்புக்களும், பிரஜைகளும் ஒன்றாக அணிதிரள வேண்டும்."

-இவ்வாறு அறைகூவல் விடுத்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்குப் பயந்த, மக்கள் அபிப்பிராயத்தை ஊசலாட்டும் திறமையற்ற தற்போதைய அரசு 24 மணி நேரமும் 365 நாட்களுமாகத் தேர்தலை நடத்தவிடாமல் தடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசு தேர்தலை எதிர்கொள்ளும் அச்சத்தால் தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை வழங்காமல் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அழுத்தங்களைப் பிரயோகித்தும் தேர்தலைச் சீர்குலைக்க முயற்சிக்கின்றது.

அவ்வாறே, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஒலிபரப்பு அதிகார சபைச் சட்டம் போன்ற சட்டங்களின் ஊடாக மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்தி மக்களை அடக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் கீழ், ஊடகங்களை அடக்கி, மக்கள் தங்கள் உரிமைகளுக்காக முன்நிற்கும் போது அவர்களைப் பயங்கரவாதிகள் என்று அழைத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளைக் கூட மீறும் வகையில் அரசு செயற்படுகின்றது." - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.